VISIT…



கானமழை நீ எனக்கு

1

அழகிய மெல்லிய விரல்கள், மடிமீது சாத்தியிருந்த வீணை யின் தந்திகளைத் தன் போக்கில் மெல்ல மீட்ட, அதில் எழுந்த இனிய சீங்காரம் அறையை நிரப்ப, யோசனையில் ஆழ்ந்திருந் தாள் பாரதி.

சிந்தனையில் சுற்றுப்புறம் மறந்து இலக்கற்று வெளியை வெறித்தபடி அமர்ந்திருந்த நிலையிலும் மகளின் அழகை ரசித்த வாறு சற்று நேரம் அறை வாயிலிலேயே நின்றாள் சரஸ்வதி.

தம்பூரா போலச் சும்மா மீட்டுவது தவிர, மகளின் மோன நிலை கலைவதாக இல்லை என்று நிச்சயப்பட்டு விடவும் பாரதி யின் அருகே சென்று, ''என்னடா பாரதி, இன்றைய கச்சேரிக்கு வாசிக்க வேண்டிய எல்லாம் வரிசைப்படுத்திக் கொண்டு விட் டாயா? போன வாரக்கச்சேரியில் தோடி வர்ணம் வாசித்தாய், மறக்கவில்லைதானே. இன்றைக்கு... சங்கராபரணத்தில் 'கருணை செய்..திட.. வாசிக்கிறாயா? அடுத்து...'' என்றவள் மகள் சும்மா உச்சக்கொட்டவும் வியந்து, ''என்னம்மா?'' என்று விசாரித்தாள்.

''ஒன்...றுமில்லயம்மா'' என்று அலுப்புடன் கூறி வீணையை நகர்த்தி வைத்தாள் பாரதி.

''என்னம்மா, சாதகம் செய்யவில்லை?''

''என்ன சாதகம் செய்து என்ன, அம்மா? கச்சேரிக்குக் கச்சேரி வித்தியாசமாகத் தெரியவேண்டும் என்று கடவுள் வாழ்த்தி லிருந்து மங்களம் வரை மாற்றித் திட்டமிட்டு, ஸ்வர சுத்தமாகச் சாதகம் செய்து கஷ்டப்பட்டு வாசிக்கிறோமே, யாராவது முழு ஈடுபாட்டுடன் கேட்கிறார்களா? சபாக்களிலாவது பரவாயில்லை, பத்துக்கு இரண்டு பேராவது ரசித்துக் கேட்கிறார்கள். இந்த மாதிரித் தனியார் நிகழ்ச்சிகள் என்றால் எனக்கு வெறுப்பாக இருக்கிறதம் மா'' என்று உரைத்த வண்ணம் வீணையை உறையிலிட்டு, கயிறுகளைக் கவனத்துடன் கட்டினாள் பாரதி.

''மற்றவர்கள் ரசிக்கிறார்களோ இல்லையோ? வாசிக்கிற உனக்கு ஆத்ம திருப்தி இருக்கிறது. ரசித்துக் கேட்கவும் உன் அப்பாவும் நானுமாய் இரண்டு ரசிகப் பெருமக்கள் எப்போதும் இருக்கிறோம்'' என்றாள் சரஸ்வதி.

''கரெக்ட். உன் அம்மா சொன்னதில் ஒரு வார்த்தையை யாராலும் மறுக்க முடியாது. பெருமக்கள் என்றால் மெய்யாகவே உப்...தான்'' என்று பருமன் என்பதாகக் கைகளால் அபிநயித்தபடி கங்காதரன் உள்ளே வரவும் இரு பெண்களும் கலகலத்து நகைத்த னர்.

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, ''அப்படியிருக்கையில் மற்ற யார் ரசித்தாலும் ரசிக்காவிட்டாலும் உனக்கு என்ன பாரதி?'' என்று கேட்டார் பெற்றவர்.

''அதெப்படி அப்பா?'' என்று மறுப்புக்குரலில் ஆட்சேபித் தாள் மகள். ''சுகமாய் ஸஞ்சார சஞ்சாரம் செய்து கொண்டு இருக்கும்போது, கஷ்டப்பட்டு நிரவல் செய்யும் சமயம், ஊர்ப் பட்ட பேச்சு காதில் விழுந்தால் மேலே தொடர்ந்து வாசிப்பது எவ்வளவு சிரமமாக இருக்கிறது, தெரியுமாப்பா? பேசாமல் வெளியே கச்சேரி செய்வதையே நிறுத்தி விடலாமா என்று நினைக்கிறேன் அப்பா'' என்றபடி வீணையைத் தூக்கிச் சென்று அதற்குரிய பீடத்தில் வைத்தாள் பாரதி.

தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''நிறுத்தி? உன் திறமையைக் குடத்தில் இட்டு மூடிவிடப் போகிறாயா? அது குன்றின் மேல் தீபமாய் ஜொலிக்க உன் அம்மாவும் நானும் எவ்வளவு பாடுபட்டிருப்போம்? பாரதி, இன்றைக்கு வீணையில் பெரிய ஆர்ட்டிஸ்ட் நீதான். புகழின் உச்சத்தில் இருக்கிறாய். நீ வைப்பதுதான் 'ரேட்'. இந்தச் சமயத் தைப் பயன்படுத்தி நாலு காசு சம்பாதிக்க வேண்டாம். சும்மா தேங்காய் மூடிக் கச்சேரிக்கா வாசிக்கச் சொல்கிறார்கள்?''

வியப்பும் கோபமுமாகத் தந்தையை ஏறிட்டாள் மகள். ''இவ்வளவு அரும்பாடுபட்டு கற்ற கலையைப் பணத்திற்காக விற்கச் சொல்லுகிறீர்களா, அப்பா? அதுவும் நீங்களா?''

''ஷ். பாரதி'' என்று குறுக்கிட்டாள் சரஸ்வதி. ''பேசத் தெரியும் என்று என்ன வேண்டுமானாலும் பேசுவதா? அப்பாவி டம் மரியாதை வேண்டாமா?''

பேச்சை நிறுத்தி இதழ்களை இறுக மூடிக் கொண்ட போதும், மகளின் கண்களில் கோபம் குமுறுவதைக் கண்டு ''பாரதி, உன்னுடைய கலையே வேறுவிதம். இதே, நாட்டியம் என்றால் கவர்ச்சி என்கிற பெயரில் ஆபாசமாக ஆடலாம். பாட்டில்கூட கண்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி, அதற்கேற்ப உடலை ஆட்டிப் பாடலாம். ஆனால் இது... இதில் இதெல்லாம் முடியாது. ஆனால் இது தெய்வீகமான கலை அம்மா. வீணையைப் பார்க்கும் போதே கலைமகளின் நினைவுதானே வருகிறது. மட்டரக 'கிக்' வேண்டும் என்பவர்கள் வீணைக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யமாட் டார்கள். அதுவும் இவ்வளவு பணம் கொடுத்து தரமான ஓர் இசை விருந்தைத் தானே ரசிக்கும் ஆவலும், தான் ஏற்பாடு செய்யும் விழாவுக்கு வருகிறவர்கள் ரசிப்பார்கள் என்கிற நம்பிக்கையும் இல்லாதவர்கள் இந்தக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்வார்களா? சொல்லு. அதனால் ஒட்டு மொத்தமாய் ஒருவரும் ரசிப்பது இல்லை என்று ஒதுக்கக் கூடாதம்மா'' என்று இதமான குரலில் எடுத்துரைத்தார் கங்காதரன்.

சற்று யோசித்துவிட்டு, ''ஒரேயடியாக அப்படியும் சொல்லி விட முடியாது அப்பா. நீங்களே சொன்னது போல வீணையில் பெரிய 'ஆர்டிஸ்ட்'டின் கச்சேரி வைத்தேன் என்று ஐம்பம் அடிக்கக்கூட என் கச்சேரியை வைக்கலாமே!'' என்றாள் பாரதி.

மீண்டும் தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதைக் கவனித்த மகள் சட்டென இளகிப் போனாள். அவளுக்கு எப்போதுமே அவளுடைய பெற்றோரிடம் இது பிடிக்கும். எப்போதும் ஒருவருக்கொருவர் இசைந்து நடப்பதும், திடுமெனப் பிரச்சினைகள் எழும்போதும் ஒருவர் முகத்திலிருந்து அவர் கருத்தை அறிந்து அதற்கேற்ப அடுத்தவர் செயல்படுவதும் காண, கவனிக்க அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

ஒவ்வொரு சமயம் உடன் பயின்ற தோழிகள், 'என் அம்மா வுக்கும் அப்பாவுக்கும் பெரீ...ய்ய சண்டை' என்று கூறும்போது அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும். அப்பாவும் அம்மாவும் எப்படிச் சண்டை போடுவார்கள்?

வளரவளர, உலக விவரம் புரியத் தொடங்கிய பிறகு பெற்றோரைப் பற்றிப் பெருமையாக உணர்ந்தாள். அம்மாவுக்கு அமைந்தது போல ஒத்த கருத்து உடைய கணவன் அவளுக்கும் கிடைத்தால்... என்றோர் எண்ணமும் தோன்றியதுண்டு.

கங்காதரன், சரஸ்வதி இருவருமே கலை ஆர்வம் உடையவர் கள். தவமிருந்து பெற்ற மகளுக்கு ஏதாவது ஒரு கலையைச் சிறப்பாகக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அவள் பிறந்த அன்றே முடிவு செய்து விட்டனர்.

'பாதம் பத்தாண்டே' என்பதற்கிணங்க, உடல்வாகும் இள மையும் மறைகையில் நாட்டியமும் பெரும்பாலும் ஒய்ந்து விடும் என்று எண்ணி அதை விடுத்தனர். ஓர் ஐஸ்கீரிம் சாப்பிட்டுத் தொண்டை கமறினால் பாட்டு போயிற்று என்று வாய்பாட்டையும் ஒதுக்கினர். ஒவ்வொன்றாக ஒதுக்கி இருவர் மனமும் வீணையில் வந்து நிலைத்தது.

வீணையின் கடைசி 'மெட்டு' கையெட்டுகிற நாள் வந்ததுமே அத்தியாப்பியாசம் ஆரம்பம் ஆயிற்று.

இருவரும் கொடுத்த ஊக்கமும், இயல்பாக இருந்த பிறவித் திறமையுமாக பாரதியும் ஜொலித்தாள். 'கை வழி நயனம் செல்ல' வாசிப்பது வீணை என்பார்கள். ஆனால் இருட்டிலும் தடைப்ப டாது வாசிக்கும் அளவுக்கு வீணை, பாரதியின் இன்னோர் அங்கமாகவே ஆயிற்று.

பெயரும் புகழும் குவிந்தன. பணமும்தான். இந்த நிலையில் தான் பாரதியின் மனம் சலிக்கத் தொடங்கியது. அருமை அறியாத வர்கள் முன்னிலையில் வாசித்து எவ்வளவு நாள் அவளது அருங்கலையை வீணாக்குவது? மனம் ஒவ்வாத ஒன்றை நிறுத்தி விட்டால் என்ன?

அவளது கலையின் மூலம் வந்த பணத்தைக் கண்டு மகிழ்ந்த போதும் பாரதியுடைய பெற்றோர் பணவெறி பிடித்தவர்கள் அல்ல. அவளாக விரும்பி ஏதாவது வாங்குவது தவிர, அவளது பணம் அவள் பெயரிலேயே 'பாங்கி'ல் டெப்பாசிட் ஆவது அவளுக்குத் தெரிந்த விஷயமே.

எனவே தன் சொல்லுக்கு மறுப்பிராது என்று நம்பித்தான் பாரதி தன் எண்ணத்தை வெளியிட்டதே. எதிர்பாராத விதமாகத் தந்தை வேறு விதமாய்ப் பேசவும் திகைத்தாள்.

ஆனால் மனம் இளகி விட்ட நிலையில் ஒரேயடியாக மறுத்துப் பேசவும் முடியாமல், கூடவே பிடிக்காததைச் செய்ய மனமும் வராமல் மவுனம் சாதித்தாள்.

அந்த மவுனத்துக்கு மதிப்பிருந்தது.

''இங்கே வந்து உட்காரம்மா'' என்று மகளை அமரச் செய்து, தானும் அமர்ந்து பேசினார் கங்காதரன். ''அப்பாவும் அம்மாவும் பணத்துக்காகப் பார்க்கிறோம் என்று நினைத்தாயாடா? ஊகூம். புகழ். வீணை பாரதியின் தந்தை என்று பிறர் சொல்லக் கேட்கும் போது எவ்வளவு பெருமையாக உணர்வேன் தெரியுமா? நீ வாசிப்பதை நிறுத்தி விட்டால் நாலே மாதங்களில் வீணை பாரதி

என்று ஒருத்தி இருப்பதையே உலகம் மறந்துவிடும், கண்ணா...'' என்று நிறுத்தியவர் அப்போதும் மகள் பேசாமலே இருக்கவும் மேலும் இறங்கி வந்தார், ''அல்லது ஒன்று செய். சபாக் கச்சேரி களை எல்லாமே ஒத்துக் கொள். மற்றவைகளில் உனக்காக மனம் பிடித்தால் வாசி. அல்லது விட்டு விடு. சரிதானா?''

இதற்கு மேலும் பேசாதிருப்பது சரியல்ல என்று சின்னப் புன்னகையுடன் தலையாட்டினாள் மகள்.

தாயார் ஏதும் பேசவில்லை என்பதை உணர்ந்து அவளது தோளில் சலுகையாகச் சாய்ந்து, ''கோபமாம்மா?'' கொஞ்சலாகக் கேட்கவும் அந்த அம்மாளும் முகம் மலர்ந்து, ''சரியான முசுடு'' என்று மகளின் மூக்கைச் செல்லமாகப் பிடித்து ஆட்டிவிட்டு, கணவரைப் பின் தொடர்ந்தாள்.

எண்ணியது நிறைவேறிவிட்ட திருப்தியில், வீணையை எடுத்து, ஒரு 'காவடிச் சிந்தை' உற்சாகத்துடன் வாசித்து முடித்தாள் பாரதி.

அதன் பின்னர் வெளிக்கச்சேரிகளை வெகுவாகக் குறைத்துக் கொண்டாள் அவள். மெய்யாகவே இங்கே சங்கீதத்திற்கு மதிப்பி ருக்கும் என்று தோன்றிய வெகு சில இடங்களில் மட்டுமே வாசித்தாள். மற்ற அழைப்புகளை உறுதியோடு மறுத்தாள்.

இந்த நிலையில்தான் 'ஜீவா இன்டஸ்ட்ரீ'சின் ஒரு பெரும் தொழில் துறை வெற்றியைக் கொண்டாடும் வகையிலான விழா ஒன்றில் இசைமழை பொழியும்படி கேட்டு பாரதிக்கு ஒரு கடிதம் வந்தது. 'டெர்ம்ஸ் நேகோஷியபிள்' என்கிற பின் குறிப்புடன். கடிதத்தை அலட்சியமாக குப்பைக் கூடையுள் போடப் போனவள் சற்று யோசித்து, மேசை மேல் வைத்தாள். 'ஜீவா இன்டஸ்ட்ரீ'சின் தொழில் என்ன என்று கங்காதரனிடம் விசாரித்தாள். சாதாரண 'போல்ட் நட்'டில் தொடங்கி படிப்படியாக வளர்ந்து தொழிற் சாலை பாய்லர்கள் வரை பல்வேறு பொருட்களைத் தயாரிக்கிறார் கள் என்று தந்தை கூறவும், உச்சுக் கொட்டிவிட்டு மீண்டும் கடிதத்தை எடுத்துக் குப்பைக் கூடைக்குள் விசிறியடித்தாள்.

இரும்பு அடிப்பவனுக்கு இசையைப் பற்றி என்ன தெரியும்?

2

பாரதியைப் பொறுத்தவரையில் 'வர வசதிப்படாது' என்ற சுருக்கமான பதிலோடு ஜீவா இன்டஸ்ட்ரீசின் விஷயம் முடிந்தது என்ற எண்ணம்தான். மிஞ்சி மிஞ்சி இன்னொரு கடிதம், அல்லது டெலி:போன் மூலம் ஒரு வலியுறுத்தல் தொடரக்கூடும். இரண்டையும் மறுத்தால் அத்துடன் ஒய்ந்தது என்று நினைத்திருந்த வள், பெரிய பழக்கூடையும், வண்ண மலர் 'பொக்கே'யுமாக அந்த நிறவனத்தின் எம்.டி.யே வரக்கூடும் என்று சற்றும் எதிர் பார்க்கவில்லை.

என்னதான் மகள் புகழும் கூடவே பணமும் சம்பாதித்தாள் என்றாலும் கூட கங்காதரன் தன் வேலையை விட்டு விடவில்லை. தேவைப்படும் நேரங்களில் ஒரு தந்தையின் நிலையில் துணையாக இருப்பாரே தவிர மகள் வருமானத்தில் உண்ண நினைத்தவர் இல்லை அவர். எனவே பொதுவாக பாரதியின் கச்சேரி விவகாரங் களை அவளுடைய தாயார் சரஸ்வதிதான் பெரும்பாலும் கவனிப் பது.

அன்று யாரோ உறவினர் வீட்டுத் திருமணத்திற்கென சரஸ்வ தியும் சென்று விடவே 'ஜீவா இன்டஸ்ட்ரீசின்' எம்.டி. மிஸ்டர் ஜீவானந்தனிடம் பேசி சமாளித்து அனுப்பும் பொறுப்பு பாரதியு டையதாயிற்று.

கண்ணாடி தம்ளரில் ஏதேனும் பழச்சாறு கொண்டு வந்து கொடுக்கும்படி பணித்து விட்டு, விதியே என்று பெருமூச்சுடன் வரவேற்பறையை நோக்கி வேண்டா வெறுப்பாக நடந்தாள் பாரதி.

இந்தப் படிப்படியாக வளர்ந்தவர்கள் என்றாலே பெரிய போர். தன் முயற்சிகளில் வெற்றி கண்டு பழக்கப்பட்டு விட்டதால்,

தனக்கு மட்டும்தான் எல்லாம் தெரியும் என்று நினைத்து, சொன்னதையே சொல்லி அறுப்பார்கள். அம்மா, அப்பா இருந்தாலாவது ஏதோ, வயதில் கொஞ்சம் பெரியவர்கள் என்று வந்தவர்கள் நிலையிலேயே நின்று பேச முடியும். இப்போது நீ சின்னப் பெண். உனக்கு என்ன தெரியும் என்று வேறு வளவளப்பார்கள்... எண்ணமிட்டபடியே வரவேற்பறையினுள் சென்ற பாரதி சற்றுத் திகைத்தாள்.

'போல்ட் நட்'டிலிருந்து படிப்படியாகப் 'பாய்லர்' வரை வளர்ந்த மனிதர் இளைஞனாக இருக்கக்கூடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லையே! அத்தோடு அவன் கையில் இருந்த அழகிய மலர்க் கொத்தும் அவளுக்கு வியப்பையே அளித்தது.

இரும்படிக்கிற தொழிலில் சம்பாதிப்பவனுக்கு இப்படி ஒரு ரசனையா?!

ஆனால் செய்கிற தொழிலுக்கும் மனதின் ரசனைக்கும் தொடர்பு இருப்பது அவசியமில்லை என்று அவளுக்கு அப்போது தெரியாது.

நேயமான முறுவலோடு மலர்க்கொத்தை அவளிடம் நீட்டி, ''வணக்கம். என் பெயர் ஜீவானந்தம். நண்பர்களுக்கு ''ஜீவா'' என்று தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டான் அவன்.

நன்றி கூறி, பூச்செண்டை வாங்கி அருகிலிருந்த டீபாய் மேல் வைத்தவளை விழி அகலாது நோக்கி, ''ஊகூம். உங்கள் புகைப்படங்கள் உங்களுக்குச் சற்றும் நியாயம் செய்யவில்லை, மிஸ் பாரதி'' என்றான்.

ஐசா? அப்படியா என்று கேட்டு, ஆமாம், புகைப்படங்களில் பார்ப்பதை விட நேரில் அதிக அழகாக இருப்பதாக அவன் சொல்வதைக் கேட்டு உச்சி குளிர்ந்து, அந்தக் குளிர்ச்சியில் கச்சேரிக்கு ஒத்துக் கொள்ளுவாள் இந்த ஏமாளி என்று நினைத்தானா இவன்?

அவனது பேச்சு காதிலேயே விழாததுபோல, ''உட்காருங்கள்'' என்று கூறித் தானும் அமர்ந்தாள்.

அதற்குள் பழச்சாறு வந்துவிடவே, அதை அவன் முன்னே பணியாள் வைத்துச் செல்லவும், ''எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று உபசரித்தாள்.

''உங்களுக்கு?''

''நா...ன்... என்று அவள் பதிலைத் தேடுகையில், ''ஏன், குளிர்ச்சியாகக் குடிப்பதில்லையா? வாய்ப்பாட்டுக்காரர்கள் தானே, தொண்டை கமறக்கூடும் என்று குளிர்ச்சியாகக் குடிக்க மாட்டார்கள்? நீங்கள் வீணைதானே? அல்லது பாடுவதும் உண்டா?'' என்று கேள்விகளை அடுக்கினான் ஜீவானந்தன்.

ஆமாம். இந்த விவரமெல்லாம் சொல்லத்தான் காத்துக் கொண்டு கிடக்கிறேன் என்று உள்ளூரக் கடுத்தவள், ''இப்போது குடிக்கத் தோன்றவில்லை. அவ்வளவுதான்'' என்று அந்தப் பேச்சை முடித்து, ''உங்கள் கடிதத்திற்கு நான் ஏற்கெனவே பதில் எழுதிவிட்டேனே கிடைக்கவில்லை?'' என்றாள்.

கிடைத்ததும் மீண்டும் தொல்லை செய்ய வந்தியா என்ற கேள்வி குரலில் ஒலித்தது.

புரிந்து கொண்டவன் எரிச்சலையோ குழப்பத்தையோ காட்டாமல் முறுவலிக்கவும் அவள்தான் பார்வையைத் திருப்ப வேண்டியதாயிற்று. ''நிச்சயமாகக் கிடைத்தது. மிஸ் பாரதி. ஒரு சில விஷயங்கள் தெரிய வந்தால் உங்கள் முடிவு மாறும் என்றுதான் நேரிலேயே வந்தேன். முதலாவது பணம். நீங்கள் வழக்கமாக வாங்குவதற்கு இருமடங்கு தரவும் நான் தயார். அடுத்தது இந்த விழாவுக்கு நிறைய வெளிநாட்டவர்கள் வருவார்கள். உங்கள் புகழ் வெளிநாடுகளிலும் பரவும்.....''

''சாரி. அதிகப் பணமோ, வெளிநாட்டு வாய்ப்புகளோ எனக்குத் தேவை இல்லை'' என்று அவள் முடிக்கையில், ''ஏன்?

எதற்காக இந்த் மறுப்பு?'' என்று அவன் மேலும் துருவவும் பாரதிக்கு எரிச்சல் வந்தது.

''சொந்த விஷயம்'' என்று கருக்கமாக உரைத்தவள், அந்த ஜீவாவின் விழிகள் வியப்புக்காட்டி விரியவும் திகைத்தாள்.

அகன்ற விழிகளால் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''கொஞ்ச காலமாகவே கச்சேரி ஒத்துக் கொள்வது இல்லை என்று கேள்விப்பட்டேன்... மேல் நாடுகளில்... இது சகஜம்தான்.... ஆனால் இங்கே... வந்து... நீங்கள் மிஸ்தானே மிஸ் பாரதி?'' என்று அவன் வினயமாய் விசாரிக்கவும் அவளுக்கு விஷயம் புரிபட்டது.

கண்களில் கனல் வீச, ''என்ன சொன்னீர்கள்?'' என்று அவள் எழவும், அவசர அவசரமாக மன்னிப்பு கேட்டான் ஜீவானந்தன். ''சாரி, சாரி. ரொம்ப சாரிம்மா. நிச்சயமாக அப்படி ஏதும் இராது என்பதுதான் என் எண்ணமும். மற்றவர்கள் அப்படி இருக்குமோ என்று கூறிய போது கூட 'இருக்காது' என்று அடித்துப் பேசி மறுத்தவன் நான். ஆனால் வித்தையைக் கையில்... இந்த அழகான கைவிரல்களில் வைத்துக் கொண்டு தொடர்ந்து வாசிக்க மறுப்ப தற்கு வேறு காரணம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாததால்... சாரி மிஸ் பாரதி....''

குரலில் பொருத்தமான ஏற்ற இறக்கங்களுடன் ஏற்ற முக மாற்றங்களுடன் ஜீவானந்தன் பேசப் பேச பாரதிக்கு விஷயம் புலப்பட்டது. இவன் எதையும் மெய்யாகச் சொல்லவில்லை. கும்மா அவளைச் சீண்டி விட்டு, கலங்கிய குட்டையில் மீன்பிடிக்க முயற்சிக்கிறான். இப்படி எல்லாருமே பேசுகிறார்கள்! இல்லை என்று நிரூபிப்பதற்காகவேனும் நான் உங்கள் விழாவில் வாசிக்கி றேன் என்று அவளை அவள் வாயால் சொல்ல வைப்பதற்காகத் தான் எல்லாம். அதற்காகத்தான் எல்லாம்.

அமர்ந்து, ''காரணம் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? என்ன வென்று அறிந்து கொள்ள உங்களுக்குத் தெரிய

வில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்.'' என்றாள் அமர்த் தலாக.

சிறு முறுவலுடன், ''என்ன காரணம்? நீங்களே சொல்லுங்க ளேன், கேட்போரைக் கவரும் வித்தையும் பெரிய பெயரும் இருக்கையில் அதைப் பயன்படுத்தி சம்பாதிப்பதை விடுவது என்றால்...'' என்று நிறுத்தினான் அவன்.

''எல்லோருமே பணத்தைப் பெரிதாகக் கருதுவது இல்லை'' என்று மறைமுகமாய் ஒரு தட்டு தட்டினாள் பாரதி.

''சரி. புகழ். இந்த மாதிரி விழாக்களில் வாசிக்க வாசிக்கப் பெருமைதானே.''

''அதற்கும் மேலாக ஒன்று உண்டு. மிஸ்டர் ஜீவானந்தன்; அதற்குப் பெயர் ஆத்ம திருப்தி'' என்றாள் பாரதி குரலில் அர்த்தத்துடன்.

''ம்ஹூம்'' என்று புருவங்களை உயர்த்தினான் ஜீவானந்தன். ''கலைஞர்களுக்கு ஆட ஆட, பாடப்பாட, வாசிக்க வாசிக்க அவரவர் கலையில் மெருகு ஏறும்; திறம்பட ஒரு நிகழ்ச்சி செய்தால் அதுவே அவர்களுக்கு ஆத்ம திருப்தி என்பார்கள். நீங்களானால் வேறு சொல்கிறீர்களே? ரொம்பவும் வித்தியாசமான கலைஞர்தான் நீங்கள்!'' அவன் கிண்டலாகப் பேசவும் அவளுக்கு மீண்டும் கோபம் வந்து விட்டது.

''நீங்கள் சொல்வது சரிதான், மிஸ்டர் ஜீவானந்தன்; ஆனால் கலைத் தொண்டைக் கற்பூர வாசனை தெரியாத கழுதைகள் முன்னிலையில் செய்யும்போது உள்ள திருப்தி அழிவதோடு மனது அருவருத்தும் போய்விடுகிறது. உங்கள் அழைப்பை மறுத்ததற்கு அதுதான் காரணம்'' என்றாள் துச்சமான குரலில் துடுக்காக.

சொல்லி முடித்த உடனேயே மனது குன்றியும் போயிற்று.

பாரதியுடைய பெற்றோர் கலையை மட்டும் பயிற்றுவிக்காமல் பண்பாட்டையும் சேர்த்து அவளிடம் வளர்த்திருந்ததால் அறிந்திராத ஓர் அன்னியனிடம் அளவு மீறிய கடுமையுடன் பேசிவிட்டதை உணர்ந்து உறுத்தலும் உண்டாகி விட்டது.

அவ்வளவு நேரம் அவனது கண்களில் இருந்த சிரிப்பும், முகத்தில் இருந்த மலர்ச்சியும் துணிகொண்டு துடைத்தாற்போல மறைந்தவிதம் உள்ளூர வருத்த, ''பாருங்கள் மிஸ்டர் ஜீவானந்தன், இசையில் மனம் ஒன்றி வாசித்துக் கொண்டு இருக்கும்போது அன்றைக்கு அவனை ஏமாற்றி இரண்டு லகரம் சம்பாதித்தேன்; 'இந்தப் பிறந்த நாளைக்கு எமரால்டு செட் வாங்கினேன் என்றெல்லாம் பேச்சு காதில் விழும்போது இப்படியாவது சம்பாதிக்க வேண்டுமா என்று வெறுப்பாகி விடுகிறது. அதனால்தான் வெளிக் கச்சேரிகளை நிறுத்திவிட்டேன். இப்போது உண்மைக் காரணத்தைச் சொல்லிவிட்டதால் நீங்கள் வேறு ஏற்பாடு செய்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அப்போது...'' என்று எழுந்து கைகூப்பினாள்.

அவளது குறிப்பை ஏற்க மறுத்து அவன் அசையாமல் வீற்றிருந்தான். ''இன்னும் இரண்டே இரண்டு சின்ன விஷயங்கள். அதற்கு மேல் உங்கள் நேரத்தை வீண் செய்யாமல் கிளம்பி விடுவேன். உட்காருகிறீர்களா?''

இன்னொருதரம் முகத்தில் அடித்தாற்போலப் பேச மனமின்றி ''சீக்கிரம்'' என்று சொல்லாமல் சொல்வது போல் ஒட்டில் அமர்ந்தாள் அவள்.

பழைய மலர்ச்சி திரும்பிவிட, ''முதல் விஷயம்... நண்பர்களுக்கு நான் வெறும் ஜீவா'' என்றான் அவன்.

''அடுத்தது?'' என்றாள் அவள் அசையாமல்.

''என் தாத்தா'' என்று அறிவித்தான் அவன்.

''தாத்தா?'' இவனுக்கு என்ன விளையாட்டாக இருக்கிறதா? மீண்டும் சினம் துளிர்த்தது அவளுக்கு.

ஆனால், ''தாத்தாவேதான்'' என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக. ''என் தாத்தாவுக்கு வீணை இசை என்றால் பைத்தியம். அதிலும் உங்கள் வாசிப்பு என்றால் உயிர். நீங்கள் வானொலியில் வாசித்ததை 'ரெக்கார்டு' செய்து வைத்திருக்கிறார்... நேரில் கேட்க ஆசை. பாவம், எங்கேயும் வெளியே சென்று மூன்று மணி நேரம் தொடர்ந்து உட்கார்ந்து கேட்க வயோதிகம் இடம் கொடுப்பதில்லை. நம் சொந்த விழா என்றால் படுத்துக் கொண்டு கூடக் கேட்கலாம். தாத்தாவுக்காகத்தான்... ப்ளீஸ், பாரதி...'' என்றான் ஜீவானந்தம் உருக்கமாக.

பாரதிக்கும் மெய்யாகவே மனம் உருகித்தான் போயிற்று. அப்படி ஒரு வயதான மனிதர் அவளது இசையை நேரில் கேட்க விரும்பிக் காத்திருக்கிறார் என்றால் போய்த்தான் ஆக வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால் இது பொய்யாக இருந்தால்? அவன் ஒன்றும் அரிச்சந்திரனாகத்தான் தோன்றவில்லையே. சற்று முன் கூட ஒரு 'சாம்பிள்' காட்டினானே! இப்போது கூட அதேபோல உருக்கத்துக்குச் சரியான கலவையாகக் குரல், முகபாவனை, வார்த்தைகள்!

அதே உருக்கமான முகபாவனைகள் மாறாமல் அவன் உட்கார்ந்திருந்த விதம் வேறு அவளது ஐயத்தை அதிகப்படுத்தியது.

ஆனால் அப்படியாவது பாரதியின் கச்சேரியைத்தான் வைத்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்? புல்லாங்குழல், கிதார், கோட்டு வாத்தியம்... எதிலும் தான் அவன் சொன்ன வெளிநாட்டுக்காரர்கள் மயங்கிப் போவார்கள். மாண்ட்லின் ஸ்ரீநிவாசை உட்கார வைத்தாலே போதுமே. அத்தனைக்கும் மேலாக அவளது இசையை விரும்பி வந்து கேட்கிறான் என்றால் பாரதிக்கு கொஞ்சம் உச்சி குளிரத்தான் செய்தது.

ஆனால் ஓர் ஏமாற்றுக்குப் பணிய மனம் இல்லாததோடு, தன் உறுதியைக் கைவிடவும் பிடிக்காமல் போகவே, ''இதை நம்பி

வந்து வாசித்த பிறகு உங்களுக்குத் தாத்தாவே இல்லை என்பது தெரியவந்தால் அப்புறம் என் நிலை என்ன, மிஸ்டர் ஜீவானந் தன்?'' என்று கேலியாகக் கேட்டு அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் பாரதி.

அவன் முகம் சட்டெனக் கன்றவும் சந்தேகம் உறுதியாகிவிட, ''அப்படி ஒரு நிலைக்கு ஆளாக மனமில்லாததால், சாரி, மிஸ்டர், உங்கள் விழாவில் நான் கச்சேரி செய்வதாக இல்லை'' என்று இலகுவாகவே கூறி முடித்தாள் அவள்.

எழுந்துநின்று அவளை வெறித்து நோக்கினான் ஜீவானந்தன். ''பாரதி, நீங்கள் வீணை வாசித்தால், அந்த இசை கொஞ்சும், குழையும், கூத்தாடும்; மொத்தத்தில் உங்கள் இசையில் உயிர்த்து டிப்பு இருக்கும் என்றார்கள். ஆனால் துடிப்பு உங்கள் இசையில் இருக்கிறேதே தவிர உங்களிடம் அடியோடு இல்லை. ஏன் தெரியுமா? துடிப்பு இருக்க அங்கே ஓர் இருதயமும் இருக்க வேண்டுமே. உங்களுக்குத்தான் துடிப்பதற்கு இதயமே இல் லையே! இதயமே இல்லாதபோது உயிரும் துடிப்பும் எங்கிருந்து வரும்? ஈரம்தான்; எங்கிருந்து வரும்?'' என்று ஏளனமாகக் கேட்டவன் அதற்கு மேல் நில்லாமல் வெளியேறிவிட்டான்.

அன்றிலிருந்து பாரதியின் மனதில் முள் ஒன்று, நெருஞ்சியாக உறுத்தத் தொடங்கியது.

3

'ஜீவா இன்டஸ்ட்ரீசின்' எம்.டி. வந்து போனான் என்பதற்கு மேலாகப் பெற்றோரிடம் பாரதி எதுவும் சொல்ல வில்லை என்றாலும், உள்ளூர அந்த ஜீவானந்தனின் பேச்சு அவளை உறுத்தலாயிற்று.

அவளுக்கு இருதயமே இல்லை என்று விட்டானே! ஈரமே இல்லையாமே! அவள் என்ன அப்படி ஒரு இரக்கமற்ற அரக்கியா?

அவனது கண்கள் இடுங்கி அவளை வெறித்த விதமும், பேசிய வார்த்தைகளும், குரலை உயர்த்தாமலே கோபத்தைக் காட்டிய தினுசும் பாரதியை வெகுவாகப் பாதித்தன.

இவ்வளவு ஆத்திரப்பட்டானே, அவனுக்கு மெய்யாகவே அவனது இசைக்காக ஏங்கும் தாத்தா இருக்கிறாரோ? அல்லது அது, நினைத்தது நடக்காததால் வந்த ஆத்திரமா?

உள்ளூர உளம்பிக் கொண்டு இருந்தவளுக்கு விரைவிலேயே ஒரு பதில் கிடைத்தது.

வீட்டிலேயே அடைந்து கிடந்தால் மனம் குடைகிறது என்ற எண்ணி அவ்வப்போது வெளியே சென்று வரலானாள் பாரதி.

அன்று அப்படித்தான் மியூசிக் அகடாமி ஹாலுக்குச் சென்று அடுத்து வரும் கச்சேரிகள் பற்றித் தகவல் அறிந்து கொண்டு, 'நீல்கிரீ''சில் வீட்டுக்கு வேண்டிய சாமான் வாங்கி வருவதாகக் கிளம்பிச் சென்றாள்.

முதல் வேலை நிமிடங்களில் முடிந்துவிட, 'நீல்கிரீ'சில் காரை நிறுத்தி விட்டு, உள்ளே சென்று தாயார் கொடுத்த லிஸ்ட்படி சாமான்களை எடுத்து வைத்தாள். பிறகு பில் போடுவதற்காகக் 'க்யூ'வில் நின்ற நேரம் அவளது பொறுமையைச் சோதித்தது.

அவளை அடுத்து, பின்னே நின்றவளுக்கும் அப்படியே தோன்றியதோ, ''சே, எவ்வளவு நேரம் நிற்பது? பேசாமல் வேலைக்காரியிடம் எழுதிக் கொடுத்தே வாங்கியிருக்கலாம்'' என்று பாரதியின் மனதையே படிப்பது போல அவள் எரிச்சல்பட வும், பின்னே திரும்பி அவளைப் பார்த்து முறுவலித்தாள் பாரதி.

''ஆமாம். இப்படிக் க்யூவில் நிற்பது பெரும் 'போர்தான்'' என்றாள் அவளும். உள்ளூர ஒரு யோசனை. இந்தப் பெண்ணை இதற்கு முன் எங்கே சந்தித்தோம்?

''கரெக்ட். இது தெரிகிறதா இந்த அம்மாவுக்கு. ''நீயே நேரில் போனால் இப்போது நினைவு வராததெல்லாம் கூட ஞாபகம் வரும். பார்த்து எடுத்துவா என்று அனுப்பி வைத்து விட்டார்கள். அண்ணனுக்கு இங்கே யாரையோ பார்க்க வேண்டுமாம். கார் கம்மாதானே போகிறது போயேன் என்று விட்டார்கள். இங்கே கால் கடுக்க நின்று பார்த்தால்லவா தெரியும்!'' என்று பொருமித் தீர்த்தாள் பின்னே நின்றவள்.

''உண்மைதான். இங்கே இப்படி விருதாவாக நிற்கிற நேரத்துக்கு வேறு என்னென்னவோ செய்யலாம்'' என்றாள் பாரதி.

''ம். அதைச் சொல்லுங்கள்'' என்று ஒத்துப் பாடினாள் அடுத்தவள். ''புதிதாக 'ஆர்ச்சீ காசெட்' ஒன்று வாங்கினேன். போட்டுப் பார்க்க நேரமில்லாமல் விரட்டி அடித்து விட்டார்கள், அம்மா'' என்று குறைப்பட்டாள்.

பாரதி பேசாமல் முறுவலிக்கவும், ''நீங்கள் என்ன செய்வதாக இருந்தீர்கள்?'' என்று விசாரித்தார்கள்.

''நானும் காசெட்தான். ஆனால் ஆடியோ. சூரியநாராயணாவின் வீணை இசை காசெட் ஒன்று வந்தது. அதைப் போட்டுக் கேட்டு...'' என்றவள், பாதியில் பேச்சை நிறுத்தி, ''அப்பாடி, இன்னும் இரண்டு பேர்தான்'' என்றாள் முறுவலித்தபடி.

''ஆமாம். ஆனால் அதற்குள் இந்த அண்ணன் திரும்பி வந்து விடாமல் இருக்க வேண்டும். வந்து விட்டால், திட்டுவார்'' என்றாள் மற்றவள்.

''க்யூ நீளமாய் இருப்பதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்?''

''ஊகூம். அண்ணன் அந்தப் 'பாயிண்ட்' பக்கமே போக மாட்டார். வீட்டிலிருந்தே 'லிஸ்ட்' போட்டுக் கொண்டு வந்து வந்ததும் மளமளவென்று அதை மட்டும் எடுத்து முடித்திருந்தால் எப்போதோ வேலை முடிந்திருக்கும் என்பார்... உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது... எங்கே?'' என்று யோசித்தாள் அவள்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது... எங்கே பார்த்தேன் என்பதுதான் நினைவு வர மாட்டேன் என்கிறது'' என்று கூறியபடியே, முன்னே நின்றவர் நகர்ந்து விட, கூடைகளை முன்புறம் நகர்த்தி வைக்கக் குனிந்தாள் பாரதி.

''போச்சுடா!'' என்ற அந்தப் பெண்ணின் முணுமுணுப்பை அடுத்து, ''வினு, என்னம்மா இன்னுமா முடியவில்லை?'' என்ற ஆண்குரல் கேட்கவும் பாரதிக்கு விஷயம் புரிந்தது.

அந்தப் பெண் அந்த ஜீவானந்தனுடைய சகோதரி. ஜாடை ஒற்றுமையால்தான் அவளைப் பார்த்தது போல் தோன்றியிருக்கிறது. பெயர் என்ன வினுவா?.... அவளை இதயமில்லாதவள் என்றானே...

நிமிர்ந்து அவனைப் பார்த்துப் பேச மனமின்றி கூடைகளை நகர்த்தும் சாக்கில் கூடைக்குக் கூடை சாமான்களை மாற்றிக் கொண்டிருந்தாள் பாரதி.

''இல்லேண்ணா... இந்தக் 'க்யூ' பெரிதாக...'' என்று சிணுங்கிய தங்கையை இடைமறித்து, ''இல்லாத சாக்கெல்லாம் சொல்லாதே. ஒழுங்காக வேண்டிய சாமான் குறித்துக் கொண்டு வந்திருக்க மாட்டாய். இதை எடுப்பதா அதை எடுப்பதா என்று அதிலேயே பாதி நேரம் வீணாகியிருக்கும். சரிசரி நீ தாத்தாவோடு காரில் வீட்டுக்குப் போ. நான் ஒரு டாக்சியில் அலுவலகம் போகிறேன். நீ இறங்கிக் கொண்டு காரை அனுப்பி விடு.'' என்றான் அவன்.

தாத்தாவோடு! அப்படியானால் தாத்தா இருக்கிறார். என்ன பிழை செய்து விட்டாள்! அவன் அவளை இதயம் இல்லாதவள் என்று சொன்னது சரிதான். ஆனால் அவளுக்கு இதயம் இருக்கிறது; அதில் ஈரமும் இருக்கிறது என்று அவனுக்கு நிரூபித்தாக வேண்டுமே!

அவசரமாக நிமிர்ந்து, ''மிஸ்டர் ஜீவானந்தன்... என்று அழைத்தாள்.

கிளம்பிவிட்டிருந்த அவன் திகைப்புடன் திரும்பவும், ''அன்றைக்கு 'தாத்தா' பற்றி நான் சொன்னதைத் தயவு செய்து மன்னித்து விடுங்கள். உங்கள் அழைப்பைத் தொலைத்து விட்டேன். அதனால் விழா நாள், வாசிக்க வேண்டிய நேரம் எல்லாம் இன்னொரு தரம் குறித்து அனுப்புகிறீர்களா? நீங்கள் என் பக்கவாத்தியக் காரர்களுக்கு மட்டும் பணம் கொடுத்தால் போதும். அன்று 'தாத்தா' பற்றித் தவறாகப் பேசியதற்குப் பரிகாரமாக நான் பணம் வாங்கிக் கொள்ளாமலே உங்கள் விழாவில் வாசிக்கப் போகிறேன்'' என்று வேகமாகச் சொல்லி முடித்தாள்.

அவன் ஏதோ சொல்ல வாயெடுக்கையில், அவள் முன்னே நின்ற கடைசி ஆளும் நகர்ந்துவிட, ''சாமான்களை கொண்டு வாங்கம்மா. பிறகு பேசுங்கள்'' என்று பில் போடுகிற பெண் எரிச்சலை உள்ளடக்கிய குரலில் அழைக்கவும், ''இதோ'' என்று திரும்பி சாமான்களை எடுத்து வைத்தாள்.

''அடேடே. இவர்கள் வீணை பாரதியா? அதுதான் பார்த்த மாதிரி தோன்றியிருக்கிறது. ஆனால் 'தா...' என்று வியப்புடன் தொடங்கிய வினுவை அண்ணன் பார்வை அடக்கியது.

பாரதியின் சாமான் பைகளைச் சுமந்து சென்று அவளது காரில் வைத்து; ''தாங்க்யூ பாரதி'' என்று ஜீவானந்தன் புன்னகை செய்யவும் பாரதியின் உறுத்தல் அடியோடு மறைந்து உலகம் மீண்டும் சுகமாகிப் போனது.

ஜீவானந்தனிடமிருந்து மீண்டும் வந்த அழைப்பைத் தாயிடம் கொடுத்து, 'இதை ஒப்புக் கொண்டு விட்டேன் அம்மா.... அன்று நேரில் வந்தபோது இவரிடம் அனாவசியமாய்க் கடுமையாகப் பேசிவிட்டதால் பணம் வாங்காமல் வாசிக்கப் போகிறேன். பக்க வாத்தியக்காரர்களுக்குச் சொல்லி விடுங்கள், அம்மா.'' என்றவள் அதற்கு மேல் அந்தப் பேச்சு தொடர்வதைத் தவிர்த்தாற்போல

விலகிச் செல்லவும் வியப்புடன் அந்த அம்மாள் தன்னுடைய கணவரை நாடிச் சென்றாள்.

அன்றையக் கச்சேரிக்கான உருப்படிகளை வெகு கவனத்துடன் தேர்ந்தெடுத்தாள் பாரதி. அதே போலத் தோற்றத்திலும் கவனம் செலுத்தினாள்.

சரிகை பின்னிய பச்சைக் கரையிட்ட வெண்பட்டுச் சேலை உடுத்திக் கலைமகளைப் போன்று மேடையில் அமர வேண்டும் என்றுதான் முதலில் பாரதி நினைத்தாள். அப்படி ஒரு சேலை இல்லாததால் புதிதாக வாங்கிக் கொள்ளலாமா என்று கூட யோசித்து விட்டு அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

என்னதான் பாரதி என்று பெயர் வைத்து, வீணையும் பயிற்று வித்தபோதும், கங்காதரனுக்கு வீட்டுப் பெண்களின் ஆடைகளில் வெண்ணிறம் பிடிக்காது. 'அது ஆண்களுக்கு உரிய நிறம். நீங்கள் விதம் விதமான நிறங்களில் உடுத்தி வண்ணமயில் போலக் கண்ணைக் கவர வேண்டாமா' என்பார். ஆண்மயிலுக்குத்தான் வண்ணத்தோகை உண்டு ஏன்று கிண்டலடித்தாலும் அவரது விருப்பத்தை அனுசரித்தே சேலை, சுரிதார் எல்லாம் வாங்குவது வீட்டில் வழக்கம்.

அதனால் இளம்பச்சையில் நல்ல சிவப்பில் சரிகைக் கரை யிட்ட பட்டுச் சேலை ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள் பாரதி. சேலை யின் உடல் முழுவதும் விரசியிருந்த ஜரிகை மாங்காய்களுக்குப் பொருத்தமாய் மாங்காய் மாலையும், தோடு, ஜிமிக்கி மாட்டலும், வளையல்களும் எல்லாமே பச்சையும் தங்கமுமாக அணிந்து அவள் தயாராகி வந்த போது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே பெற்றோர் இருவரின் விழியிலும் லேசாக நீர் அரும்பி யது.

கச்சேரி மிகவும் சிறப்பாக அமைந்தது.

கச்சேரி முடிந்தது விழாவுக்கு வந்திருந்த சில வெளிநாட்டவர் களுக்கு பாரதியை அறிமுகம் செய்து வைத்தான் ஜீவானந்தன்.

பின்னர் தன் பெற்றோரை அறிமுகப்படுத்துவதற்காக அவர்க னிடம் அவளை அழைத்துச் சென்றான்.

ஏற்கனவே பாரதியுடைய பெற்றோரை அவர்களுக்கு யாரோ - ஜீவானந்தனே தானோ என்னவோ, அறிமுகம் செய்திருந்தார் கள் போல. நால்வருமாக சுவாரசியமாகப் பேசிக் கொண்டு இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்று, ''இவர் என் தந்தை. பெயர் சுந்தரமூர்த்தி. 'லயன்' சுந்தரமூர்த்தி. அம்மா பெயர் மாலினி. அம்மா, அப்பா, பாரதியை உங்களுக்குத் தெரியும்'' என்று தன் பணியைச் செய்து முடித்தான்.

''நன்றாய் வாசித்தாயாம்மா. கடவுள் கொடுத்த சிறு பொறி யைக் கடுமையாக உழைத்துப் பெரு நெருப்பாக்கி இருக்கிறாய். மகரஜோதியைத் தரிசித்த சந்தோஷம் எனக்கு'' என்றார் சுந்தர மூர்த்தி.

''ஆகா! அப்பா சபரிமலை போவதை நைசாய்ப் பீற்று கிறார்!'' என்று ஜீவானந்தன், கிண்டல் செய்ய எல்லோரும் நகைத்தனர்.

அதற்குள் தன் சினேகிதிகள் சிலரை அழைத்து வந்து பாரதியிடம் பேசினாள் வினு என்று அழைக்கப்பட்ட வினயா ஜீவானந்தனுடைய தங்கை.

''எங்கள் வினுவுக்கும் எதையாவது கற்றுக் கொடுத்து விடத் தான் முயன்றோம். அவளுக்கும் பெரிய கலாராணி ஆகிவிட ஆசைதான். எல்லாம் பெரிய பெரிய கனவுகளோடுதான் தொடங் குவாள். ஆனால் நாலே நாள்தான். ஆடினால் கால் வலி பிடுங்கி எடுக்கும்; பாடினால் தொண்டை கமறும், வயலின் தோளில் அழுத்தும், பியானோவில் விரல் மொழிக்குள் குடைச்சல் வரும். முயன்று பாராதது என்று ஒன்றுமே இல்லை. கடைசியாகப் படிப்பில் தீவிரமாக இறங்கிவிட்டாள். தங்க மெடல் வாங்கப் போகிறாளாம்'' என்று கேலியும் சிரிப்புமாக இயம்பினார் ஜீவா வின் தாயார்.

''போங்கம்மா'' என்று சிணுங்கிய போதும் கூடச் சேர்ந்து சிரித்தாள் வினயா.

இந்த ஆரவாரத்திடையே, ''சாப்பாட்டைத் தொடங்கி விட லாமா, அப்பா?'' என்று வினவினான் ஜீவானந்தன்.

''செய்யலாம் ஜீவா. பரிமாறுகிறவர்கள் தயாரா என்று பார். சாப்பாட்டு மேசை நாற்காலிகள் சரியாக எல்லாம் ரெடி பண்ணி விட்டார்களா?''

அந்த பெரிய பங்களாவின் பரந்த தோட்டத்திலேயே விழா நடந்தது. மேடை போட்டு கச்சேரி செய்த இடத்தையே இப்போது விருந்துண்ணும் இடமாக மாற்றிக் கொண்டு இருந்தார்கள்.

அதைக் கவனிக்க ஜீவானந்தன் நகர்கையில், ''ம்கூம், இன் னும் ஒரு முக்கியமான நபரை - உங்கள் தாத்தாவிடம் என்னை அழைத்துப் போகவில்லையே!'' என்ற பாரதி, சுந்தர மூர்த்தி தம்பதியிடம் திரும்பி, ''ஜீவாவுடைய தாத்தா என்றால் அவர் உங்களில் யாருடைய தந்தை?'' என்று விசாரித்தாள்.

ஏதோ சொல்ல வாயெடுத்த ஜீவானந்தன் தோளைக் குலுக்கி விட்டுப் பேசாதிருக்க, ''தாத்தா இருந்தால்தானே அழைத்துப் போவதற்கு? இவள் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவள். என் தகப்பனார் மறைந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன'' என்று ரொம்பவும் சாதாரணமாகக் கூறிவிட்டு யாரோ அழைக்க அங்கே சென்றார் அவர். கூடவே அவருடைய மனைவியும்.

ஜிவ்வென்று முகம் ரத்த நிறமாகி விட்டது பாரதிக்கு. இவன்... இவன்... கடைசியில் அவளை ஏமாற்றியே தீர்த்துவிட் டானே.

வெறுப்பும் கோபமுமாக அவனை உறுத்து விழித்து விட்டுத் திரும்பி நடந்தாள் பாரதி.

அவசரமாக உடன் நடந்தபடி, ''பாரதி, ப்ளீஸ். இந்த வெளி நாட்டுக்காரர்கள் உன் அபூர்வ இசையைக் கேட்டு ரசிக்க வேண் டும் என்றுதான்... யோசி, உன் மனதுக்குப் பிடிக்காத எதுவும் இங்கே நடந்ததா?'' என்று அவளைச் சாந்தப்படுத்த முயன்றான் ஜீவானந்தன்.

''மனதுக்குப் பிடிக்காததா? இந்த வினாடியில் இப்படி ஒரு பொய்யன் இருக்கும் இடத்தில் இருப்பதே எனக்கு மனதுக்கு அடியோடு பிடிக்கவில்லை போதுமா?'' என்று சீறினாள் பாரதி.

''ஒரேயடியாக என்னைக் குற்றவாளியாக்க வேண்டாம் பாரதி. நான் ஒதுங்கிவிட்ட போது தானாக வந்து வாசிப்பதாகச் சொன்னது நீதான்'' என்று நினைவுறுத்தினான் ஜீவா.

மீண்டும் முகம் கன்றியது அவளுக்கு. அவளது முட்டாள் தனத்தை அவன் சொல்லிக் காட்டித்தான் ஆக வேண்டுமா?

''ஆமாம் நான் முட்டாள்தான். மூடம்தான். அதனால்தான், இந்தக் 'கொம்பு தற்கு ஐந்து முழம்' பாடலில் வருமே அதன்படி உங்களைப் போல மகா புத்திசாலிகள் இருக்கும் இடத்தை விட்டு உடனே வெளியேறப் போகிறேன்'' என்றாள் பாரதி.

''பாரதி, ப்ளீஸ்'' என்றான் ஜீவானந்தன். ''இப்போது உன்னிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. கொஞ்சம் பொறுமையாய் இரு. விழா முடிந்ததும் நிதானமாகப் பேசலாம்.''

''விழா முடிவதா? நான் சொன்னது எதுவும் உங்கள் ஏமாற்றுக்கார மகர்புத்திசாலி மண்டைக்குள் ஏறவே இல்லையா? இதற்கு மேல் ஒரு வினாடி கூட நான் இங்கே தாமதிப்பதாக இல்லை. இவ்வளவு பேர் நடுவில் அவமானம் வேண்டாம் என்றால் மரியாதையாக உடனே வழியை விடுங்கள்'' என்று அடிக்குரலிலேயே சீறினாள் பாரதி.

அவனால் புரிந்து கொள்ள முடியாத பார்வையுடன் அவள் முகத்தை ஒரு கணம் அளந்தான் ஜீவானந்தன். ''ஒரே பெண் என்பதால் உன் போக்குக்கெல்லாம் இடம் கொடுத்து உன் பெற்றோர் உன்னைச் செல்லமாக வளர்த்து விட்டார்கள் என்பது தெரிகிறது. ஓ.கே. உன் விருப்பம். நீ வீடு செல்ல ஏற்பாடு செய்கிறேன்...''

''நீங்கள் என்ன ஏற்பாடு செய்வது? எங்களிடமும் கார் இருக்கிறது'' என்றாள் பாரதி துடுக்காக.

''ம்ஹூம்? அது உன் பெற்றோருக்கு வேண்டாமா?''

''அவர்களும் என்னோடு வருவார்கள்'' அவனது இலகுக் குரலில் எரிச்சலுற்று தலையைச் சிலுப்பிச் சொன்னாள் பாரதி.

ஆனால் அவளுடைய பெற்றோர் வேறு சொன்னார்கள்.

விழாவில் கலந்து கொள்வதாக வந்து விட்டு, விருந்தை மறுத்துச் செல்வது மரியாதை இல்லையாம். அதுவும் மகள் விருப்பப்படிதானே கச்சேரி ஒப்புக் கொண்டு வந்தது கூட?

விளக்கமாக அந்த நேரத்தில் ஒன்றும் சொல்ல முடியாமல் சற்றுத் திணறி விட்டு, ''நான் கச்சேரி செய்ய மட்டும்தான் வந்தேன். அது முடிந்த பிறகு எனக்கு இங்கு வேலை இல்லை.'' என்றாள் பிடிவாதக் குரலில் மகள்.

இருவரும் சற்றுத் திகைத்து ஜீவானந்தனை நோக்க அவன் முறுவலித்து ''கச்சேரியைக் கவனத்துடன் வாசித்த அலுப்பாய் இருக்கலாம். பாரதி முதலில் போகட்டும். நீங்கள் இருந்து சாப்பிட்டு விட்டு மெதுவாகத் திரும்பலாம்...'' என்று உபசாரம் செய்யவும் இருவரும் முகம் மலர்ந்தனர்.

''ஆனால் கார்... நான்தான் ஓட்டிக் கொண்டு வந்தேன்... என்றார் கங்காதரன்.

''சாப்பிட வரவில்லையே'' என்று அழைக்க வந்தார் ஜீவானந்தனுடைய தாயார். விஷயம் அறிந்தும், ''கட்டாயம் களைத்துத்தான் போயிருப்பாய். என்ன அருமையாக வாசித்தாய். வேண்டுமானால் இங்கேயே ஒரு 'பெட்ரூ'மில் படுத்து ஓய்வு எடுத்துக் கொள்ளேன்'' என்று பரிவுடன் யோசனை சொன்னார்.

பிரியமாய்ப் பேசுகிறவரிடம் முறித்துப் பேச மனமின்றி, ''இல்லை... எனக்கு வீட்டிற்குப் போய்க் குளித்தால்தான் நன்றாகும்'' என்றாள் பாரதி.

''ம்ம்... அப்படியானால் ஒன்று செய் ஜீவா. இரவாகி விட்டதால் பாரதி தனியே கார் ஓட்டிச் செல்ல வேண்டாம். உன் காண்டசாவில் பாரதியை வீட்டில் கொண்டு விட்டு விட்டு வரும்படி டிரைவர் தாத்தாவை அனுப்பு. அவள் அம்மாவும்

அப்பாவும் விருந்து முடிந்து பேசிக் கொண்டு இருந்து விட்டு வந்ததுபோல அவர்கள் காரிலேயே போகட்டும்.''

டிரைவர் 'தாத்தா' அவன் அன்று 'தாத்தா' குறிப்பிட்டது இந்த டிரைவர் 'தாத்தா'வைத்தான். தவறாகப்புரிந்து கொண்டது அவளது பிழையாகவே இருக்கலாம். ஆனால் அவள் தப்பாகப் புரிந்து கொண்டாள் என்பது தெரிந்தும் அதை விளக்காமல் இருந்து அவளை ஏமாற்றினானே! அவனை மன்னிக்கவே முடியாது!

4

ஜீவானந்தனின் காரில் ஏற பாரதிக்குப் பிடிக்கவில்லை தான். ஆனால் அதை மறுத்தால் அங்கே தாமதிக்க நேரும்படி ஆகிவிடலாம் என்பதை உணர்ந்து வேறேதும் கூறாமல், பட்டும் படாமலும் விடைபெற்றுக் கொண்டு உடனே கிளம்பிவிட்டாள் அவள்.

தும்பை எனத் தலை நரைத்திருந்த போதும், சுருக்கங்களே சருமம் என்றாகிவிட்ட போதும், டிரைவர் தாத்தாவுக்கு கார் ஓட்டுவது கைவந்த கலை என்பது நன்றாகத் தெரிந்தது. பழம் தின்று கொட்டை போட்டவர்.

அவளுக்காகக் கார்க் கதவு திறந்து விட்டு, அவள் ஏறிய பின் மரியாதையுடன் மூடிப் பணிவு காட்டிக் கார் ஓட்டிய போதும் இயல்பாகவே பேச்சுக் கொடுத்தார் அவர். ''ரொம்ப நல்லா வாசிச்சீங்கம்மா. அந்தக் 'குறை ஒன்றும் இல்லை கண்ணா' பாட்டு அப்படியே எம்.எஸ். பாடுகிற மாதிரியே இருந்தது. சொல்லப் போனாக்க, உருக்கம் அதிகம்தான்'' என்று விமரிசிக்கவும் பாரதிக்கு ஒரே ஆச்சரியமாகிப் போய்விட்டது.

''உ.... உங்களுக்கு... சங்கீதம் தெரியுமா...'' என்று வியப்பை மறைத்து வினவினாள் அவள்.

''ம். லேசுபாசாத் தெரியும்மா. அம்மாவை சபாவுக்குக் கூட்டிப் போறது, வாறது என்று அப்படியே தெரிஞ்சுகிட்டேன்... கேட்க ஆசைப்படுகிறேன் என்று தெரிந்ததிலிருந்து, அம்மா சபா போகிற போதெல்லாம் என்னைக் கூட்டிப் போவாங்க. பிள்ளைகளும் கூட அதே பிரியமாய், தாத்தா என்று அழைப்பது தவிர வேலைக்காரன் என்பது காட்டும்படி ஒரு வார்த்தை சொன்னதில்லை. ரொம்ப நல்ல குடும்பம்மா'' என்றார். கேளாமலே விவரம் சொன்னார் கிழவர்.

ஒரே ஒருவரைத் தவிர என்று உள்ளூர எண்ணிக் கொண்டாள் பாரதி.

வீட்டில் அவள் இறங்கிக் கொண்ட பிறகும், உள்ளிருந்து வேலையாள் வந்து கதவைத் திறந்துவிட, அவள் உள்ளே செல்லும்வரை காத்திருந்துவிட்டு அதன் பின்னரே அந்த டிரைவர் தாத்தா கிளம்பியதைக் காண பாரதிக்கு ஆச்சரியமாக இருந்தது. சம்பளத்துக்கு உழைக்கும் மனிதர்தான் என்றாலும் வீட்டு விருந்தாளியிடம் இவ்வளவு அக்கறை காட்டுகிறாரே! வீட்டு ஆட்களிட காட்டுவது இயற்கை.

ஆனால் கதவு தாண்டி தனியே உள்ளே செல்லும்போதே மீண்டும் மனநிலை மாறி ஆத்திரம் வந்து விட்டது. இதுவரை ஒவ்வொரு கச்சேரி முடிந்து உள்ளே வரும் போதும் அம்மா கூடவே வந்து, திருஷ்டி சுத்திப் போட்டுவிட்டுத் தான் உள்ளே செல்வது. வீணையைத் தாங்கியபடி அவள் நிற்க... கடவுளே, வீணை! அதைக்கூட மறந்து அங்கேயே விட்டு விட்டு வந்துவிட்டேனே! எல்...லாம் அந்த... அந்த... அவனால் வந்தது.

அப்பா அம்மா கவனித்து எடுத்து வருவார்களா?... அவர்களுக்கு அந்தப் புளுகு மூட்டையுடைய பெற்றோரோடு குலாவவே நேரம் சரியாக இருந்ததே!

தாய் தந்தையிடம் வீணையை எடுத்து வரும்படி சொல்லலாம் என்று டெலிஃபோன் அருகே சென்றவளுக்கு அதற்கும் பிடிக்கவில்லை. ∴போனை அந்த ஜீவானந்தன் எடுத்தால்? ஜீவானந்தனாம் ஜீவானந்தன்! பெயரைப் பார். ஜீவாத்திரம் என்று

வைத்திருக்க வேண்டும். அந்தப் பொய் சொல்லிப் புளுகனை நினைத்தாலே பற்றிக் கொண்டுதான் வருகிறது.

தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள பாரதி பெரு முயற்சி செய்தாள். ஜீவானந்தன் 'பிசினஸ்' பண்ணுகிறவன். அதிலும் வெற்றிகரமாக. இந்தக் காலத்தில் உண்மை மட்டுமே பேசுகிறவர்க ளால் முன்னுக்கு வரவே முடியாது. ஏன் அவளது கலைத்துறையில் கூட எவ்வளவு பார்க்கிறாள்! அவளது கச்சேரியை நடத்த வேண்டும் என்று விரும்பியவன் அதைச் சாதிக்க ஒரு பொய் சொல்லிவிட்டான். அவ்வளவுதான்...

ஊகூம். இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்தும் பாரதியின் மனம் சமாதானமாக மறுத்தது. எப்படியும் பக்கவாத்தியக்காரர்கள் வீணையை எங்காவது பத்திரமாக எடுத்து வைத்திருப்பார்கள். அம்மா அப்பாவாகக் கவனித்து அதை எடுத்து வந்தால் வரட்டும். அல்லது நாளைக்குத் திரும்பச் சென்று எடுத்துவரும்படி அப்பாவி டம் சொல்ல வேண்டியதுதான் என்று எண்ணியவாறு டெலி:. போனை விட்டு அகன்றாள் அவள்.

வழக்கமாகக் கச்சேரி முடிந்து வந்தால் செய்வது போலக் குளித்து உடை மாற்றி வந்து பெற்றோரின் வருகைக்காகக் காத்திருந்தாள் மகள்.

ஆனால் நள்ளிரவு தாண்டியும் கங்காதரனும் சரஸ்வதியும் வந்து சேரவே இல்லை. பதினோரு மணிக்கு மேல் ஆனதுமே மெல்ல மெல்ல பதறத் தொடங்கிய அவள் மனம் இரவு பனிரண்டு மணியானதும் ஒரேயடியாகக் கலங்கி விட்டது.

அதற்கு மேல் தாங்கிக் கொள்ளும் சக்தியற்று, ஜீவானந்தனின் கடிதத்தைத் தேடிப்பிடித்து, நம்பரைப் பார்த்து அவன் வீட்டிற்கு 'டயல்' செய்தாள்.

இன்னார் என்று கூறியதும் சில வினாடிகளில் ஜீவானந்தனின் குரல் கேட்டது. விவரம் அறிந்ததும், ''நீ தனியே சென்றதால் வீட்டிலும் தனிமையில் மனது கஷ்டப்படக்கூடும் என்று விருந்து முடிந்ததும் உடனே கிளம்பிவிட்டார்களே. பத்துமணி இருக்கும். ஒருவேளை, வழியில் யாரையாவது... வழியில் யாராவது உறவி

னர், நண்பர் வீடு இருக்கிறதா?... எதற்கும் நான் இதோ வருகி றேன்...''என்று வைத்தான்.

அதன் பின் நடந்ததெல்லாம் ஒரு பயங்கரக் கனவு போலத் தான் பாரதிக்குத் தோன்றியது. ஆனால் இடையில் விழித்து ஒன்றுமில்லை என்று ஆறுதல் கொள்ள முடியாத பயங்கரக் கனவு.

கங்காதரன் கார் ஓட்டுவதில் மகாத் திறமைசாலி என்று சொல்வதற்கு இல்லை என்றாலும் மோசம் என்றும் சொல்வதற் கில்லை. வேகம் பிடிக்கும். அவ்வப்போது மெல்ல, மெல்ல என்று சரஸ்வதி சொல்வதுண்டு.

அன்று இருவருமே வேறுபட்ட மனநிலையில் இருந்தனர். வயது வந்த பெண்ணை உடைய பெற்றோருக்கே உரிய இனிய கனவுகளும் கற்பனைகளுமாக வானத்தில் மிதந்தனர் என்று கூடச் சொல்லலாம்.

கோபத்தைத் தனக்குப் பிரியமான பொம்மையிடமே காட்டும் குழந்தையாக மகளைப் பாவித்து அவள் சீறிச் சென்றதை எண்ணி இருவருக்கும் சிரிப்புதான் வந்தது. ஆனால் அவள் வீட்டில் தனியே தன் சினத்தோடு போராடிக் கொண்டு இருப்பாளே என்று, அதுவும் தாங்காமல், விரைவாக வீடு சென்று விடும் விருப்பத்தோ டும் காரை மிகவும் வேகமாகத்தான் கங்காதரன் ஓட்டினார். நேர்ச்சாலைதானே என்கிற எண்ணத்தில் வேகத்தை மட்டுப்படுத் தாமலே அவர் ஓட்ட, அதே போல வேகம் குறையாமலே குறுக்குச் சந்திலிருந்தும் ஒரு பெரிய லாரி வந்து விட, அதைக் கண்ணுற்று, காரை நிறுத்திவிட கங்காதரன் முயன்றபோது அடியோடு காலம் கடந்து விட்டிருந்தது.

ஜீவானந்தனும், அவனுடைய பெற்றோரும் பாரதியுடைய உறவினர்களுக்குத் தகவல் கொடுப்பது, உடல்கள் வீடு வந்து சேர ஏற்பாடு செய்வது, மேலே கிரியைகள் என்று அத்தனையையும் பாரதிக்குத் தொல்லை ஏற்படாத வண்ணம் அவர்களேக் கவனித்த னர்.

சொந்தப் பணத்தையும் ஆள் பலத்தையும் பயன்படுத்தி அவர்கள் செய்த உதவிகள் எதையும் உணர்ந்து கொள்ளும்

நிலையில் பாரதி இல்லை. ஒன்றும் புரியாத பச்சைக்குழந்தை போல தந்தையுடன் பிறந்தவர்களும், அன்னையுடன் பிறந்தவர்களுமான நெருங்கிய உறவினரையே ஒட்டிக்கொண்டு கிடந்தாள்.

சித்தியின் மடியில் முகம் புதைத்தோ, அத்தையின் தோளில் சாய்ந்தோ, சித்தப்பாவின் கையை இறுகப் பற்றியபடியோ, அவர்களின் அருகாமைதான் ஆறுதல் போல அவள் இருந்த நிலையைக் கவனித்துவிட்டு, ஏதேனும் உதவி வேண்டுமானால், தயங்காமல் தொடர்பு கொள்ளும்படி அவளிடம் வலியுறுத்திக் கூறிவிட்டு சுந்தரமூர்த்தியுடைய குடும்பம் ஒதுங்கியது.

அதன் பிறகே பாரதிக்கும் சோதனை தொடங்கியது.

முதலில் இரு தினங்கள் ஒன்றும் தெரியவில்லை.

தெரியவில்லை என்றால் இழப்பின் வேதனை தெரியவில்லை என்பதல்ல. அம்மாவை அப்பாவைப் பார்க்க முடியவில்லையே, அவர்களோடு பேச முடியவில்லையே, கடைசியாக இருவரும் பார்த்தது தனது கோப முகத்தைத்தானே என்ற துயரம் நெஞ்சை அரித்துக் கொண்டேதான் இருந்தது. ஆனால் உற்றவர்களாக எண்ணிய உறவினரிடம் மெல்ல மெல்ல காணப்படத் தொடங்கிய வேறுபாடு அவளது துன்பத்தைப் பன்மடங்காக்கியது.

முதலில் வந்து நின்றவன் தோட்டக்காரன் ஆறுமுகம்தான். தோட்டத்தைக் கவனிப்பதோடு சாமான் வாங்கிப் போடுவதும் அவன் பொறுப்பு.

''அம்மா, இன்னிக்கு சாமான் வாங்க... நிறையப் பணம் வேணும்மா... ஒரு... ஒரு அஞ்சாறு நூறு ஆகும்மா'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

''அவ்வளவா? மளிகைச் சாமான் எண்ணெய் எல்லாம் வாங்க வேண்டியிருக்கிறதா, ஆறுமுகம்?'' என்று வினவியபடி பணத்தை எடுக்க எழுந்தாள் பாரதி.

''இல்லம்மா. அதெல்லாம் அந்தய்யா புண்ணியத்திலே நெறய இருக்குதும்மா. இது இன்னைக்கு சமைக்கிற பதார்த்தங்களுக்காகத் தாம்மா'' என்றான் வேலைக்காரன் குரலில் நன்றாக வெறுப்பைக் காட்டி.

எந்தய்யா என்று யோசிக்கத் தொடங்குமுன் வேலையாள் அடுத்துக் கூறியது திகைப்பூட்ட விழித்தாள் அவள். ''அது... அவ்வளவு ஆகுமா?''

''சும்மான்னா ஆவாதும்மா. அவங்க அவங்க வீட்டிலே அப்படியா தின்னுராங்க?... மன்னிச்சிடுங்கம்மா. எல்லோரும் நடந்துக்கிறது எனக்கு மனசு பொறுக்கலம்மா. தினம் மீனு வேணுமாம். கோழி வேணுமாம். கறி வேணுமாம். என்னமோ கல்யாண வீடு மாதிரி போடுயா என்கிறாங்க. சமயல்காரம்மா அழுவுறாங்க, கல்யாணம் வருமின்னு அய்யா சொன்னாங்க, அவங்க இல்லை, சொந்தமின்னு வந்து ஆட்டம் போடுறாங்கன்னு... சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்கம்மா, ஏதோ காரியமுன்னு வந்தாங்க. முடிஞ்சதும் போக வேண்டியதுதானே?'' என்று ஆறுமுகம் பொருமவும் பாரதி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

போய்விட்டால் அப்புறம் இந்த வீட்டில் தனியாக இருப்பது எப்படி? ''ப... பரவாயில்லை ஆறுமுகம். அவர்கள் கேட்பதை வாங்கிக் கொடுத்துவிடு'' என்று பணத்தை எடுத்துக் கொடுத்தாள் அவள்.

பாரதி மறுக்காமல் இடம் கொடுக்கிறாள் என்பது புரிந்ததும் மேலே மேலே போனார்கள் உறவினர்கள். இரவு பகல் என்று இல்லாமல் எந்நேரமும் வீடியோ அலறியது. டிபனும் காபியும் அமளி துமளிப்பட்டன. மென்குரலும் இன்முகமும் இசை ஒலியுமாகக் கலைக் கோயிலாக இருந்த வீடு அடியோடு மாறியது.

எதையும் பாரதி கண்டு கொள்வதாக இல்லை. தாய் தந்தை இல்லாத வெறுமையை ஒரளவேனும் மறைக்க இவர்கள் இருப்பதே போதும் என்று எண்ணிப் பேசாதிருந்தாள்.

ஆனால், ''அவசரத்தில் பதறியடித்துக் கொண்டு வந்ததில் துணிமணி ஒன்றும் சரியாக எடுத்து வரவில்லை, சொந்த பந்தத்தில் ஒரு முக்கியமான ஆளைப் பார்த்துவர வேண்டியிருக்கிறது. அம்மாவின் பட்டுச் சேலை ஒன்றை எடுத்துத் தாயேன்'' என்று அவரவருக்கு உகந்தபடி ஆளுக்கொரு சாக்குடன் அத்தையும், சித்திகளும் வந்து நின்றபோது முதன்முதலாக மறுப்பைக் காட்டினாள் பாரதி.

அந்தச் சேலைகளைப் பூட்டி வைத்துப் பூதம் காப்பது முட்டாள்தனமாகவே இருக்கலாம். ஆனால் அன்னையின் சேலைகளை அதற்குள் அடுத்தவருக்குக் கொடுக்க பாரதிக்கு மனம் வரவில்லை. இன்னொருவர் உடலில் அந்தச் சேலைகளை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.

அவள் மறுத்ததும் முதலில் முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றபோதும் உடனேயே எல்லோரும் அன்பொழுகவே பேசவும் பாரதி அப்பாடி என்று மூச்சுவிட்டாள்.

ஆனால் அந்த நிம்மதிக்கும் அற்பாயுசுதான் என்பதை அப்போது அவள் அறியவில்லை.

ஒருநாள் சித்தப்பா - அப்பாவோடு பிறந்தவர், வந்து அவள் அருகே அமர்ந்து அவள் கையைப் பற்றி வருடி, ''பாரதிக் கண்ணு, இப்படி இளைத்து விட்டாயே கண்ணு. இந்த ஊர்க்காற்றே சரியில்லை. பேசாமல் கையில் இருக்கும் பணத்தோடு, இந்த வீட்டையும் விற்று எடுத்துக் கொண்டு ஊரில் நம் வீட்டுக்கு வந்து விடு. அங்கே ஆற்றுப் பாசனத்தில் அருமையாய் இருபது ஏக்கர் விளைச்சல் நிலம் விலைக்கு வருகிறது. வாங்கிப் போட்டுக் கொண்டு அக்கடா என்று அங்கேயே உட்கார்ந்து விடலாம். இப்போது அட்வான்சுக்கு பாங்கில் இருக்கும் பணத்தை எடுத்து தருகிறாயா, செல்லம்?'' என்று உருக்கமான குரலில் கேட்கவும் பாரதி திகைத்தாள்.

இந்த சித்தப்பா ஊரில் அப்பாவின் பங்குச் சொத்தையும் சேர்த்துப் பார்த்துக் கொள்கிறேன் என்கிற பெயரில் தானே அனுபவித்துக் கொண்டு இருக்கிறவர். இன்றுவரை 'உன் நிலத்து வருமானம்' என்று ஒரு பைசா கொடுத்ததில்லை. அதற்கு மேல் நடவுக்கு, உரம் அடிக்க என்று பணம் கேட்டுப் பெறுவது உண்டு. அவ்வப்போது, வீண் செலவு வைத்துக் கொண்டு ஊரில் 'சும்மா கிடக்கிற நிலத்தை விற்று இங்கே ஒரு ஃபளாட் வாங்கி வாடகைக்கு விடலாமே என்று கங்காதரன் முயன்றபோது, ஊர் நிலத்தை விற்கவிடாமல் இல்லாத முட்டுக்கட்டையிட்டுத் தடுத்தவர். போய்த் தொலைகிறது, ஏதோ சொந்த ஊரில் நம் பெயரில் சொத்து இருக்கிறது என்ற திருப்தியோடு மட்டுமாய் இருந்து

கொள்வோம் என்று தந்தையும் தாயும் முடிவெடுத்தது பாரதிக்குத் தெரியும். இவரிடம் இந்த வீட்டையும் விற்று இருக்கும் பணத்தையும் கொடுப்பதா?

முகத்துக்கு நேராக வயதில் பெரிய உறவினரிடம் மறுக்கும் துணிவின்றி, ''கொஞ்ச நாள் போகட்டும். பிறகு பார்த்துக்கலாம், சித்தப்பா...'' என்று தள்ளிப் போட்டாள் அவள். அன்றிலிருந்து அவளைத் தனியே பார்க்க முடிந்த போதெல்லாம் அந்த 'இருபது ஏக்கர்' நன்செய் பற்றியே பேசிப்பேசி அவளைத் தன்வழிக்குக் கொண்டு வர முனைந்தார் அவர். எறும்பூரக் 'கல் தேயுமாமே!

அப்பாவோடு பிறந்த அத்தையும், அம்மாவுடன் பிறந்த சித்தியும் வேறுவிதமாய்ப் பேசினார்கள்.

கடவுள் கொடுத்த தெய்வீகக் கலை; துருப்பிடிக்க விடலாமா? பழையபடி முழுமையாகக் கச்சேரி செய்யத் தொடங்கினால் தான் பாரதிக்கு ஒருவாறு மனம் ஆறக்கூடும். கச்சேரி விவகாரங்களைக் கவனிக்க ஆள் இல்லையே என்று அவள் சற்றும் கவலைப்பட வேண்டாம் என்கிற வரையில் ஒரே மாதிரியாகப் பேசிய அத்தை, சித்தி இருவரும் அதன் பின் கொஞ்சம் வேறுபட்டனர்.

''மாமா சொல்கிறார். அந்தக் குழந்தைக்கும் அது வந்து உனக்குத்தான் கண்ணு, வேறு யார் ஆதரவு? கச்சேரி விவகாரங்களை நாம் கவனித்துக் கொள்ளலாம். வருவதை ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்ளலாம் என்கிறார். நீ ஒத்துக் கொண்டாய் என்று மாமாவிடம் சொல்லிவிடட்டுமா கண்மணி?'' என்று உச்சியில் முத்தமிட்டு வினவினார் அத்தை.

''உன் அக்கா வேறு நீ வேறா. இனிமேல் பாரதியின் நன்மை தீமைகளுக்கு நாம்தானே பொறுப்பு. சின்னக் குழந்தை அவளுக்கு என்ன தெரியும்? ஒரு 'பவர்' எழுதிக் கொடுத்துவிடச் சொல்லு. அவளது சொத்து பணம், கச்சேரி விவகாரங்களை அவளுக்குக் கொஞ்சமும் கஷ்டமில்லாமல் நாமே பார்த்துக் கொள்ளலாம் என்கிறார் உன் சித்தப்பா. 'பவர்' எழுத நாளைக்கே வக்கீலை வரச் சொல்லிவிடலாமாடி, செல்லக்குட்டி? கூடவே தெரிந்தவர் வீட்டில் கச்சேரிக்கும் கேட்டார்களாம். மூணு மணி நேரம் வாசித்..

தால் கைமேல் சுளையாகப் பணம். அதையும் ஒத்துக் கொண்டு விடலாம் என்கிறார் சித்தப்பா'' என்றாள் சித்தி குரலில் தேன் சொட்ட.

பாரதி முட்டாள் அல்ல. இந்த மூன்று குடும்பங்களுமே பாரதியிடம் இப்போது இருக்கும் செல்வத்தோடு, இனி அவள் மூலம் வரக்கூடியதையும், கைப்பற்றிவிடும் பேராசையோடு பேசுவது அவளுக்கு நன்றாகவே புரிந்தது. இவர்களில் யார் சொல்லுக்குச் செவி சாய்த்தாலும், அதன் பின் அவள் சொத்தை இழந்து, அவர்கள் குடும்பத்துக்கு உழைத்துப் போடும் யந்திரமாகிவிட வேண்டியிருக்கும் என்பதும் நிச்சயம்தான்.

ஆனால், அவள் வளர்ந்த விதத்தால், ஒரு தலைமுறை மூத்த உறவினர்களிடம் முகத்தில் அடித்தாற்போல மறுத்துப் பேசி அவமானப்படுத்த அவளுக்கு மனம் வரவில்லை. கூடவே இவர்கள் யாரும் இல்லாமல் அந்த வீட்டில் தனியே இருப்பதை நினைத்துப் பார்க்கவும் அவளுக்குப் பயமாக இருந்தது.

இதற்கிடையே, 'தான் திருடி பிறரை நம்பாள்' என்பதற்கிணங்க, ஒருவரை ஒருவர் வேவு பார்த்து மற்றவர் முயற்சிகளை அறிந்து கொண்டு ஏசலும் பூசலுமாக நேரடியாக சண்டையிடத் தொடங்கினார்கள். உறவென்று வந்த உடும்புகள் கை நீட்டி அடித்துக் கொள்ளாத குறைதான்.

வீடு நரகமாயிற்று பாரதிக்கு.

இத்தனைக்கும் மேல் ஒட்டகத்துரும்பாய் வந்து சேர்ந்தான் நாதபிரம்மம் யாழினியன்.

5

நாதப் பிரம்மம் யாழினியனின் இயற்பெயர் என்ன என்று யாருக்கும் தெரியாது. யாழினியன் என்று அவனாக வைத்துக் கொண்ட புனைப் பெயர்தான் பிரசித்தம். நாதப் பிரம்மம்

என்று தனக்குத்தானே பட்டமும் வைத்துக் கொண்டான். வீணையில் பல சர்க்கஸ் வேலை செய்வான். மந்தரத்துக்கும் உச்சத்துக்குமாகத் தாவித்தாவி அனுமார் வேலை நிறைய காட்டுவான். வீணை வாசிக்கும் போது அவனுக்கு உடம்பு முழுவதும் ஆடும். ஒருதரம் பாரதியும் அவனது கச்சேரியைப் பார்த்திருக்கிறாள். ஆமாம். கேட்பதை விட அவன் கச்சேரியில் பார்ப்பதற்குத்தான் விஷயம் இருக்கும். வீணையை உடைத்து விடுவானோ என்றுகூட அவளுக்குப் பயம் வந்தது. ஆனால், அவனுக்கென்றும் ஒரு ரசிகர் கூட்டம் இருந்தது. 'பைத்தியக்காரன் பின்னேயும் பத்து பேர்' என்று அலட்சியமாகப் பேசுவார் கங்காதரன்.

பாரதியுடைய பெற்றோரின் மறைவு பற்றித் துக்கம் விசாரிக்க வென்று சங்கீத உலகில் பலர் வந்தார்கள். நாதபிரும்மமும் வந்தான்.

வந்தவனுக்கு என்ன தோன்றியதோ? அடிக்கடி வந்தான். சங்கீதம் பற்றிப் பேசினான்.

சாப்பாடு, துணிமணி, பணம் தவிர்த்த இந்தப் பேச்சில் பாரதிக்கும் ஈடுபாடு வந்தது.

பாரதி மட்டும் இன்னும் கொஞ்சம் கற்பனையை விருத்தி செய்து கொண்டால் உலகையே வென்று விடலாம் என்றான் ஒருநாள்.

'வீணை வாசிக்கும் ஒருவரையே மணந்துகொண்டால் சாரதா சிவானந்தம் போல ஒரு கலக்கு கலக்கலாம்' என்றான் இன்னொரு நாள்.

கடைசியாக 'அந்த ஒருவர் 'நானே' என்றான். திருமணம் செய்து கொள்ளலாம். பொறுப்பை எல்லாம் நானே ஏற்றுக் கொள்கிறேன். 'இரு வீணைகளை வைத்துக் கொண்டு உலகம் முழுவதும் சுற்றிப் பணத்தை அள்ளிக் கொண்டு வரலாம்' என்று அவள் கையைப் பற்ற வந்தபோது அவசரமாய் விலகினாள் பாரதி.

'வெட்கமா?' என்று அவன் மன்மதப் பார்வை பார்த்தபோது சகிக்கவில்லை பாரதிக்கு. என்ன மாதிரி நிலைமையில் என்ன பேச்சு பேசுகிறான் முட்டாள்.

''இப்போதைக்குத் திருமண வாழ்வு பற்றி எண்ணவும் எனக்கு பிடிக்கவில்லை'' என்று பாரதி மறுத்ததைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை அவன்.

'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழியில் நம்பிக்கை வைத்து, முடிந்த போதெல்லாம் பாரதியின் 'கலைவாணி இல்ல'த்துக்கு வருகை தந்த வண்ணம் இருந்தான்.

எந்தப் பக்கமும் திரும்ப முடியாமல் பாரதிக்கு மூச்சு முட்டிக் கொண்டு வந்தது. மனிதர்களே இல்லாத காட்டுக்குள் சென்று விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தாள். அந்தச் சமயத்தில், ஒருநாள் மதிய நேரத்தில் மற்றவர்கள் உண்ட மயக்கம் தீர உறங்கிக் கொண்டிருந்தபோது ஆறுமுகம் எஜமானியைத் தேடி ஓடி வந்தான்.

பெற்றோரின் பெரிதாக்கப்பட்ட படங்களைக் கண்களில் நீர் மல்கப் பார்த்தவாறு சோர்ந்து அமர்ந்திருந்தவளைக் கண்டதும் சற்று தயங்கி நின்றான்.

ஆனால் அதற்குள் அரவம் உணர்ந்து, கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் பாரதி.

''என்ன ஆறுமுகம்''?

''அந்தய்யா வந்திருக்கிறாரும்மா?'' என்று பல்லைக் காட்டினான் பணியாள்.

''யார்...?'' என்று கேட்கும் போதே அவளுக்கு உள்ளூர நெருடியது. இவன் இந்த 'அந்தய்யா'வை முன்புகூட ஒருதரம் பயன்படுத்தியிருக்கிறான். அப்பாவைச் சொல்லியிருக்கலாம் என்று அப்போது நினைத்தது தவறு. அப்பாவைக் குறிப்பிடுவது என்றால், வெறுமனே 'அய்யா' என்று மட்டும்தானே சொல்லியிருப்பான்?

''அந்தய்யா என்றால் யார் ஆறுமுகம்?'' என்று தலையைச் சொறிந்து கொண்டு நின்றவனை மீண்டும் வினவினாள் பாரதி.

''அது... அதாம்மா, அய்யா அம்மா இதானப்போ எல்லாம் பார்த்துகிட்டாங்களே, முன்னேகூடப் பெரிய பூச்செண்டு கொணாந்தாங்களேம்மா...''

ஜீவானந்தன்! அவனா வீட்டுக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் வாங்கி நிரப்பிவிட்டுப் போனான்? பெற்றோர் மறைவின் போதுகூட அவனும் அவனுடைய பெற்றோரும்தான் எல்லாம் கவனித்தது போல் இருந்தது... ஒரு நன்றி கூடச் சொல்லவில்லையே!

சட்டென எழுந்து, ''உட்காரச் சொன்னாயில்லையா, ஆறுமுகம்? ஏதாவது ஜூஸ் கொண்டு கொடுக்கச் சொல்லு. நான் இதோ வருகிறேன்'' என்று அவனை அனுப்பிவிட்டு நலுங்கியிருந்த உடையை அவசரமாகச் சீர் செய்தபடி கிளம்பினாள் பாரதி.

ஆனால், அறைக்குள் செல்லும்போதே, கால்கள் தயங்கி விட்டன. இவனும் ஆறுதல் சொல்லத்தானே வந்திருப்பான்? ஆறுதல் சொல்வதாக எண்ணித் துக்கத்தைக் கிளறி விடத்தானே?

''வணக்கம்'' கூறி எதிர் சோபாவில் அமர்ந்தவளை ஒரு சலனமற்ற பார்வையில் அளந்த ஜீவானந்தன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

அவளாக ஒரு பெரிய மூச்செடுத்து, ''வந்து... நான் உங்களுக்கு நன்றி... அப்... அப்போது செய்ததற்கு எல்லாம் நன்றி சொல்லவே...'' என்றபோது இடைமறித்து, ''உன் நன்றி உரைக்காக நான் இப்போது இங்கே வரவில்லை, பாரதி'' என்றான் ஆழ்ந்த குரலில்.

அவள் பேசாதிருக்கவும், ''உலகவாழ்வின் அநித்தியம் பற்றி எடுத்துச் சொல்லவோ வேதாந்தம் பேசி ஆறுதல் கூறவோ கூட வரவில்லை'' என்றான் தொடர்ந்து.

அவள் மவுனமாகவே ஏறிடவும், ''பாரதி, சற்றுக் கவனமாக என் பேச்சைக் கேட்க வேண்டும். கேட்டு முடித்துவிட்டு யோசித்து

பதில் கூறு'' என்ற பீடிகையுடன் மேலே பேசத் தொடங்கினான் அவன். ''இன்றைக்கு இந்த வீட்டில் உன் நிலைமை, உன் மனநிலை எப்படி இருக்கும் என்பது எனக்குப் புரிகிறது, பாரதி. எவ்வளவு பிரியமான உறவினர் என்றாலும் அவர்கள் மெள்ள மெள்ள எப்படி மாறுவார்கள் என்பதும் எனக்குத் தெரியும். என் கணிப்பு சரியா என்று விசாரித்தும் தெரிந்து கொண்டேன். இங்கேயே இருந்து மனதை மேலும் ரணப்படுத்திக் கொள்வானேன்? அதை விட...

''பாரதி, இங்கிருந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில் நம்... எங்களுக்கு ஒரு பண்ணை இருக்கிறது. விவசாயப் பண்ணை. வாழை, தென்னை என்று பயிர் செய்வது. ஒரு புறம் பழ மரங்களும் உண்டு. இடையூறு இல்லாமல் படிக்க வேண்டு மென்றால், என் தங்கை அங்கே போய்விடுவாள். இன்னும் இரண்டு நாட்களில் அவளுக்கு ஸ்டடி ஹாலிடேஸ் தொடங்குகி றது. நீயும் அவளோடு ஒரு மாதம் அங்கே தங்கினால்... அந்த இயற்கைச் சூழ்நிலையும், சுத்தமான காற்றும், ஓய்வும் உனக்கு நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது.''

''அங்கே உங்கள் தனிமையைக் கலைக்க யாரும் வரமாட் டார்கள் - நான் உட்பட.''

''வேலைக்கு காவலுக்கு ஆட்கள் இருப்பதால் பாதுகாப்பாக வும் இருக்கும்''

அவன் சொல்லச் சொல்ல அப்படி ஓர் இடத்தில், ஒடிப்போய் ஒளிந்து கொள்ளலாம் என்று நினைத்தது ஞாபகம் வந்தது பாரதிக்கு. ஆனால்...

ரத்தத் தொடர்புள்ள சொந்தக்காரர்களே மாறிவிட்ட போது இவனை எப்படி நம்புவது? பெற்றோர் மறைந்தபோது இவன் தோன்றாத் துணையாக நின்று எத்தனையோ உதவிகள் செய்த போதும், இப்போது இவன் கூறுவது அவளது நிம்மதிக்காக மட்டுமாய் இருப்பது சாத்தியம் தானா? தன் காரியத்துக்குப் பொய்யும் உரைப்பவன் தானே இவனும்? இப்போதும் ஏதேனும் சுயநலம் இருக்குமா?

அவள் முகத்திலேயே பதிந்திருந்த அவனது விழிகளில் தன் கேள்விகளுக்கு பாரதி பதிலைத் தேடிய போது ஜீவானந்தன் சொன்னான், ''பாரதி முன்பு நான் 'தாத்தா' பற்றி சொன்னது முழுவதும் பொய்யல்ல. கம்பெனியின் வெளிநாட்டு 'பார்ட்னர்'க ளில் ஒருவர் மிகவும் வயதானவர். எல்லோருமே அவரைச் செல்லமாக 'கிராண்பா' என்றுதான் அழைப்பர். சென்ற முறை ஜெர்மனி சென்றிருந்தபோது உன் முழு கச்சேரி கேசட் ஒன்று - ஞான வினாயகனே சரணத்தில் தொடங்கி, லால்குடியின் தில்லானாவோடு முடிப்பாயே, அந்த கேசட் கொண்டு போயிருந் தேன். அவர் ரொம்ப ரசித்துக் கேட்கவும், சவுடாலாக விழாவில் உன் கச்சேரியை வைப்பதாகச் சொல்லி விட்டேன். முக்கியமாக உன் கச்சேரியை நேரில் கேட்க வேண்டுமென்றே இந்த விழாவுக்கு அவர் வந்தார். ஆனால், நீ மறுத்த விதத்தில் முதலில் என்னால் இதை விளக்க முடியவில்லை.

அவரது ஆசையை நிறைவேற்ற வழியில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்த போதுதான் நீயாகவே என் பேச்சை வேறு விதமாகப் புரிந்து, டிரைவர் தாத்தாவை நிஜத் தாத்தா என்று எண்ணிக் கச்சேரி செய்ய இசைந்தாய். முதலில் கச்சேரி நடக்கட்டும். பிற்பாடு விளக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால்...

''பாரதி, இப்போதும் உன் மன நிம்மதிக்காக மட்டுமாக நான் இந்த ஏற்பாட்டைச் செய்யவில்லை. அன்று... இந்தத் 'தாத்தா' உண்மையை உன்னிடம் நான் சொல்லியிருந்தால், நீ அப்படி ஆத்திரமுற்று இடையில் கிளம்பியிருக்க மாட்டாயோ, அடுத்து இருப்பு கொள்ளாமல் உன் பெற்றோர் கிளம்ப நேர்ந்திராதா என்று என்னுள் ஒரு வேதனை. அதற்குப் பிராயச்சித்தமாகவும் தான் இந்த அழைப்பு.''

''என் பேச்சை நம்பி வருவதும், நம்பாமல் மறுப்பதும் உன் விருப்பம், பாரதி.''

அவளது விழிகளை நேராகப் பார்த்தபடி அமர்ந்த குரலில் அவன் பேசிய போது அதை நம்பாதிருக்க முடியவில்லை. ''நான் வருவதால் உங்கள் தங்கை வினயாவின் படிப்புக்கு இடையூறாய் இராதே?'' என்று கேட்டு, தன் சம்மதத்தைத் தெரியப்படுத்தினாள்.

முகம் மலர, ''இடையூறா? வினு உற்சாகத்தில் குதிக்கப் போகிறாள்'' என்று உரைத்தான் அவன்.

ஆனால், ஓசியில் விருந்துண்ணும் இரத்தக் காட்டேறி உறவினர்கள் அவளைப் போக விடுவார்களா?

''என்ன வாட்டம்?'' என்று அவன் கேட்கவும் பாரதி திடுக்கிட்டுப் போனாள்.

இவன் என்ன அவள் முகத்தையேவா கவனித்துக் கொண்டிருக்கிறான்?

இனம் புரியாத வகையில் நெஞ்சு படபடத்து முகம் சூடாயிற்று அவளுக்கு. எப்படியோ சமாளித்து, ''எ... என்ன துணி மணி எடுத்து வைக்க வேண்டும் என்று யோ... யோசித்தேன். எப்போது கிளம்ப வேண்டும்?'' என்று மெல்ல நிதானப்பட்டு விட்ட குரலில் வினவினாள் அவள்.

''நாளனன்று இதே வேளையில் இங்கே வந்து அழைத்துச் செல்லட்டுமா?''

சற்று யோசித்து, ''இல்லை. நானே வருகிறேன்'' என்றவளின் விழிகளில் அடக்கவோ மறைக்கவோ முயலுமுன், சட்டென நீர் திரண்டு வழிந்து விட்டது.

அப்பளமாய் நொறுங்கி விட்டிருந்த கார் அவனுக்கும் நினைவு வர அவளது கண்ணீரை ஒரு கையாலாகாத்தனத்துடன் சில வினாடிகள் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ஜீவானந்தன்.

இன்ஸ்யூரன்சில் பணம் பெறுவதற்கான ஏற்பாடுகளை அவன் செய்துவிட்டிருந்தான். ஆனால், அப்போது அவள் வீட்டில் கார் இல்லையே.

''சாரி'' என்று அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டாள் பாரதி. ''நான்... நானே டாக்சியில் வந்து விடுகிறேன்'' என்றாள் முடிவாக.

மறுத்து வாதாடி அவளை வேதனைப்படுத்த மனம் இல்லாமல் விட்டுக் கொடுத்தான் ஜீவானந்தன்.

ஜீவானந்தன் வந்தது, பேசியது, சென்றது எதுவும் தெரியாமல் கண்டபடி படுத்து உறங்கிக் கொண்டிருந்த உறவினர்களை சிறு வெறுப்புடன் நோக்கினாள் பாரதி. இங்கித மற்றவர்கள். இதனால் தான் அப்பா இவர்களை அதிகம் சேர்த்து கொண்டதில்லையோ?

கிளம்புவது பற்றி அவளுடைய அரும்பெரும் உறவினர்களிடம் பாரதி மூச்சுக்கூட விடவில்லை.

ஆறுமுகத்தையும் சமையல்காரியையும் மட்டும் அழைத்து, கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, ''இங்கே என்னால் சகிக்க முடியவில்லை. அதனால் ஒரு சினேகிதி வீட்டில் ஒரு மாதம் தங்கிவிட்டு - வரப்போகிறேன். ஆறுமுகம் இந்தப் பணம் முழுவதையும் வெளியே காட்டிவிட வேண்டாம். இவர்கள் இருக்குமட்டும் சாதாரணமாக, ஒரு நிதானத்துடன் சமைத்துப் போடுங்கள். கிளம்பிச் சென்றால் தடுக்க வேண்டாம். எந்தக் காரணம் கொண்டும் நான் திரும்பி வரும் சமயம் பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம். மற்றபடி வீட்டு விவகாரங்களை அவ்வப் போது நானே எப்படியாவது தெரிந்து கொள்வேன்'' என்று கூறி, அவளது அறையையும் பெற்றோரின் அறையையும் பூட்டிக் கொண்டு கிளம்பி விட்டாள் பாரதி.

டாக்சி ஜீவானந்தனின் வீட்டை நெருங்க நெருங்க அவளுக்கு உள்ளூர உதறத் தொடங்கியது. எந்தவித சொந்தமும் இல்லாத பெண், 'இம்'மெனுமுன் ஓடி வந்து நிற்கிறாளே என்று அவனுடைய பெற்றோர் தன்னைத் தப்பாக நினைப்பார்களே என்று கவலைப்பட்டாள்.

ஆனால் அவர்கள் முகமலர்ச்சியோடு அவளை வரவேற்றதோடு, இப்படி ஒரு கலையரசியோடு பழகும் வாய்ப்பு தங்கள் மகளுக்குக் கிட்டியதற்காக சந்தோஷமும் காட்டி அவளது கவலையை அகற்றினர். இந்த வீட்டுக்கு நீ வேண்டப்பட்டவளே என்பது போல் அவர்கள் நடந்து கொண்ட விதத்தில், பாரதி பெரும் நிம்மதி அடைந்தாள்.

6

'காம்யக வனத்து' வாசம் பாரதிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

இடத்துப் பெயர் சற்றே குழம்ப யோசித்து விடை கண்டுபிடித் தாள் அவள். 'காம்' என்கிற ஆங்கில வார்த்தைக்கு 'அமைதி' என்று அர்த்தம். 'அகம்' என்றால் வீடு. வனம் என்றால்... சுற்றிலும் காடு மாதிரி இல்லை என்றாலும் மரம், செடி, கொடி என்று பயிரிட்டு இருப்பதால் 'காம்யக'த்தோடு வனத்தையும் சேர்த்துக் கொண்டார்கள் போலும் என்று முடிவு செய்து தன் கண்டுபிடிப்பை வினயாவிடம் சொல்லிச் சரிபார்க்க முனைந்தபோது அவள் விழுந்து விழுந்து சிரித்து விட்டுச் சொன்னாள்.

''நம் நாட்டு இதிகாசங்கள் பாரதி! ராமாயணம், மகாபாரதம்! ஒன்றுமே நீங்கள் படித்ததில்லையா? மகாபாரதத்தில் பாண்டவர் கள் வனவாசம் சென்றபோது தங்கியிருந்த காடுகளில் ஒன்று காம்யகவனம். இது காடு இல்லையென்றாலும் சுற்றிலும் மரங்கள் இருப்பதோடு மக்கள் நடமாட்டம் இல்லாமல் ஒதுக்குப்புறமாகவும் இருப்பதால் அம்மா இந்தப் பெயர் வைத்தார்களாம்'' என்று விளக்கினாள் வினயா.

''உனக்கு சாரி, உங்களுக்குத் தெரிகிறேதே'' என்று அதிசயித் தாள் பாரதி.

''ப்ளீஸ் மரியாதைப் பன்மை வேண்டாம், பாரதி. நான் உங்களைவிட சின்னவள்தானே. நீ என்றே சொல்லுங்கள். வீட்டில் உறவில் எல்லோருக்கும் நான்தான் சின்னவள் என்பதால் எல்லோ ரும் நீ என்றே அழைத்துப் பழக்கமாகி விட்டதா, இந்த நீங்கள், வாங்கள் ஒரு மாதிரி இருக்கிறது. அதனால் இனிமேல் 'நீ' தான்... சரிதானா? ம்ம்?'' என்று தலையைச் சரித்து, கொஞ்சதலும் கெஞ்சதலுமாக அவள் கேட்கவும் பாரதியும் ஒப்புக் கொண்டாள்.

''ஆனால் இதெல்லாம் எப்படித் தெரியும் என்று இன்னமும் சொல்லவில்லையே!''

''சொல்லுகிறேன். நான் சின்னப்பிள்ளையாக இருந்தபோது இரவுகளில் அம்மா கதை சொல்லித் தூங்க வைப்பார்கள். அண்ணன் சிறுவனாக இருந்தபோதும் அப்படித்தானாம். ஆனால் சொல்வது எல்லாம் நம் நாட்டுக் கதைகள்தான். அதில் முக்கியமா கச் சொன்னது மகாபாரதமும் ராமாயணமும்தான்... உங்கள் அம்மா ஆங்கிலக் கதைகள் தான் சொல்லுவார்களா?'' என்று விசாரித்தாள் சிறியவள்.

''ஊகூம். கதையே கிடையாது. வீணை, வீணை பற்றிய விபரங்கள், வீணை கேசட்டுகள் கேட்டபடிதான் தூங்கப் போவது வழக்கம். ஏழெட்டு வயதிலேயே வீணையைப் பற்றிய விபரங்கள் எனக்குத் தலைகீழாக அத்துபடி. மெட்டுகள் எத்தனை, தாளத்தந்தி கள் என்ன 'டென்ஷ'னில் இருக்க வேண்டும். வீணைத் தந்திகளை எந்த அளவுக்கு முறுக்கினால் வாசிக்க இலகுவாகவும், வாசித்துக் கேட்க இனிமையாகவும் இருக்கும். இத்யாதிதான். பாரதம், ராமாயணம் எல்லாம் மொத்தமாக ஒரு கதைச்சுருக்க அளவில் தான் அறிமுகம். இப்போதானால் தெரிந்து கொள்ளவில்லையே என்றிருந்தது. திரும்பவும் சென்னை சென்றதும் இதுபற்றிய புத்தகங்கள் வாங்கிப் படிக்க வேண்டும்'' என்று கூறும்போதே சென்னை நினைவில் அவள் முகம் வாடியது.

பாரதியின் முகவாட்டத்தைக் கவனியாதது போல, ''சென் னைக்குப் போன பிறகுதான் படிக்க வேண்டும் என்பது இல்லை, பாரதி. இங்கேயே ஓர் அலமாரியில் அம்மாவுக்குப் பிடித்த புத்தகங்கள் ஒரு செட் இருக்கின்றன. அவர்கள் இங்கே வரும் போது படிப்பதற்காக வாங்கி வைத்தவை. அதில் கட்டாயமாக ராஜாஜியின் 'வியாசர் விருந்தும்' 'சக்கரவர்த்தி திருமகனும்' இருக்கும். 'கல்கி'யின் புத்தகங்களும் இருக்கும். எடுத்துப் படித் துப் பாருங்கள்'' என்றாள் வினயா. ''பாருங்கள் பாரதி, இனிமேல் முழுவதும் மாந்தோப்புதான். பங்கனபள்ளி, மல்கோவா, ருமானி... என்று வகைவகையாகப் பயிர் செய்திருக்கிறார்கள்.''

முதல் நாள் பெண்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு வந்து, பண்ணை ஆட்களுக்குப் பாரதியை அறிமுகம் செய்து விட்டு ஜீவானந்தன் சென்று விட்டான்.

அதன் பின் தினமும் காலையில் 'வாக்கிங்' செல்வது என்ற பெயரில் பண்ணையின் ஒவ்வொரு பகுதியாகப் பாரதிக்குச் சுற்றிக்காட்டினாள் வினயா.

தன்னிலும் சின்னவளாக இருந்தபோதும், பார்வைக்கு வெகுளியாகவே தோன்றிய போதும் வினயாவுக்கு நிறைய விஷயங்கள் தெரிந்திருப்பதை அறிந்து ஆச்சரியப்பட்டாள் பாரதி. அவளை அப்படி வளர்த்திருந்த அவளுடைய தாயாரிடமும் பாரதிக்குப் பெருமதிப்பு உண்டாகி விட்டது.

வினயாவின் குறிக்கோளான படிப்புக்கு இந்த 'உலாவல்'கள் இடையூறாகி விடக்கூடுமே என்று முதல்நாள் 'வாக்கிங்'கின் போதே பாரதி கவலை தெரிவித்தாள்.

''ஊகூம். கிடையவே கிடையாது பாரதி'' என்று அழுத்தத்துடன் மறுத்தாள் வினயா. ''காலைக் காற்று முகத்தில் மோத நடப்பது எப்போதுமே எனக்குப் பிடிக்கும். உடம்புக்கு நல்லது என்று அம்மா சின்ன வயதிலேயே பழக்கி விட்ட பழக்கம். அத்தோடு காலை நேர 'வாக்கிங்'கில் இந்த இடங்களை எல்லாம் உங்களுக்குக் காட்டி விட்டேன் என்றால் பிறகு நீங்கள் விரும்புகிற போது நீங்கள் தனியாகவே இங்கே உலாவர வசதியாக இருக்கும் இல்லையா?''

இந்தக் காலை நேர உலாவலோடு சரி; அதற்கு மேல் உன்னோடு அலைந்து திரிந்து என் படிப்பை வீணாக்கிக் கொள்ள மாட்டேன் என்று எவ்வளவு நாசூக்காகச் சொல்லுகிறாள் இந்தப் பெண்!

மீண்டும் அவளுடைய தாயரிடம் மதிப்பு ஏறிற்று பாரதிக்கு.

சொல்லப் போனால் பாரதிக்கும் இந்த ஏற்பாடு வசதியாகத் தான் இருந்தது.

இளங்காலை நேரத்தில் பல்வகைப் பறவை இனங்களின் ஒலியோடு துயில் எழுவதும், காலைச் சிலு சிலுப்பில் நடப்பதும், காலை உணவின் பின் அவளுக்கென்று கொடுக்கப்பட்டிருந்த அறையில் அமர்ந்து ஏதாவது புத்தகம் படித்தபடி பாட்டு கேட்பதும், அது அலுத்தால் வாய்க்கால் நீர் சலசலத்து ஓட நீர் பாய்ச்சுவதைப் பார்த்தபடி மீண்டும் தோப்புகளூடே நடப்பதும் ஒய்வெடுப்பதுமாகப் பொழுது அமைதியாகக் கழிந்தது.

இடையிடையே பெற்றோரின் நினைவு அடிக்கடி வரத்தான் செய்தது. பெரும் ஏக்கமாகவும் இருக்கத்தான் செய்தது. ஆனால் அவள் வீட்டில் போலத் திரும்பிய இடங்களில் எல்லாம் அங்கங்கே பெற்றோரோடான ஏதாவது சம்பவம் நினைவு வந்து, அவளைத் துன்புறுத்தவில்லை. அவ்வப்போது ஆற்றமாட்டாமல் அழுதாள் தான்.

ஆனால் உடனேயே தோப்புப் பக்கம் சென்றுவிட்டால் அங்கே சுதந்திரமாகப் பறந்த தென்னைமரக் கிளிகளும், மஞ்சள் கண் மைனாக்களும், மாந்தோப்புக் குயில்களும் தேன் சிட்டுகளும் குரலும் தோற்றமுமாக அவள் மனதை மாற்றின.

அனாவசியமான தொல்லைகளோ, துன்பங்களோ இல்லாத தால் மெல்ல மெல்ல பாரதியின் மனம் அமைதியுறத் தொடங்கியது.

கீழே உதிர்ந்து கிடந்த ஒரு தென்னங்குரும்பலைக் கரம்பி அதன் துவர்ப்பை ரசித்தபடி, எங்கோ மறைந்திருந்து கூவிய வரிக்குயிலைக் கண்ணால் கண்டுபிடித்துவிடும் ஆர்வத்தோடு தேடியவாறே நடந்து கொண்டிருந்தாள் பாரதி.

அருகிலிருந்த மோட்டார் அறையிலிருந்த பம்பு செட் திடுமென உயிர்பெறவே, ஆவலோடு அங்கே திரும்பினாள்.

அருகே, பாசனத்திற்காக அமைக்கப்பட்டிருந்த பெரிய தொட்டிகளில் அருவியென நீர் கொட்டுவதையும், சிதறும் நீர்த் திவலைகளில் சூரிய கிரணங்கள் படுகையில், ஒளி ஊடுருவலின் விதிப்படி ஒளியானது பல வண்ணங்களாகப் பிரிய, நீர்த்துளிகள் வைரங்கள் போலப் பளபளப்பதைக் காண அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

ரசனையோடு பார்த்துக் கொண்டு இருக்கையில், மோட்டார் அறையிலிருந்து, ஒரு திருடனைப் போல மெல்ல அடியெடுத்து வைத்து ஜீவானந்தம் வருவதைக் கண்டு அவள் அதிசயித்துப் போனாள்.

7

அதற்குள் பாரதியைப் பார்த்துவிட்ட ஜீவானந்தனின் முகத்தில் அசடு வழிந்தது. ''சாரி, பாரதி'' என்று அவன் வருத்தம் தெரிவிக்கவும் அவளுக்கு மேலும் ஆச்சரியமாகிப் போயிற்று.

விழிகள் மேலும் வியந்து விரிய, ''ஏன்? எதற்கு சாரி?'' என்று வினவினாள் அவள்.

''கொடுத்த உறுதியை மீறியதற்காகத்தான். இந்த பம்பு செட் ரிப்பேராகி விட்டதாகத் தகவல் வந்தது. நானே பார்த்துவிடக் கூடிய விஷயம்தான். இதையும் சரி பண்ணிவிட்டு, கொஞ்சம் கணக்குகளையும் பார்த்துவிட்டு, வந்தது தெரியாமல் ஒசைப்படாமல் திரும்பிச் சென்று விடவேண்டும் என்று தான் நினைத்தேன். அதற்குள் நீ பார்த்து விட்டாய்... வந்து... வார்த்தை மீறினேன் என்று கோபமா?'' என்று சற்று கவலையாகவே விசாரித்தான் ஜீவானந்தன்.

''சேச்சே'' என்று குரலாலும் பாவத்தாலும் மறுத்தாள் அவள்.

''கொஞ்சங்கூட?'' என்று துருவினான் அவன்.

''ஊகும். கொஞ்சம் கூட இல்லை'' என்று ஜிமிக்கி அசையத் தலையசைத்தாள் அவள்.

''ஓ... அப்படியானால்... நாளை ஞாயிற்றுக் கிழமை. நான் நாளை முழுவதும் இங்கே தங்கிவிட்டுப் போக உன் அனுமதி கிடைக்குமா?'' என்று கேட்டான் ஜீவானந்தம்.

''என்ன பேச்சு, இது, ஜீவானந்தன்? இது உங்க வீடு. இங்கே நீங்கள் தங்குவதற்கு ஏன் அனுமதி கேட்க வேண்டும்?'' என்று கேள்வியையே ஆட்சேபித்தாள் பாரதி.

''ம்ம்... கோர்ட்டில் கேள்வியை மாற்றி வேறுவிதமாய்க் கேளுங்கள் என்பார்கள். அது மாதிரி மாற்றிக் கேட்கிறேன். நான் இங்கே தங்குவது உனக்கு வெறுப்பாக இல்லாதிருந்தால்...''

இடையில் குறுக்கிட்டு, ''நான் ஏன் வெறுக்க வேண்டும்?'' என்று வினவினாள் பாரதி.

''வெறுக்கக் காரணம் இல்லை... என்கிறாய்?''

''அப்படியானால்... தங்கினால்... மகிழ்ச்சிதான்?''

சும்மா பேச்சை வளர்க்கவென்று பேசுவது போல இலகுக் குரலில் அவன் கூறவும் அவளும் இளகி, அதே குரலில், ''ஆமாம்!'' என்றவள் அவனது விழிகள் பளிச்சிடவும், ''உங்கள் தங்கை என் மனதை மிகவும் கவர்ந்துவிட்டாள். அருமை அண்ணன் கூடவே தங்கினால் அவளுக்கு மகிழ்ச்சியாகத்தானே இருக்கும்? அவளது மகிழ்ச்சி என் மகிழ்ச்சியல்லவா?'' என்று கன அக்கறையோடு விளக்கம் கூறினாள்.

அவன் தோல்வியை ஒப்பிச் சரணடைந்தாற் போலக் கைகளைத் தூக்கி நகைக்கவும், கூடச் சேர்ந்து சிரித்தபடி அவன் முகத்தை ஏறிட்டவள் திகைத்தாள்.

கண்களில் ஒளியும், கண்ணோரத்துச் சிரிப்புச் சுருக்கங்களும், நேர் நாசியும், பிரிந்து விரிந்த வடிவான உதடுகளின் இடையே பளிச்சிட்ட வெண் பற்களும்... கல்லில் பொறித்தாற் போல அவள் மனதினுள் ஆழப் பதிந்தன.

இந்தத் தோற்றம் என்றேனும் மங்கக் கூடுமா?

அவன் பார்வையில் கூர்மை கூடுவதை உணர்ந்து, சட்டெனத் திரும்பி, ''வாருங்கள். வினயாவிடம் போகலாம்'' என்று வீடு நோக்கி நடக்கத் தொடங்கினாள் பாரதி.

சிறுமுறுவலுடன் பின் தொடர்ந்தான் ஜீவானந்தன்.

அன்றையக் காலைப் பொழுது வழக்கத்தைவிட மிகவும் பொலிவுடன் புலர்வதுபோல உணர்ந்தாள் பாரதி. எங்கேயிருந்தோ கூவிய குயில்கள் ஒன்றிற்கொன்று பதில் கொடுத்துக் கொள்வதைக் கேட்டு மகிழ்ந்தவாறே எழுந்தாள்.

காலைக் காஃபியின் போது ஜீவானந்தனை காணாதது கொஞ்சம் ஏமாற்றத்தை அளித்தபோதும், 'இரவு வெகுநேரம் கணக்குகளைப் பார்த்து முடித்திருப்பான்; சீக்கிரம் எழ முடிந்திராது' என்று தனக்குத்தானே சமாதானமும் சொல்லிக் கொண்டாள்.

வழக்கம்போல வினயாவோடு உலாவச் சென்ற போது ஓர் இனிய அதிர்ச்சி. அந்தப் பெரிய தொட்டி நிறைய நீர் நிரப்பி அதில் மீனாய் நீந்திக் கொண்டிருந்தான் ஜீவானந்தன்.

இவர்களைக் கண்டதும் புன்னகையோடு தொட்டியிலிருந்து வெளியேறி வந்தான்.

அவனது வெற்று மார்பையும், கட்டான உடலையும் பார்க்கையில் பாரதிக்கு என்னவோ செய்தது. அவசரமாகப் பார்வையைத் திருப்பிக் கொண்டு தன் தடுமாற்றத்தை மறைக்க எதையோ பேசலானாள். ''இங்கே... ஊருக்கு இவ்வளவு தள்ளி இருப்பது ஆ.... ஆபத்தில்லையா? திருடர்கள்.... வந்து இந்த... கொள்ளைக் காரர்கள் பத்துப் பேராய்ச் சேர்ந்து வந்தால்...'' என்று அப்போதைக்கு வாய்க்கு வந்ததை சொல்லத் தொடங்கினாள்.

''ஊகூம். பயமே கிடையாது, பாரதி'' என்றாள் வினயா.

பாரதியின் அருகே வந்து, ''அதோ பார்த்தாயா?'' என்று தூரத்தில் ஒரு மரக்கிளையைக் காட்டினான் ஜீவானந்தன்.

மரக்கிளையில் ஏதோ கூடாரம் போலத் தென்படவும், ''என்ன அது?'' என்று விசாரித்தாள் பாரதி.

''பாதுகாப்புப் பரண்'' என்ற ஜீவானந்தன், தங்கையிடம் திரும்பி, ''நீ வேணுமானால் போய்ப்படி, வினயா. நான் பாரதிக்கு அந்தப் பரனை காட்டி விட்டு வருகிறேன்'' என்று தங்கையை அனுப்பிவிட்டு, ஒரு டவலை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு பாரதியை அழைத்துச் சென்றான் ஜீவானந்தன்.

''இதே போல அந்தக் கோடியிலும் இருக்கிறது பாரதி. இரவும் பகலும் மாற்றி மாற்றி அதில் இரண்டு பேர் இருந்து கொண்டே இருப்பார்கள். மிலிட்டரியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள். துப்பாக்கியும் லைசன்சும் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். வாசல் கேட்டில் இரண்டு பேர். சுற்று மதிலின் உயரம் பார்த்தாயா? மேலே கண்ணாடித் துண்டு பதித்திருக்கும். மதிலோடு காவல் நாய்கள் ஆறு சுற்றிக் கொண்டே இருக்கும்...''

''ஓ! வினயா எனக்குப் பழக்கிவிட்டவை காவல் நாய்களா? பெரிதாக இருக்கின்றனவே என்று நினைத்தேன்.''

''காவலுக்குத்தான். இத்தனை இல்லாமல் வினுவை இங்கே தனியே வெறும் சமையல்காரம்மா தயவில் அம்மா அனுப்பி வைப்பார்களா, என்ன?'' என்றான் அவன்.

''வினுவும் நீங்களும் சொல்வதைக் கேட்க கேட்க எனக்கு உங்கள் அம்மா மேல் ரொம்பவும் மரியாதை உண்டாகிறது. மிஸ்டர் ஜீவானந்தன்'' என்றாள் பாரதி.

''என்ன ஓரவஞ்சனையடா, அப்பா!'' என்றான் ஜீவானந்தன். அவள் திகைத்து நோக்கவும், ''எனக்குப் பிறகு பார்த்துப் பழகிய வள் 'வினு' ஆகிவிட்டாள். நான் மட்டும் மிஸ்டர் ஜீவானந்தனா? இந்த அநீதியை எதிர்த்து மந்திரிக்கு மனுக் கொடுக்க வேண்டியது தான்'' என்றான் தொடர்ந்து...

பதில் சொல்ல மாட்டாமல் அவள் தரையைப் பார்த்தபடி மெல்ல அடியெடுத்து வைக்கவும், ''நண்பர்களுக்கு நான் ஜீவா என்றேனே பாரதி. நான் உன் நண்பனல்லவா?'' என்று கேட்டான் அவன்.

''நான் உன் அப்பனல்லவா'' என்பதுபோல மருவிக் கேட்டது பாரதிக்கு.

முகம் சிவக்க, தடுமாற்றத்துடன் வேகமாக எட்டு எடுத்து வைத்தபோது, பாதையில் கவனம் வையாத காரணத்தால், வெளியே நீட்டிக் கொண்டிருந்த மரவேரில் கால் தடுக்கிக் கீழே விழப் போனாள் அவள்.

உடுக்கை இழந்தவன் கைபோல, அவள் விழுமுன் அவசரமாகத் தாங்கினான் ஜீவானந்தன்.

அவள் கீழே விழாமல் தடுத்தவனுக்கு அவளை விடுவிக்க வேண்டும் என்பது தோன்றவில்லை. விலக வேண்டும் என்று அவளுக்கும் தோன்றாமல் அதே நிலையில் அவர்கள் இருவரும் நின்றது சில கணங்களாகவும் இருக்கலாம். சில நிமிடங்களாகவும் இருக்கலாம். ஒன்றை ஒன்று துரத்தி வந்த வேகத்தில், அருகே

இருந்த மரக்கிளையில் தாவி வேகமாக ஓடிய இரு அணில்கள் அவர்களது மோனத்தைக் கலைத்தன.

நினைவு வந்தாற்போல ஜீவானந்தன் அவளை விடுவிக்க, உள்ளூர வெட்கியபடி ''தா... தாங்க்ஸ்'' என்றாள் பாரதி.

அவனது கண்கள் ரகசியச் சிரிப்பில் பளபளக்கவும் அவசர மாக ''கீழே விழாமல் காப்பாற்றியதற்கு'' என்று சேர்த்துச் சொன்னாள்.

சிரிப்பு உதடுகளுக்கும் பரவ, ''உதவ காத்திருக்கிறேன் தேவி'' என்று பழைய கால ஆங்கிலேயர் பாணியில் இடுப்பு வரை முன்னே குனிந்து வணங்கினான் அவன்.

பேச்சுக்குக் கொஞ்சம் திணறிவிட்டு, ''உங்கள் வீட்டு மேடு பள்ளங்கள் உங்களுக்குத்தானே தெரியும்'' என்றாள் பாரதி சற்று மிடுக்கான குரலில். ஏதோ அவள் விழுந்ததன் காரணம் அந்த மேடு பள்ளங்கள் தான் என்பது போல.

''மா வேர்களை விட்டு விட்டாயே!'' என்று நகைத்து விட்டு, அதனால் இதற்கு - இனி விழாமல் இருப்பதற்கு ஒரே வழி இதுதான்'' என்று ஒரு கையை நீட்டினான் ஜீவானந்தன்.

''ஏனோ? நீங்கள் முன்னே நடந்து சென்றால் உங்களை அப்படியே பின்பற்றி வந்து விடுகிறேன்'' என்றாள், பாரதி.

''ஊகூம்... அடிமை மாதிரிப் பெண்ணை இரண்டடி பின்னே நடக்கச் செய்ய நான் ஒன்றும் பழங்காலம் அல்ல. அம்மணி'' என்று உடனே பதில் கொடுத்தவன், தொடர்ந்து, ''அதே சமயம் பெண்ணுக்குப்பின்னே அவளது முந்தானையைப் பிடித்துத் திரிகிற வனும் நானல்ல. எனவே அருகே, கையைப் பிடித்துக் கொண்டு நடந்து வருவது தான் உத்தமம்'' என்றான் அவன்.

''சொன்னபடி கேளாதவர்களை மிரட்டத்தான் இந்த மரவேர் களை இப்படி மேடுமேடாக வளர்த்து வைத்திருக்கிறீர் களாக்கும்?''

''ஊகூம்... இது அநியாயம்! மர வேர்களைக்கூடவா நான் வளர வைத்தேன்? அது கடவுள் அருளால்... அதாவது வேர் தானாக வளர்வதல்லவா... ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். கீழே விழுந்து விடாமல் இருப்பதற்காக கையைப் பிடித்துக் கொள் என்றால் அதற்கு என்ன பயம்?'' என்றான் அவன் கேலிக்குரலில்.

''பயம் என்று யார் சொன்னது?''

''பின்னே?'' என்று இன்னமும் மடக்காமலே வைத்திருந்த கையை அவள் பார்வையில் காட்டவும், ஒரு கணம் தயங்கிவிட்டுத் தன் கையை அவன் கையில் வைத்தாள் பாரதி.

'இல்லையில்லை, இனிக் கவனத்துடன் நடக்கிறேன்' என்று சிரித்த முகமாகவே ஒதுங்கி அவளால் நடக்க முடியும்தான். அவனும் அதற்கு மேல் வற்புறுத்துவது சந்தேகமே. ஆனால், கேலியும் சிரிப்புமாய் அந்த இனிய சூழ்நிலையை மாறவிட அவளுக்கு விருப்பம் இல்லை. எனவே விட்டுக் கொடுத்தாள். ஆனால் அவனோடு கைகோர்த்துச் செல்வது சுகமாக இருப்ப தைப் பிறகு புரிந்து கொண்டாள். தந்தையைத் தவிர ஆண் என்று இவன் கையை மட்டும்தான் பாரதி தொட்டிருக்கிறாள் என்று சொல்ல முடியாது. அவளுடைய பக்கவாத்தியக் காரர்களிலேயே மிருதங்கமும் கடமும் வாசிப்பவர்கள் ஆண்களே. சமயங்களில் எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒட்டி நிற்பது பிர்க்க முடியாத தாகி விடும். அத்தோடு கச்சேரி முடிந்ததும் பாராட்டவென்று வருபவர்களில் மற்ற மாநில மக்கள், வெளிநாட்டவர் இருப்பார் கள். அவர்கள் இயல்பாய்க் கைகுலுக்கக் கையை நீட்டும்போது, ''தமிழ் பண்பாட்டை காக்க வந்தவளே நான்தான்'' என்பது போலக் கைகுவித்துக் கொண்டு நில்லாமல், பாரதியும் தயங்காமல் கை கொடுத்து விடுவாள். அதில் பிழையிருப்பதாக அவள் எண்ணியதில்லை. அதே போல, பெரிதாக நினைப்பதற்கும் அதில் ஏதும் இருப்பதாக அவளுக்குத் தோன்றியதில்லை.

ஆனால் இது வேறு விதம். சர்வ நிச்சயமாக வேறுதான்.

''என்ன, திடீரென்று மவுன விரதமா?'' என்று ஜீவானந்தன் வினவவும் நடப்புக்கு வந்து, ஏதேதோ விஷயங்களைத் தேடிப்பி டித்துப் பேசத் தொடங்கினாள் பாரதி.

பரண்மேல் ஏறிப் பார்த்தபோது, பழைய காலக் கோட்டை மதில்களில் மூலைக்கு மூலை அமைக்கப்படிருந்த காவல் கூடங்

கள் நினைவு வந்தன. காலம் மாறி விட்டாலும் நடப்பு மாற வில்லை. விஞ்ஞான முன்னேற்றத்தால் அன்றைய வில்லும் அம்பும் இன்றைய துப்பாக்கிகளாக உருவெடுத்திருக்கின்றன. அவ்வளவுதான்.

திரும்பி வருகையில் ஜீவானந்தனோடு தன் எண்ணத்தைப் பகிர்ந்து கொள்கையில், அவன் இல்லாத காலரைத் தூக்கி விடுவது போலப் பாவனையோடு "ஆக, என்னை ஒரு பெரிய ராஜா என்கிறாய்" என்று பெருமை காட்டினான்.

"பெரி ...ய்ய ராஜா! ராணி கூட இல்லை" என்று மட்டம் தட்டினாள் பாரதி.

"அதற்கு என்ன செய்யலாம்?" என்று அவளிடமே யோசனை கேட்டான் ஜீவானந்தன்.

"ம்... ம்...?" என்று யோசிப்பது போலப் பாவனை செய்து விட்டு, "எந்த ராஜகுமாரிக்காவது சுயவரம் நடக்கிறதா என்று தேடிப் போய்க் கழுத்தை நீட்டிப் பார்ப்பது" என்றாள் அவள் குறும்புப் புன்னகையுடன்.

"ம்கூம்.... அப்புறம் எனக்குப் பிடிக்காத எவளாவது என் கழுத்தில் மாலையைப் போட்டுத் தொலைத்து விட்டால்? எனக் குப் பிடித்த ராஜகுமாரியின் சுயவரத்துக்குத் தான் நான் போவேன்" என்று விளையாட்டைத் தொடர்ந்தான் அவன்.

"நீங்கள் போகலாம். ஆனால் அவள் உங்களை விட்டு விட்டு வேறு யார் கழுத்திலாவது மாலையைப் போட்டுவிட்டால்? அப்புறம் உங்கள் முகத்தில் படு அசடு வழியும்!" என்று சிரித்தாள் அவள்.

"விடுவேனா? பிருதிவிராஜ் போல என் ஆசை ராணியைத் தூக்கிக் கொண்டு குதிரையில் - இல்லையில்லை - ஹெலிகாப்டரில் பறந்துவிட மாட்டேன்? என்னை யார் என்று நினைத்தாய்?" என்று அவன் மார்தட்ட, இருவரும் சேர்ந்து சிரிக்கலாயினர்.

பாரதியின் முகத்தில் யோசனை படரவும், "என்ன பாரதி?" என்று ஜீவானந்தன் விசாரித்தான்.

லேசாகத் தலையசைத்து, "இல்லை... அப்பா அம்மாவுக்குப் பிறகு என்னால் என்றேனும் சிரிக்க முடியும் என்று நான் நினைத்ததே இல்லை... ஆனால் இன்றைக்கு..." என்றவளை இடைமறித்து, 'அது அய்யாவின் மகத்துவம். என் பெயரிலேயே ஆனந்தம் இருக்கிறது பார். அதிலும் ஜீவானந்தன். உனக்குள் இருக்கும் ஜீவனுக்கும் ஆனந்தம் நல்கும் பரமாத்மாவாக்கும்!" என்று பெருமையடித்தான் அவன்.

சின்னச் சிரிப்புடன் ஒத்துக் கொண்டவள், திருப்பி, அவனை நிமிர்ந்து நோக்கி, "நன்றி, ஜீவா" என்றாள் மெல்லிய குரலில்.

ஜீவானந்தனின் முகத்தில் பொருள் விளங்கா மாற்றம் ஒன்று பரவியது. அவளை நேராகப் பார்த்து "உன் நன்றிக்காக நான் எதையும் செய்யவில்லை, பாரதி" என்றான் அவன்.

"ம்? ஓ... சொன்னீர்கள், ஏதோ பிராயச்சித்தம்" என்று மீண்டும் பாதையை நோக்கித் திரும்பினாள் அவள். "அதற்காக என் மனதில் நன்றி உணர்ச்சி தோன்றக்கூடாது என்று இல்லை யே..."

நடக்கத் தொடங்கியவளைப் "பாரதீ..." என்று அழைத்து ஏதோ சொல்லத் தொடங்கியவன் சட்டென முகமும் குரலும் மாறினான். "திரும்பிப் போகும்போது மட்டும் உன் காலைத் தட்டிவிடாமல் ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று மரவேர்களுக் கும், மேடு பள்ளங்களுக்கும் அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கி றதாமா?" என்று கேலியாக வினவி அவன் கையை நீட்டவும் புன்னகையோடு அவன் கையோடு தன் கையை இணைத்துக் கொண்டாள் அவள்.

பாரதியின் நினைவுப் பெட்டகத்துக்கு இன்னொரு முத்தம் கிடைத்தது.

ஏதோ பேசிக் கொண்டு இருக்கையில், "நான் ஜீவா' என் தங்கை 'வினு' நீ? பாரதி என்று உனக்கு ஏன் பெயர் வைத்தார்கள் பாரதி? என்று விசாரித்தான் ஜீவா.

"ஏன் என்றால்? கலைமகள் போல வீணையோடான தோற் றத்திற்காக இருக்கலாம்..."

''அது தெரியும். இந்த 'பாரதி'யை செல்லமாகச் சுருக்கி அழைக்க வழியே காணோமே! பாரா, பாரு, பாதி... ஊகூம்.''

''என் பெயரை யாராவது கிறுக்குத்தனமாய் சுருக்கிக் கூப்பிட்டால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது'' என்று திட்டவட்டமாகக் கூறினாள் பாரதி.

''வருங்காலத்தில் காதலன் அல்லது கணவன் தான் மட்டுமாய் அழைக்கவென்று பெயர் தேடினால்?''

''அதுதான் எத்தனையோ இருக்கிறதே. கண்ணே, கண்மணியே, அன்பே, ஆருயிரே, டியர், டார்லிங்... என்று ..'' என்றாள் பாரதி அலட்சியமாக.

''இவைகளில் உனக்குப் பிடித்தது எது பாரதி?'' என்று கன அக்கறையாக அவன் கேட்டான்.

''அது எதற்கு உங்களுக்கு?''

''ஏதோ ஒரு விஷயம் தெரிந்து வைத்துக் கொண்டால் பிற்காலத்தில் பயன்படக்கூடுமே என்றுதான்'' என்று அப்பாவி போலக் கண்களை உருட்டினான் ஜீவா.

''ஆங்!...'' சில வினாடிகள் பாரதிக்கு மூச்செடுக்க முடியாது போயிற்று. உடனேயே, சமாளிக்கும் விதமாய், ''ம்ம்! என்று கையை ஒங்கிக் காட்டி அவள் மிரட்ட, சிரிப்பில் மற்றது மறைந்தது.

மறு ஞாயிறன்று காலை கட்டாயம் வருவதாக உறுதிகூறி சென்றான் ஜீவானந்தன்.

ஏதோ ஓர் இனிய பரபரப்பு உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் புகுந்து உந்துவதுபோல இருந்தது பாரதிக்கு. ஜீவானந்தனோடு கேலியும் கிண்டலுமாகப் பேசியதுபோல - எண்ணிப் பார்க்கையில் அவனோடு அப்படிப் பேசியது தானே தானா என்று அவளுக்கு ஆச்சரியமாகக் கூட இருந்தது - அதுபோலப் பேச வேண்டும், சிரிக்க வேண்டும், ஆட வேண்டும், பாட வேண்டும் என்றெல்லாம் தோன்றியது. வீணை வாசிக்க வேண்டும் போலக் கூட இருந்தது.

அவளது அருமை வீணை. அதைத் தொட்டு ஒன்றரை மாதங்களுக்கு மேல் இருக்குமே!

அவள் அமைதியற்றுச் சுற்றி வருவதைச் சற்று நேரம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் வினயா. பிறகு, ''இந்த வீட்டுப் பூஜையறை பார்த்தீர்களா, பாரதி?'' என்று வினவினாள். பாரதி பதில் கூறுமுன் அவளாகவே ''அதோ அந்த அறை, உள்ளே போய்ப் பாருங்கள். உங்களுக்குப் பிடிக்கும்'' என்றாள் ஒரு சிறுநகையுடன்.

தெய்வத்திரு உருவங்கள் சற்று அமைதி தரக்கூடுமோ என்று நினைத்தபடி வினயா காட்டிய அறைக்குள் சென்ற பாரதி பிரமித்துப் போனாள்.

8

பாரதியை அப்படிப் பிரமிக்க வைத்தது அங்கிருந்த வீணை! அவளது சொந்த வீணை! இங்கே எப்படி?

திரும்பி வினயாவை நோக்க அவள் சொன்னாள், ''அண்ணன் கொண்டு வந்தார். நீங்கள் வீணை வாசிக்க விரும்புவது போலத் தோன்றினால் மட்டும் காட்டச் சொன்னார். இப்போது அதுபோலத் தோன்றவே காட்டிவிட்டேன்'' என்று முறுவல் செய்தாள் அவள்.

நன்றியோடு நோக்கிவிட்டு வீணையிடம் சென்றாள் பாரதி. அவளது பெயர் வரைந்த உறையை அகற்றி, லேசாக நடுங்கிய விரல்களால் வீணையை வருடினாள். தந்திகளை மெல்ல மீட்டினாள். சில ஆரோகண ஆவரோகணங்களை மட்டும் வாசித்தாள். பிறகு மனதில் தோன்றியதெல்லாம் ஒலிவடிவமாக்கினாள்.

சுமார் ஒரு மணிநேரம் ஆசைதீர வாசித்துவிட்டு வெளியே வந்தால், வினயா அருகிலேயே ஒரு குஷன் நாற்காலியில்

அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. ''சாரி வினயா. உன் படிப்பைக் கெடுத்து விட்டேனா? இனிமேல் கதவை மூடிக் கொண்டு வாசிக்கிறேன்'' என்றாள் சமாதானமாக.

''வேண்டாம் வேண்டாம்'' என்றாள் வினயா. நானே 'ஸாச்சு ரேஷன் பாயிண்டு'க்கு வந்துவிட்டேன். இதற்குமேல் கொஞ்சம் இடைவெளி விடாவிட்டால் மேலே மூளை எதையும் ஏற்காது. இப்படி வேளைகளில் வழக்கமாகத் தோட்டத்தில் நடப்பேன். இன்று உங்கள் வாசிப்பு அதே புத்துணர்ச்சி தந்து விட்டது. அத்தோடு, இதுவாய்ப்பாட்டு, நாட்டியம் மாதிரி இல்லையே. நல்ல சினிமாப் படங்களில் பின்னணி இசை மாதிரி, கவனத்தைக் கெடுக்காமல் மனதுக்கு இதமாக இருக்கிறதே!''

''ஒன்று கேட்கலாமா, வினயா? நீ அங்கேயே இருந்து படித்திருக்கலாமோ பேசாமல் உன் அறையைப் பூட்டிக் கொண்டு இருக்க வேண்டியதுதானே?'' என்று கேட்டாள் பாரதி.

அவளுக்கு உள்ளூர ஒரு குமைச்சல். பிராயச்சித்தம் பண்ணு கிறேன் பேர்வழி என்று அதற்குச் சரியாக இந்தப் பெண்ணை இங்கே உட்கார வைத்து விட்டானோ என்று.

ஆனால், வினயா வேறு சொன்னாள், ''அங்கே இருந்தால் சினேகிதிகள் வந்து கொண்டே இருப்பார்கள். டெலிஃபோனிலா வது பேசுவார்கள். அப்புறம் சொந்தக்காரர்கள் வந்தால் அம்மா, அப்பாவிடம் பேசிவிட்டுப் போவோம் என்று போய்விட மாட் டார்கள். மகள் எங்கே, என்று கேட்டு என்னவாவது பேசி வளவளப்பார்கள். அவர்கள் மேல் தப்பு சொல்ல முடியாது. வீட்டுப்பிள்ளைகள் மேல் அக்கறை காட்டுவதுதான் மரியாதை என்று நினைத்திருக்கக்கூடும்.''

''அது சரிதான் இந்த அனுபவம் எனக்கும் நேர்வதுண்டு'' என்று ஆமோதித்தாள் பாரதி.

''அடுத்து, எனக்கே ஏதாவது கார்ட்டூன் படம் பார்க்க வேண்டும் போல வந்துவிடும். வீடியோவில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன் என்றால் கொஞ்சம் கொஞ்சம் படித்ததும் மறந்துவி டும். அதனால்தான் இங்கே வந்து விடுவது'' என்றாள் வினயா.

''இவ்வளவு பேசுகிறாய், சின்னப்பிள்ளை மாதிரி கார்ட்டூன் பார்ப்பேன் என்கிறாயே!'' என்றாள் பாரதி.

''கார்ட்டூன் படம் பார்க்க வயது என்ன? அப்பா அம்மா கூடப் பார்ப்பார்களே! 'டாம் அண்ட் ஜெரி' போட்டால் அம்மா கட்டாயம் வந்து உட்காருவார்கள். 'ஸ்னோ ஒயிட் ' கேசட் அங்கே நம் வீட்டில் - சென்னையில் இருக்கிறது. பிறகு ஒரு நாள் உங்களுக்குப் போட்டுக் காட்டுகிறேன். பாருங்கள். ஒரு தரம் பார்த்துவிட்டால் நீங்களே மறுபடியும் மறுபடியும் பார்க்கத் தொடங்கி விடுவீர்கள்'' என்றாள் வினயா!

பாரதி மேலே எதுவும் பேசவில்லை.

அவளுக்கு வினயா, சென்னையில் 'நம் வீட்டில்' சொன்னது மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது.

முதல் சொந்தமான பெற்றோரை இழந்த பிறகு, உறவால் வந்த அடுத்த சொந்தங்களை, சொந்தமென்று சொல்லக்கூட முடியாத அளவுக்கு மனதால் வெறுத்து விலக்கிவிட்ட பிறகு, வெறும் நட்பினால் மட்டுமே பாரதியை வினயா தன் சொந்த மாக்கி, தன் வீட்டையும் பொதுவாக்கி 'நம் வீடு' என்று கூறிய விதம் பாரதியின் நொந்த உள்ளத்தைக் குளிர வைத்தது.

வினயா மறுநாளே தன் படிப்புக்குள் புகுந்து கொண்டாள்.

வழக்கமான தோப்பும், தோப்பினூடே நடைபாதையும், கிளிகளும் அணில்களும் எல்லாம் அப்படியே தான் இருந்தன. போதாக்குறைக்கு வீணை வேறு இருந்தது. ஆனாலும் பாரதிக்குப் பொழுதை நெட்டித் தள்ள வேண்டியிருந்தது.

அடுத்த ஞாயிறு எப்போது வரும்?

ஒவ்வொரு நாளாக, ஒவ்வொரு மணியாக நெட்டித் தள்ளி, ஒருவாறாக ஒருவாரம் முடிந்து, ஞாயிறன்று ஞாயிறு உதயமா யிற்று.

காலையிலேயே வந்து விடுவதாகச் சொன்னவன், சுமார் பத்துமணியளவில் வந்து சேர்ந்தான். அவன் கூடவே ஒட்டிக் கொண்டு ஒரு பெண்ணும் - இளம்பெண் - வந்தாள், அப்போது

தான் ஃபேஷன் பரேடிலிருந்து அப்படியே கிளம்பி வந்தவள் போலத் தோற்றத்துடன்.

பதினைந்து சென்டி மீட்டர், 'ஹைஹீல்' செருப்புடன் காரிலிருந்து இறங்கி வந்து, தொத்தும் கிளிபோல ஜீவானந்தனின் தோளை உரிமையோடு பற்றிநின்ற பெண்ணைக் கண்டதும் பாரதிக்கு மயக்கம் போடாத குறைதான்.

யார் இவள்? ஜீவானந்தனுக்கும் இவளுக்கும் என்ன உறவு? பசைபோட்டு ஒட்டினதுபோல அவன் தோளோடு அப்படி ஒட்டிக் கொண்டு நிற்கிறாளே!

பாரதி கலங்கிப் போய்த் தூணைப்பிடித்துக் கொண்டு நிற்க, வந்தவர்கள் இருவரும் அவளை நெருங்கினர்.

''ஹலோ... வீணை பாரதியா?... நான் உங்கள் படம் பத்திரிகையில் பார்த்திருக்கிறேன்... அய்...யோ! எப்படித்தான் இவ்வளவு பெரிய வாத்தியத்தைத் தூக்கி வாசிக்கிறீர்களோ?'' என்று வியப்பு காட்டுவதாய் உடம்பைக் குலுக்கினாள் அவள்.

''தூக்குவதில்லை. குடம் கீழே தரையில் தான் இருக்கும்'' என்றாள் பாரதி உணர்ச்சியற்ற குரலில்.

''குடம்? என்ன குடம்?... டார்லிங்'' என்று தங்கையிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்த ஜீவானந்தனின் முகவாயைப் பிடித்துத் தன்புறம் திருப்பினாள் அந்த ஃபேஷன் பரேடு. ''வீணைக்குள்ளே குடம் இருப்பதாக பாரதி சொல்கிறாளே! நிஜம்மா... வினயா?'' என்று மூச்சு வாங்கக் கேட்டாள்.

தமிழ் அறியாதவள் போல நுனி நாக்கால், வார்த்தைக்கு வார்த்தை இடைவெளிவிட்டு, இடையிடையே பெரிய மூச்செடுத்து அவள் பேசியவிதம் பாரதிக்கு எரிச்சலூட்டியது. ஆனால் எரிச்சலுக்குக் காரணம் அந்தப் பேச்சு மட்டுமல்ல. ஜீவானந்தனை அவள் சொந்தமாய் தொட்டுப் பழகியவிதமும் கூட... யாரோ யாரையோ தொட்டால் நமக்கென்ன என்று அவளால் இருக்க முடியவில்லை. முந்தைய ஞாயிறன்று அவளது கையைப் பற்றி அவன் நடந்தது 'தனி' என்று நினைத்தாளே. இப்படிப் பெண்களின் கையைப் பிடித்துக் கொண்டிருப்பது இவனுக்குப் பழக்கம் போலத் தெரிகிறதே! பழக்கமா? அல்லது அவனுக்கு இதுதான் 'தனி'யா?

பாரதியின் மனம் குமைந்தது.

''டார்லிங், குடம் என்றால்... பாத்திரம் தானே? அவள் வீணையில் குடம் இருப்பதாகப் பாரதி சொல்கிறார்கள்... கு.... ம்மா பொய்தானே? வேடிக்கையாகத்தானே...'' என்று கிள்ளைக் குரலில் கொஞ்சலாகக் கேட்டாள் வந்தவள்.

''இல்லை மெய்தான். வீணையின் தலைப்புறம் பெரிதாக இருக்கும் பகுதியை குடம் என்பார்கள்'' என்றவன் முன்னே நகர்ந்து, ''பாரதி, இவள் என் தந்தையுடைய பிசினஸ் பார்ட்னருடைய மகள். பெயர் அபிநயா. பாரதியைத்தான் உனக்கு தெரிகிறதே'' என்று அறிமுகம் செய்து வைத்தான்.

''வணக்கம். வாருங்கள். என்ன சாப்பிடுகிறீர்கள்....'' என்று முறைமை விடாமல் உபசரித்தாள் பாரதி.

''அய்யோ....! இந்த வீட்டில் நீங்கள் என்னை உபசரிப்பதா? நான்.... முதலிலேயே கேட்டிருக்க வேண்டும். இங்கே உங்களுக்கு... எல்லாம் வசதியாக இருக்கிறதா? வேலையாட்கள் மரியாதையாக நடந்து கொள்கிறார்களா? இல்லையென்றால் சொல்லுங்கள். உடனே டிஸ்மிஸ் செய்து விடுகிறேன்'' என்று பாரதியை விருந்தாளியாக்கி உபசாரம் செய்தாள் அபிநயா.

இந்த வீட்டு வேலையாளை 'டிஸ்மிஸ்' செய்யும் அளவு இவளுக்கு உரிமை இருக்கிறதா? அயர்ந்து போனாள் பாரதி.

பண்ணை வீட்டுக் கணக்கரிடம் ஏதோ பேசியபடி ஜீவானந்தன் செல்ல அவனோடு ஒட்டிக் கொண்டே அபிநயாவும் போவதைப் பார்க்க மனம் இல்லாமல் மறுபடியும் திரும்பினாள் பாரதி.

அவளருகே வந்து நின்று, ''இந்த வீட்டு வேலையாளை இவள் 'டிஸ்மிஸ்' செய்கிறாளாமே? அம்மா அப்பா தவிர

அண்ணனுக்கும் எனக்குமே அந்த உரிமை கிடையாது. இவள் என்ன தைரியமாகப் பேசுகிறாள். பாருங்களேன்!'' என்று வினயா கூற, பாரதியின் முகம் சற்றே தெளிவடைந்தது.

ஆனாலும் உள்ளூர ஓர் உறுத்தல். தன் பின்னே ஜீவானந்தன் நிற்பான் என்கிற தைரியம் இல்லாமலா அபிநயா இவ்வளவு பேசுவாள்?

முந்திய ஞாயிறன்று ஜீவானந்தன் அவளோடு பழகிய விதத்தில் என்னனென்னவோ கற்பனைகளில் மிதந்து கொண்டிருந்த பாரதி இப்போது ஒரு பிடிப்பும் இல்லாமல் அந்தரத்தில் தொங்குவது போல உணர்ந்தாள். சில நாட்களாகப் படித்த இதிகாசங்களின் விளைவாகப் பாவம் திரிசங்கு ராஜா என்ன பாடுபட்டிருப்பான் என்று பரிதாபப்படத் தோன்றியது.

ஜீவானந்தனோடு சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்தால் பழைய திடம் தோன்றக்கூடுமோ என்று பார்க்கக்கூட வழியில்லாமல் அபிநயா ஒன்று ஜீவானந்தன் பின்னே சென்றாள்; அல்லது பாரதியோடு பேசிக் கொண்டிருந்தாள். எல்லோரும் சேர்ந்திருந்த போது அவளைத் தவிர மற்றவர்கள் பேசுவதை அவள் அனுமதிப்பதாகவும் இல்லை.

இவள் வேண்டுமென்று செய்கிறாளோ என்று எண்ணி வெறுக்கவும் வழியில்லாமல் உருகி வழிந்தாள்.

''பாரதி, உங்கள் பெற்றோர் சமீ....பத்தில் விபத்தில் செத்துப் போனார்களாமே! அய்யோ பாவம், நீங்கள்!.... எப்படித்தான் இருக்கிறீர்களோ?... நான் என் மம்மியிடம் சொல்லிவிட்டேன், 'நீ செத்துப் போகிறபோது நானும் கூடவே செத்துப் போவேன்'' என்று பேச்சின் முடிவிலும் ஒரு பெருமூச்சு விட்டாள் அபிநயா. தீயாய் எரிந்து கொண்டிருந்த துக்கம், தூண்டிவிட்டாற்போல ஆயிற்று பாரதிக்கு. இழப்புக்கு வருத்தம் தெரிவிப்பது வழமை தான். ஆனால் அவள் துக்கம் விசாரித்த நேரம் நால்வருமாக உணவருந்திக் கொண்டிருந்தபோது. சுவைபட தயாரித்திருந்த

உணவு பாரதியின் தொண்டையில் சாம்பலாய் சிக்கிற்று. துப்பவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறிபடியே அபிநயாவைப் பார்த்தாள்.

பச்சாதாபம் காட்டிப் பேசிய அவளது பளிங்கு விழிகளின் பின்னே என்ன இருக்கக்கூடும்?

''இது சாப்பிடும் போது பேசுகிற பேச்சல்ல, அபி'' என்றான் ஜீவானந்தன்.

உடனே கழிவிரக்கமே உருவாகிப் போனாள் அபிநயா. ''அய்யோ... அய்யோ... சா....ரி, பாரதி. உங்கள் பசியைக் கெடுத்து விட்டேனா... ரொம்ப ரொம்ப சாரி, பாரதி. இதற்காக நீங்கள் சாப்பிடாமல்.... இருந்துவிடக் கூடாது. இன்னும் கொஞ்சம்... முட்டைப் பொரியல் வைக்கச் சொல்லட்டுமா?.... அல்லது முருங்கைக்காய் கூட்டு...''

பாரதிக்கு ஒன்றுமே உள்ளே இறங்கவில்லை.

''தயிர் கலந்து கொள்ளுங்கள், பாரதி, சாப்பிட இலகுவாக இருக்கும்'' என்று பாத்திரத்தில் இருந்து கெட்டித் தயிரை கரண்டியில் எடுத்து பாரதிக்கு வைத்தாள் வினயா. அபிநயாவை ஆழப் பார்த்து, ''நீங்கள் சொல்வது போல அம்மாவோடு பிள்ளைகள் செத்துப் போவது என்று தொடங்கினால் அப்புறம் உலகமே அழிந்து போய்விடாதா, அபிநயாக்கா?'' என்று அவள் சாவதானமாகக் கேட்கவும் அபிநயாவின் முகம் கன்றிப் போயிற்று.

ஆனாலும் வாதம் செய்து கொண்டிராமல், ''அய்யோ... ஆமாம். நீதான் கரெக்ட்... அம்மா மேல் உள்ள ஆ...சையில் யோசிக்காமல் பேசிவிட்டேன்... அச்சச்சோ!'' என்று தப்பை ஒப்புக் கொண்டாள்.

பாரதியின் இடது கையைப் பற்றி இன்னும் ஒரு முறை 'சாரி' சொன்னவள், விரல்களில் வீணை வாசிப்பின் பயனான காய்ப்பைப் பார்த்துவிட்டு, ''அய்யோ! கை இப்....படி இருக்கிறதே! பாரதி. நீங்கள் இதைத் தேய்த்து எடுத்துவிட்டு, ஆலிவ் எண்ணையில் எலுமிச்சம் பழச்சாறு, கிளிசரின், சர்க்கரை மூன்றும் சேர்த்துக் கலந்து, அதில் கையைப் பத்து நிமிஷம் ஊறவைத்து, அப்புறம்

பத்து நிமிஷம் 'மசாஜ்' செய்தால் உங்கள் கையும் .. என் கை.... மா..திரி'யே அழகாகிவிடும்'' என்று கன அக்கரைடோடு ஆலோசனை வழங்கினாள்.

'பிறகு வீணை எப்படி வாசிப்பதாம்?' என்று கள்ளென்று உள்ளே எழுந்த கேள்வியை அடக்கி, ''வீணை வாசிக்க இதுதான் வசதி...'' என்று மெதுவாகச் சொன்னாள் பாரதி.

''அய்யோ, பா...வம் நீங்கள்!'' என்று அதற்கு ஒருதரம் பரிதாபப்பட்டாள் அபிநயா.

உதடுகளை இறுக மூடிக் கொண்டு பேசாதிருந்தாள் பாரதி.

வினயாவையும் விடவில்லை அபிநயா. ''எப்போது பார்த்தாலும் இது என்ன சுடிதார், வினயா? இதை விட்டால் மிடி ஸ்டை...லாக வாங்கித் தருகிறேன்....'' என்று அழைத்தாள்.

''எனக்கும் அம்மாவுக்கும் இதுதான் பிடிக்கிறது'' என்றாள் வினயா கருக்கமாக. ''நான் படிக்கப் போகிறேன்'' என்று எழுந்து சென்று விட்டாள்.

''அப்புறமா எனக்கு நிறை....ய வேலை இருக்கிறது என்று சொல்லு.... வினயாவை... அத்தையை எல்...லாம் மாற்றியாக வேண்டுமே!''

'அப்...புறமாய்' 'அத்தை'

பாரதி மேலும் சோர்ந்தாள்.

9

ஜீவானந்தன் மீண்டும் கணக்கருடன் சென்றுவிட, அபிநயாவுடன் தனித்திருக்க வேண்டிய கட்டாயம் பாரதிக்கு ஏற்பட்டது. அவள் அஞ்சியதற்கு ஏற்ப மேலும் மேலும் உருக்கம் காட்டியே அவளது உயிரை வாங்கினாள், அபிநயா.

பாரதியுடைய பெற்றோரின் மறைவு பற்றியே பேசி முதலில் பாரதியின் மனதை ரணமாக்கினாள். பிறகு, அப்படி ஒரு பேரிழப்பிலிருந்து பாரதி இவ்வளவு சீக்கிரமாகத் தேறிவிட்டது குறித்து வியப்பும் மகிழ்ச்சியும் தெரிவித்தாள். ஆனால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஒருவர் துன்புற்றால் அதைப்போக்க ஜீவானந்தன் குடும்பம், அதிலும் முக்கியமாக அவன், எவ்வளவு தூரம் முனைவான் என்பது அவளுக்கு - அவனே உள்ளும் புறமுமாய் முழுமையாய் அறிந்த அவளுக்கு நன்றாகவே தெரியும் என்றாள். முன்னொருதரம் கூட, வழுக்கிவிழுந்த ஒரு பெண்ணின் வேதனை நீக்க அவளைக் கல்யாணம் செய்து கொள்ளக்கூட துணிந்தானாம். ஆனால் அவள் நல்லவள் என்பதால் அவளாகவே ஒதுங்கிச் சென்று விட்டாளாம்! அப்படி நல்லவர்கள் உலகில் வேறு இருக்கக் கூடுமா, என்ன?

இவள் ஜீவானந்தனைப் பாராட்டுகிறாளா... அல்லது எதற்காகவேனும் தன்னை மறைமுகமாக எச்சரிக்கிறாளா என்று யோசித்தாள் பாரதி.

அவள் யோசனையோடு நோக்கவும் அபிநயாவின் பேச்சு மாறியது. இரண்டே நாட்களில் வரப்போகும் தன் பிறந்த நாள் கொண்டாட்டம் பற்றி குழந்தை போலக் குதூகலமாக விவரித்தாள். காலையில் கண்விழித்ததிலிருந்து அட்டவணை போட்டாள். மாலையில் ஆறுமணிக்கே விருந்தைப் போட்டு அத்தை, மாமா, மற்ற பெரியவர்களை மூட்டை கட்டி அனுப்பிவிடுவோம். பிறகு நான், ஜீவு, மற்றவர்கள் எல்லோருமாய் ராத்திரி முழுவதும் ஒரே ஆட்டம்தான்... பாரதி, ஜாலியான மூடில் ஒரு கச்சேரி தயார் செய்து வையுங்களேன். அதை வாசிக்கும்படியான ஒரு சுப நிகழ்ச்சி... எங்கள் வீட்டில் சீக்கிரம் வரக்கூடும். அத்தோடு உங்களுக்கும் ஜீவு செய்ததற்கெல்லாம் நன்றிக் கடன் தீர்த்த மாதிரி இருக்கும்...''

இவள் என்ன சொல்கிறாள்? அது என்ன சுப நிகழ்ச்சி? திருமணமா? நிச்சயதார்த்தமா? யாருக்கும் யாருக்கும்? ஜீவாவுக்கு நன்றிக் கடன் தீர்ப்பது என்றால் என்ன அர்த்தம்?

தெளிவாகத் தெரியாமல் பாரதி தவியாய்த் தவித்தாள். ஆனால் கேட்டு இப்படித்தான் என்று உறுதியாகத் தெரிந்து கொள்ளவும் அஞ்சினாள்.

அரும்பாடு பட்டு முகத்தை நேராக வைத்துக் கொண்டு, ''மன்னிக்க வேண்டும், மிஸ் அபிநயா. நான் கொஞ்ச காலத்துக்கு எந்த விழாவிலும் கச்சேரி செய்வதாக இல்லை'' என்றாள் முடிவாக.

''அய்...யோடா! ஜீவு ரொம்...பவும் ஏமாந்து போவாரே...'' என்று பழைய மாதிரி இழுத்துப் பேசி மிகவும் வருத்தப்பட்டாள் அபிநயா. உடனேயே, ''ஆனால் நீங்கள் சொல்வதும் சரிதான். அப்பா அம்மா இரண்டு பேரும் இந்...த மாதிரி செத்துப் போன உடனேயே இதுமாதிரி விழாவில் கலந்து கொண்டால் உங்களுக்குப் பாசமே... இல்லை என்று மற்றவர்கள் தப்...பாகப் பேசுவார்கள். அதனால் நீங்கள் வராமலே... இருப்பதுதான் நல்லது...''

நாகரீகமாவது மண்ணாங்கட்டியாவது?

எழுந்து விட்டாள் பாரதி, ''எனக்குக் கொஞ்சம் தலைவலி. படுத்திருந்தால் சரியாகிவிடும். போகிறேன்'' என்றவள், தலைவலி பற்றி அபிநயா ஓர் அனுதாபப்பாட்டு பாடுமுன் அவசரமாக அங்கிருந்து அகன்று, அவளது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

சாத்தியிருந்த கதவில் ஒரு கண்ணைப் பதித்தபடி ஜீவானந்தனின் வரவுக்காக காத்திருந்த அபிநயாவின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

அதிகம் தாமதிக்காமல் அபிநயாவும், ஜீவானந்தனும் விரைவாகவே கிளம்பி விட்டார்கள். அதுவரையிலும், பாராதது போலப் பாரதி பார்த்த அளவில், அபிநயா காட்டிய நெருக்கத்தை ஜீவானந்தன் விலக்கவோ ஒதுக்கவோ இல்லை. அவனாக அவளைத் தொட்டான் என்று சொல்ல முடியாதுதான். ஆனால் அவள் தொட்டுக் கொண்டே இருக்கையில் அதற்கு அவசியமும் இல்

பாரதியிடம் தனித்துப் பேச முயற்சியும் ஒன்றும் செய்யவில்லை. ஒரு வாரம், ஏழே நாட்கள் முன்னதாய் நடந்ததெல்லாம் அப்படியே அவனுக்கு மறந்து போயிற்று. அல்லது நினைக்கிற அளவுக்குப் பெரிதாக அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லையா?

எப்போதடா போவோம் என்று இருந்ததுபோல, உணர்ச்சியற்ற வெற்றுப் பார்வையுடன் தலையசைத்து விட்டுக் கிளம்பி விட்டான் அவன்.

இரவு உணவைச் சாப்பிடுகிறேன் என்ற பெயரில் அளைந்து கொண்டிருந்த பாரதி ஒரு முடிவுக்கு வந்து வினையாவிடம் திரும்பினாள். ''வினயா... இந்த அபிநயா பற்றிய விவரம் எனக்கு சொல்ல முடியுமா?''

முகம் மலர, ''முடியுமாவா? எப்போது கேட்பீர்கள் என்று துடித்துக் கொண்டு இருக்கிறேனாக்கும். அப்பாவின் பார்ட்னர் மகள் என்று அண்ணன் சொன்னாரில்லையா? ஒரே மகள். என்ன செய்தாலும் அவர்கள் வீட்டில் கண்டு கொள்ளவே மாட்டார்கள். அந்த ஆண்டிக்கு அதற்கு நேரமும் கிடையாது. அம்மா மாதிரி உடல்பயிற்சி செய்ய சோம்பேறித்தனம். ஹெல்த் கிளப், பியூட்டி பார்லர், ஸ்டீம் பாத் எல்லாம் விசிட் போவார்கள். ஊர் சுற்றுவார்கள். இந்த வம்பளப்புகளில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்வதால் அம்மாவுக்குப் பட்டிக்காடு என்று பட்டம் கொடுத்திருக்கிறார்கள். சொந்த மகளைக் கவனிக்க முடியாதவர்கள் மற்றவர்களைப் பேசுகிறார்கள்! இன்று அவள் உடையைப் பார்த்தீர்களல்லவா? பண்ணைப் பக்கம் என்பதால் ஒழுங்காக உடுத்து வந்த உடை இது! ஆண்கள் என்றால் தொட்டுத் தொட்டுப் பேசுவது வேறு.

''முன்னெல்லாம் ஒழுங்காகத்தான் பேசிக் கொண்டிருந்தாள். ஓர் ஆங்கிலப்படத்தில் வில்லி இப்படி நிறுத்தி நிறுத்தி பேசும் போதே மூச்செடுத்துப் பேசுவாள். என்னவோ அது பிடித்துப் போயிற்று. அதே மாதிரி 'ப்ராக்டீஸ்' பண்ணி பேசுகிறாள்... விபரம் போதுமா?'' என்று முறுவலித்தாள் வினயா.

''ஒரே பெண் என்கிறாய்... திருமணம் செய்து பார்க்க நினைக்கவில்லையா?'' வேடிக்கை போல ஒரு வழியாக விவரம் கேட்டாயிற்று!

''விடுவார்களா? அண்ணனுக்குப் பண்ண வேண்டும் என்று அங்கே ஆசை. அபிநயாவுக்கும் தான். இசை ஞானமே இல்லாத குடும்பம் என்று அம்மாவுக்குத் திருப்தி இல்லை. அத்தோடு அண்ணன் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்கப் போவது இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதான். இதற்கு மேல் விவரதானம் செய்ய இங்கே இந்தச் சட்டியில் இதற்கு மேல் ஒன்றும் இல்லை!'' என்று தலையை சுட்டிக்காட்டி சிரித்தாள் வினயா.

பெருமளவு மனம் ஆறுதல் கூற, பாரதியும் சிரித்த முகம் காட்டினாள்.

சின்னதாக ஓர் உறுத்தல் மட்டும். மகன் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்க மாட்டார்கள் என்றாளே! மகன் விருப்பம் அபிநயா வாக இருந்தால்? ஊகூம் இராது என்று தனக்குத்தானே முடிவு செய்து கொண்டு நிம்மதி அடைந்தாள் பாரதி.

ஆனால் அந்த நிம்மதியின் ஆயுசு மூன்று தினங்களே.

அன்று சந்தையில் மீன் வாங்கி வரச் சென்ற பணியாள் முத்து கையோடு ஒரு பத்திரிகையையும் கொண்டு வந்தான். ''நம்ம சின்னய்யா படம் போட்டிருக்குதேன்னு வாங்கியாந்தேம்மா'' என்று பாரதியிடம் பத்திரிகையைக் கொடுத்தான்.

ஆவலுடன் அதை வாங்கிப் பார்த்ததுமே அவளது முகம் சுருங்கியது. அந்தப் படத்தில், அபிநயாவோடு நடனமாடிக் கொண்டிருந்தான் ஜீவானந்தன்.

எல்லோரும் ஆடும்போது தவிர்க்க முடியாது என்று தன் னையே சமாதானப்படுத்திக் கொண்டு பத்திரிகையைப் படிக்கத் தொடங்கிய பாரதிக்கு முகம் ரத்த நிறமே கொண்டு விடக் கொதித்துப் போனாள்.

பாரதியின் வீட்டில் தினப்பத்திரிகை என்று வாங்கி வருவது 'ஹிந்து' மட்டும்தான். சரஸ்வதியாக தேர்ந்தெடுத்த சில வார, மாதாந்திரப் பத்திரிகைகளும் நேரம் கிடைத்தபோது படித்திருக்கி றாள். படிப்போடு வீணைப் பயிற்சியும் சேர்கையில் நேரம் கிடைப்பது கிடையாது. அதனால் வேறு படித்ததும் இல்லை.

பத்திரிகையில் அச்சேறி விட்டால் அது உண்மை என்றே நம்பிப் பழக்கம் அவளுக்கு.

வேலையாள் வாங்கி வந்திருந்த பத்திரிகையின் பெயர் 'மூச்சந்தி'. அறைக்குள் நடக்கும் சம்பவங்களுக்கு அசிங்க வர்ணம் பூசி நாற்சந்தியில் நார விடுவது அந்தப் பத்திரிகையின் தலையா யப் பணி. அது நடந்த செய்திதானா என்று சரிபார்க்கும் பழக்கமே அந்த பத்திரிகையின் ஆசிரியருக்கு கிடையாது! நடக்காத விஷ யங்களை நடந்தது போல எழுதுவதில் - அதிலும் சட்டத்தில் மாட்டிக் கொள்ளாத விதமாக எழுதுவதில் அவர் மிகவும் வல்லவரும் கூட...

இவை ஏதும் அறிந்திராத பாரதி, ஜீவானந்தன் அபிநயா படத்தின் கீழ் திருமணத்துக்காகக் காத்திருக்கும் மேட்டுக்குடி ஜோடி! என்றிருந்த வாசகத்தைப் படித்ததும் தவித்துப் போனாள்.

பரபரப்புடன் மேலே படித்தாள்.

படத்தில் இருந்தவர்கள் யார் யார் என்கிற விவரத்துடன், விரைவிலேயே பணம் பணத்தோடு சேரும் வைபவம் நிகழ இருப்பதாக நம்பகமான வட்டாரங்களில் இருந்து தகவல் கிட்டியி ருப்பதாகவும் தெரிவித்தது.

அடுத்த வரியில் ஜீவனுக்கு ஆனந்தம் தருகிறவரின் சிருங்கார லீலைகள் பற்றி அறிய நாலாம் பக்கம் பார்க்க என்றிருக்கவும், அவசரமாகப் பககங்களை திருப்பினாள் பாரதி.

'பண்ணை வீட்டில் கிருஷ்ணலீலை' என்கிற தலைப்பைப் பார்த்துமே அவளுக்குப் பகீரென்றது. கீழே, ஜீவனுக்கு ஆனந்தம்

கொடுப்பவரின் திருமண விஷயம் நேயர்கள் அறிந்ததே: ஆனால் பண்ணைவிட்டுப் பலான விவரங்கள் அறிந்து, 'அந்தப்புரத்தில் கொண்டு வந்து வைத்திருக்கிறீர்களே, வேறோர் அழகுக் கிளியை என்று கேட்டதற்கு, மேட்டுக் குடிமகனின் திமிரான பதிலைப் பாருங்கள். எனக்கிருக்கும் பணத்துக்கும் ஆண்மைக்கும் இவள் ஒருத்தி என்ன, இன்னும் ஐந்து பேரை வேண்டுமானாலும் என்னால் சமாளிக்க முடியும்'' என்கிறார்! அதற்கு, அவளையே மணந்தால் என்ன என்று கேட்டால், அரங்கம் ஏறியவள் அந்தப்புரத்துக்குத்தான் லாயக்கு. குடும்ப கவுரவத்துக்கு குலமகளைத்தான் மணப்பேன். அத்தோடு, கலைமகளின் பெயர் கொண்ட வீணை அரசியும் இந்த ஏற்பாட்டை ஒத்துக் கொண்டுதான் இருக்கிறார். திருமணம் என்கிற புனித பந்தத்தின் எண்ணமே இல்லாமல் சேர்ந்து வாழ வந்திருப்பதே இதற்குச் சரியான நிரூபணம் என்கிறார் ஆண்மைத் திருவுரு என்று எழுதியிருந்ததைப் படிக்க படிக்கப் பாரதி செங்கொழுந்தாகிப் போனாள்.

என்ன திமிர் இந்த ஜீவானந்தனுக்கு!

அரங்கம் ஏறியவள் அந்தப்புரத்துக்குத்தான் லாயக்காமா?

குடும்ப கவுரவத்துக்குக் குலமகளைத்தான் மணப்பானாமா?

குலமகள் யார் என்று கண்டு கொள்ளும் அறிவு கொஞ்சமும் இல்லையே!

அரங்கம் ஏறினால் அம்பலத்துக்கு வந்து விட்டவள் என்றா அர்த்தம்?

என்ன படித்து என்ன? என்ன நாகரீகமாய் உடை அணிந்து என்ன? உள்ளம் உளுத்துப்போன பழங்காலமாக அல்லவா இருக்கிறது?

நல்லவேளை! இப்போதாவது கண்டுகொள்ள முடிந்ததே. சமயத்தில் புதைகுழியைக் காட்டிக் கொடுத்த இந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு நன்றி சொல்ல வேண்டும். இந்தப் பத்திரிகையை வாங்கி வந்த பணியாளுக்கு நன்றி சொல்ல வேண்டும்!

அது என்ன? சேர்ந்து வாழ வந்திருக்கிறாளாமா? வீட்டுச் சூழ்நிலை தாங்காமல் வெளியே வந்ததற்கு இப்படி ஒரு விளக்கமா? அல்லது அந்த இழிநிலைக்கு அவளைத் தன்னால் கொண்டு வந்து விட முடியும் என்கிற இறுமாப்பா?

இருக்கும். பெற்றோரை இழந்து மனது பலவீனப்பட்டு நிற்கும் பெண். உரிய வகையில் பசப்பு மொழிகளைப் பயன்படுத்தி அவளை வீழ்த்தி விடலாம் என்று நினைத்திருப்பான்.

பாவம், பாரதி யாரென்று அறியாமல் தப்புக்கணக்குப் போட்டுவிட்டான்!

இங்கே அவள் இருப்பதே 'நிரூபணமா? இருந்தால்தானே? முதலில் இங்கிருந்து கிளம்ப வேண்டும் எப்படி?''

அந்த வீட்டுக்காவல்காரர்களும் துப்பாக்கியும் நினைவு வந்தது. அவர்களுக்கு உத்திரவு எப்படியோ? அவளை வெளியே விட மறுத்தால்?

வேறு வழி ஆராயகையில் வினயாவின் நினைவு வந்தது. கூடவே, தவறாக நடக்க நினைப்பவன் தங்கையை உடன் வைப்பானா என்று மின்னலாய் ஓர் எண்ணம் தோன்றி உடனே மறைந்தது. படிப்பு விடுமுறை முடிந்து வினயா இன்னும் ஒரு வாரத்தில் கிளம்பி விடுவாள். அதன்பின் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணியிருக்கலாம்...ச்சே. அவன் என்ன எண்ணியிருந்தாலும், எப்படி திட்டமிட்டிருந்தாலும் அதுபற்றிய அக்கறை அவளுக்குத் தேவையில்லை.

அவளது தேவை முதலில் இந்த வீட்டை விட்டுக் கிளம்புவது. அடுத்தது ஜீவானந்தனின் முகத்தில் இனி விழியாதிருப்பது... சட்டென திரண்டு வழிந்த கண்ணீரை ஆத்திரத்துடன் துடைத்தெறிந்துவிட்டு, வினயாவைத் தேடிச் சென்றாள் பாரதி.

ஒரு பணக்காரப் பெண்ணுக்குத் தகுந்தவிதமாக அவளிடம் கதை சொன்னாள். அவர்கள் வீட்டுக் கச்சேரியின் போது அணிந்தி

ருந்த நகைகளை - 'எமரால்டு செட்' - சும்மா டிரஸ்சிங் டேபிள் டிராயரில் கழற்றிப் போட்டிருந்தாள். பிறகு அதைப்பற்றி நினைப்பே வரவில்லை. இப்போது திடுமென நினைப்பு வந்ததிலி ருந்து இங்கே இருப்பே கொள்ளவில்லை. இப்போது தொலையா மல் இருக்கிறதோ என்னவோ? இனியும் அதை யாரும் பார்த்துத் திருடி விடுமுன் எடுத்து லாக்கரில் வைக்க வேண்டும்.

கணக்கரை அழைத்து, பாரதி திரும்பிச் செல்வதற்கான வாடகைக் கார் வரவழைத்தாள் வினயா.

கிளம்புமுன், ''வேறு எந்தப் பிரச்னையும் இல்லையே, பாரதி?'' என்று அவள் நேராகப் பார்த்து வினவவும், பாரதியால் ஒரேயடியாகப் பொய் சொல்ல முடியாமல் போயிற்று.

''எவ்வளவு நாள் தான் பிரச்சினைகளுக்கு பயந்து ஓடி ஒளிந்து கொள்ள முடியும் வினயா? அங்கே என்னென்ன காத்திருக்கின்றன என்று இப்போது எப்படிச் சொல்ல முடியும்? இங்கே மீண்டும் உடனே திரும்புவது பற்றி உறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை.... வரட்டுமா?'' என்று கூறி விடை பெற்றாள்.

நல்ல பெண்தான். ஆனால் இப்படி ஓர் அண்ணன் அமைந்த பாவம் இனி இந்தப் பெண்ணுடனான தொடர்பும் அறுந்து விடப் போகிறது.

செல்லும் வழியெல்லாம் பாரதிக்கு ஒரே யோசனை.

இப்போது ஜீவானந்தனின் வீட்டில் இருந்து வெளியேறிய தால் மட்டும் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் இழிப்பெயர் மாறிவி டுமா? ஊடல் என்பார்கள். திரும்பிப் போவாள் என்று எதிர் பார்ப்பார்கள்.

இந்த வதந்திக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக ஏதேனும் செய்தே ஆக வேண்டும்... ஏதேனும்....

வீடு சென்றதும் வேலையாட்கள் மகிழ்ச்சியோடு வரவேற் றார்கள். இருந்து பயனில்லை என்று தெரிந்ததும் அவரவர்

ஊருக்குத் திரும்பிச் செல்லுமுன் உறவினர்கள் ஆடிய ஆட்டங் களை வருத்தத்தோடு விவரித்தார்கள். வீட்டில் ஆங்காங்கே இருந்த அலங்காரப் பொருட்களையெல்லாம் கூட எப்படி எடுத்து ஒளித்து வைத்துக் காப்பாற்ற நேர்ந்தது என்று வேதனையோடு விளக்கினார்கள்.

அவர்களோடு சற்றுநேரம் இதமாகப் பேசி அவரவர் வேலைக்கு அனுப்பி விட்டு டெலி:போனிடம் சென்றாள் பாரதி.

ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு நம்பர் தேடி, 'டயல்' செய்தாள்.

எதிர் முனையில் குரல் கேட்டது, ''ஹலோ மிஸ்டர் யாழினி யன், நான் பாரதி பேசுகிறேன். ம்.... நன்றாகயிருக்கிறேன். உடம்புக்கு ஒன்றுமில்லை. வந்து... ஒரு முக்கிய விஷயம் சொல் லத்தான் அழைத்தேன்... வந்து... முன்பு ஒன்று சொன்னீர்களே... சில நாட்களாக அதை... அதை நன்றாக யோசித்துப் பார்த்தேன். நீங்கள் சொன்னபடியே செய்யலாம் என்று தோன்றுகிறது. நா...ன்.... நான் உங்களை மணந்து கொள்ளத்தயார்... என்னது? ஒ.... சரிசரி. நீங்கள் இது பற்றிய பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பிவிடுங்கள்... முக்கியமாக 'முச்சந்தி' என்கிற பத்திரிகைக்கு.

:போனில் யாழினியனின் நீண்ட பேச்சை அவன் என்ன பேசினான் என்பதையே உணராமல் கேட்டிருந்துவிட்டு ரிசீவரைக் கீழே வைத்தாள் பாரதி.

இனி யாரும் அவள் ஜீவானந்தனோடு தப்பு வாழ்க்கை வாழப் போனாள் என்று சொல்ல முடியாதில்லையா?

சட்டென அவள் முகம் கசங்கியது. அப்படியே அமர்ந்து, டெலி:போன் மேசை மீதே கவிழ்ந்து விம்மி அழலானாள்.

10

ஜீவானந்தனிடமிருந்து அவ்வளவு சீக்கிரமாக ஒரு போன்காலைப் பாரதி எதிர்பார்க்கவில்லை. மறுநாள் பத்திரிகையில் செய்தியைப் படித்த பிறகு ஒருவேளை தொடர்பு கொள்ளக்கூடும் என்று நினைத்தவள், இரவே அவன் குரல் கேட்கவும் சற்றே ஆடிப்போனாள்.

"வினயா ஆள்மூலம் தகவல் அனுப்பியிருந்தாள். என்ன பாரதி? ஏன் வந்தாய்? ஏதாவது வேண்டுமென்றால் என்னிடமே சொல்லி அனுப்பி இருக்கலாமே?"

இந்த வினயா சும்மாவே இருந்திருக்கலாம் என்று எண்ணிய படி, "இது... நானே நேரில் கவனிக்க வேண்டிய வேலை... வைத்து விடட்டுமா? வேலைக்காரி கூப்பிடுகிறாள்..." என்று வாயில் வந்த சாக்கைச் சொன்னாள் பாரதி.

விஷயம் அறியும் ஆவல் தவிர, ஜீவானந்தனின் குரலில், குற்றக் குறுகுறுப்பு ஏதும் இல்லை என்பதைப் பாரதி கவனித்தாள். அவள் விலகிச் சென்றிருக்கக் கூடும் என்ற கவலையும் காணோம். அப்படியானால் வெறும் ஆசைக்கு என்று ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவனுக்குத் தவறாகப் படவில்லையா? இதென்ன பழைய தேவதாசி காலமா? மேடையேறினால் கணிகை என்று அந்த மாதிரி வாழ்வை இயல்பாக ஏற்பதற்கு?

கொதிப்பும் கோபமுமாக இரவைக் கழித்த போதும் மறுநாள் காலையிலேயே கையில் பத்திரிகையுடன் வந்து நின்ற ஜீவானந்தனை எதிர்கொள்ள பாரதி தயாராகவே இருந்தாள்.

பத்திரிகையில் அவளது திருமணச் செய்தியைச் சுட்டிக் காட்டி, "இது என்ன பைத்தியக்காரத்தனம், பாரதி?" என்று கேட்டான் அவன்.

"மிஸ்டர் ஜீவானந்தனா...?" என்று சட்டென மூண்ட சினத்துடன் சீறினாள் அவள். உடனே அடக்கி, "பாரதி, ப்ளீஸ் யோசித்துப் பேசம்மா. நான் வேறு நினைத்தேனே..." என்றான் மன்றாடுவது போல.

"என்னது?" அவன் வாயாலேயே வெளிவரட்டுமே!

ஆனால், அவனுக்கே சொல்ல நாகூசியது போலும். "தெரியாதது போலப் பேச வேண்டாம் பாரதி" என்றான் மீண்டும் சினம் துளிர்க்க.

"முதலில் நீங்கள் ஒன்று தெரிந்து கொள்ளுங்கள்" என்றாள் பாரதி உறுதியான குரலில். "உங்கள் ஆண்மைக்கும், பணத்துக்கும் ஊரில் உள்ள அத்தனை பெண்களும் அடிமையாகி விடுவார்கள் என்று நினைத்தீர்கள் என்றால் அது சுத்தமான மடத்தனம்...."

"நான் அப்படி நினைத்ததும் இல்லை. மற்ற பெண்களைப் பற்றி எனக்கு அக்கறையும் இல்லை. எனக்கு உன் விஷயம் தெரிந்தால் போதும்" என்றான் அவன் ஆத்திரத்துடன்.

"என் விஷயம் தானே? நன்றாகவே தெரிந்து கொள்ளுங்கள். அவரும் அரங்கம் ஏறியவர். நானும் அப்படித்தான். குடும்ப கவுரவம், குலமானம் என்று இதுபோல எந்தப் பாகுபாடும், எங்களுக்குள்ளே இல்லை. குயிலும் குயிலும் தானே ஜோடி சேர முடியும்? அது போல மிஸ்டர் யாழினியனும் நானும் மணந்து கொள்ளப் போகிறோம்" என்றாள் தெளிவாக.

முச்சந்தி பத்திரிகை வழியே அவன் சொன்ன வார்த்தைகளுக்குச் சரியான பதிலடி கொடுத்துவிட்ட திருப்தி உண்டாயிற்று பாரதிக்கு. ஆனால், பழிவாங்கி விட்ட பெருமைக்குப் பதிலாக நெஞ்சை ஏன் இப்படி அடைத்துக் கொண்டு வரவேண்டும்? இந்த மடத்தனம் எப்போது போகும்?

நம்ப மாட்டாதவன் போல அவளை வெறித்து, நோக்கினான் ஜீவானந்தன். "பாரதி, நீ மெய்யாகத்தான் சொல்லுகிறாயா?"

"ஏன் சூடம் அணைத்து சத்தியம் செய்தால் தான் நம்புவீர்களா? கற்பூரம் கொண்டு வரச் சொல்லட்டுமா?" தன்மீது மூண்ட

ஆத்திரத்தையும் அவனிடம் காட்டித் துடுக்காக வினவினாள் பாரதி.

''வேண்டாம்'' என்று எழுந்து விட்டான் அவன். ''ஆனால், ஒன்று. மனம் ஐயம் திரிபறத் தெளிவாகும் முன் திருமணத்தை முடித்துவிட அவசரப்பட வேண்டாம். அத்தோடு உனக்கு ஏதே னும் உதவி தேவைப்படுமானால் என்னிடம் கேட்கத் தயங்கவும் வேண்டாம்'' என்று உரைத்தவன் அதற்கு மேல் நில்லாமல் சென்று விட்டான்.

அவனது முகபாவனையும் நடையும் அவளை என்னவோ செய்தன. அவன் வேதனைப் படுவதாகத் தெரிகிறதே!

இருக்காதா பின்னே? தூண்டில் முள்ளைக் கவ்வுகிற அள வுக்கு வந்துவிட்ட மீன், கைக்கு கிடைக்குமுன் தப்பி விட்டது என்றால் தாங்குமா, என்ன? இதற்குப் போய் அனுதாபப்பட்டுக் கொண்டு, மீண்டும்... மடத்தனமா?

அடுத்து, அத்தரும் அரகஜாவுமாக யாழினியன் வந்து நின்ற போது அதையும் பாரதியால் தாங்க முடியவில்லை.

வேகமாக வேலை செய்திருந்தான் யாழினியன். திருமணத் திற்கென்று நெருக்கத்திலேயே சில நாட்களைப் பார்த்திருந்தான். கூடவே வெளிநாட்டு 'டூர்' பற்றியும் அடிப்படைத் திட்டமொன்று தயாரித்து வந்திருந்தான். இந்த 'டூரை'யே தேனிலவாகவும் கொண் டாடலாம் என்று அவன் அசடு வழிந்ததைப் பார்க்க சகியாமல் பாரதி வேறுபுறம் பார்வையைத் திருப்ப வேண்டியிருந்தது.

இதில் எதையும் அடியோடு மறுக்கவும் அவளால் முடிய வில்லை. ஏனெனில் திருமணம் செய்து கொள்ளலாம் என்று அவனைக் கூப்பிட்டுச் சொன்னவள் அவள்.

எனவே, தள்ளிப் போட்டாள். இறந்த பெற்றோரைத் துணைக் கழைத்து, ''வீட்டில் துயர சம்பவம் நடந்திருக்கிறது. ஓர் ஆறுமாத காலமாவது கழிய வேண்டும் என்பார்கள்'' என்றாள்.

''அதெல்லாம் கும்மா'' என்று அவன் அலட்சியமாகப் பேசிய போது ''இல்லை எனக்கும் அதுவே சரியென்று தோன்றுகிறது.

கொஞ்ச நாள் ஆனால்தான் எனக்கும் திருமணம் செய்து கொள் எக்கூடிய மனநிலை வரக்கூடும்'' என்றாள் அவள் குரலில் பிடிவாதத்துடன்.

ஒரு கணம் தயங்கிய யாழினியனின் முகம் மறுபடி மலர்ந் தது. ''அதற்கென்ன பாரதி, உன் பிரியப்படியே செய்தால் போகிறது. இப்போதே இரண்டு மாதங்கள் முடிந்தாயிற்று. இன் னும் நாலே மாதம். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டே இருந்தோமானால், நாலு மாதம் தீர்ந்த மறுநாள் திருமணத்தை முடித்துக் கொண்டு நேரே விமானத்தில் கணவன் மனைவியாக ஏறி அமர்ந்து விடலாம்'' என்றான் உற்சாகமாகவே.

பாரதி பேசாமல் இருந்தாள்.

மவுனமே சம்மதம் என்று அதையும் தனக்குச் சாதகமாகவே எடுத்துக் கொண்டான் யாழினியன்.

''ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் என் வீட்டில் ஒரு 'சின்ன பார்ட்டி' ஏற்பாடு செய்திருக்கிறேன் பாரதி. முக்கியமான சில நண்பர்கள் மட்டும் வெளிநாட்டுப் பயணம் ஏற்பாடு செய்கிறவர்க ளும் கொஞ்சம் பேர் வருவார்கள். அங்கே என்ன மாதிரி விளம்பரப்படுத்தலாம் என்பதற்கு ஒரு 'சாம்பிள்' கொடுக்க வேண்டும். சுண்டி இழுக்கிற மாதிரி சில பதங்கள். ஜாவளி, காவடிச் சிந்து, தில்லானா அயிட்டங்கள் சாதகம் செய்து வை. கொஞ்சமும் பயப்பட வேண்டாம். பக்கத்திலேயே நான் இருப் பேன் என்பதால் தைரியமாக வாசிக்கலாம். அச்சத்துக்கு அவசி யமே கிடையாது. அப்புறம்... உருப்படிகளில் ஏதாவது சந்தேகம் வந்தால் ஃபோன் பண்ணு. நான் வந்து கற்றுத் தருகிறேன்'' என்று வாய்ச் சவடால் அடித்தான் அவன்.

'எனக்கு நீ கற்றுத் தருகிறாயா?' என்று உள்ளுரக் கொதித்த போதும் முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் மெல்லத் தலையாட்டினாள் பாரதி.

''ம்... நேரமாகி விட்டது.... வந்து இன்று இங்கே என்ன சமையல்?'' என்று யாழினியன் கேட்கவும் பாரதி திடுக்கிட்டுப் போனாள்.

இவன் என்ன இங்கேயே, தங்கி மதியம் வரை இருந்து சட்டமாய்ச் சாப்பிட்டு விட்டு ஆற அமரக் கிளம்பலாம் என்றிருக்கிறானா என்று எரிச்சலாக எண்ணும்போதே அவள் மனம் சுட்டது.

திருணம் நிச்சயமான மனிதன், தன் வருங்கால மனைவியோடு பொழுதைக் கழிக்க விரும்புவதைப் பிழை என்று எப்படிச் சொல்ல முடியும்? அவள் ஏதோ எண்ணி எல்லாவற்றையும் வெறுப்பதற்கு அவனா பிணை?

ஆனால், என்ன முயன்றாலும் அவனது பேச்சைத் தாங்க முடியும் போலத் தோன்றாததால், ''இன்று சமையல்காரிக்கு உடம்பு சரியில்லை. அதனால் ரசம் சாதம் மட்டும்தான்'' என்று அவள் கூறிவிட, ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு, ''அப்படியா பரவாயில்லை. உன் சமையல்காரிக்கு உடம்பு சரியான பிறகு இங்கு வந்து விருந்துச் சாப்பாடே சாப்பிட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மதியம் எனக்கு வேறிடத்தில் ஒரு வேலை இருக்கிறது'' என்று சமாளித்து யாழினியன் கிளம்புவதைக் காணுகையில், நியாயமற்ற ஒரு சந்தோஷம் உள்ளூர உண்டாவதை அவளால் தடுக்க முடியவில்லை.

யாழினியனின் கார் கிளம்பிச் சென்றதும் 'அப்பாடி' என்று ஓர் அறைக்குள் வந்து விழுந்த பாரதிக்கு அழுகை வந்தது.

ஏதோ ஆத்திரத்தில், யாருக்கோ எதையோ நிருபிப்பதாக எண்ணிக் கொண்டு உளைக்குள் காலை விட்டு விட்டாள். இனிக் காலம் முழுவதும் இதை எப்படிச் சகிப்பது.

வெகு நேரம் அழுது, பின் தானாக அமைதி அடைந்தாள் பாரதி.

இந்த யாழினியன் தற்பெருமைக்காரனாக இருக்கலாம்; பணத்தாசை கொண்டவனாகவும் இருக்கலாம். ஆனால், இவன் ஜீவானந்தனைப் போலக் குலப் பெருமைக்கு ஒன்று, காம விளையாட்டுக்கு ஒன்று என்று ஒரே சமயத்தில் பலமலர் நாடும் வண்டினம் அல்ல. முன்புகூட அவன் அவளை மணந்து கொள்ளுமாறு தானே கேட்டான்.

ஒருவர் விரும்புகிற எல்லாமே அவருக்குக் கிடைத்து விட முடியாது.

ஒன்று, உயிரினும் ஓம்பப்பட வேண்டிய ஒன்று என்று தாயார் கற்பித்திருந்த ஒழுக்கத்தைக் கைவிட்டு, ஜீவானந்தனோடு, குல கவுரவுத்துக்காக அவன் மணக்கப் போகும் அவனுடைய மனைவியோடு அவனைப் பங்கு போட்டுக் கொண்டு, அவள் மீதுள்ள ஆசை தீர்ந்து அவனாக அவளை விரட்டி அடிக்கும் வரை, அவனுடைய ஆசை நாயகியாக வாழ வேண்டும்.

அல்லது, இந்த யாழினியனை மனந்து அவனது போரடிப்பைச் சகித்துக் கொண்டு, அவனுக்குச் சம்பாதித்துப் போடும் இயந்திரமாக வாழ வேண்டும். ஆனால், ஒன்று இங்கே, மனைவி என்கிற கவுரவம் கிடைக்கும்.

ஏன், இந்த இரண்டு வழிகளையும் விடுத்து, யாழினியனையும் துறந்து, தனியாளாக வாழ்ந்தால் என்ன என்றும் ஒரு தரம் பாரதி சிந்தித்துப் பார்த்தாள்.

ஆனால், அதில் அவளுக்கு அவ்வளவாக நம்பிக்கை வர மறுத்தது. மணிமேகலை போலத் தனியாளாக வாழ்வது முடியாது என்று அவள் எண்ணவில்லை. அது அவளால் முடியும்? ஆனால், யாழினியனை மணக்கப் போகிறவள் என்கிற போர்வையை அகற்றிவிட்டால், அதன் பின் ஜீவானந்தன் சும்மா இருக்க மாட்டான். அவன் மீண்டும் நெருங்கினால், அப்புறம் அவளது உறுதி எந்த அளவு நிலைக்கக்கூடும் என்பதில் அவளுக்கு சந்தேகம் வந்தது.

ஒருவேளை உறுதி பிறழ்ந்து போய்விட்டால்? அதன் பின் ஏற்படக்கூடிய இழிநிலைக்கு, யாழினியனுடைய மனைவி என்கிற நிலை நிச்சயமாக மேலானதுதான். அது எவ்வளவுதான் போரடிக் கிற நிலை என்றாலும் சரிதான்.

எனவே, மணக்கப் போகிறவனைச் சகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தாள் பாரதி.

ஆனால், முடிவு செய்வது வேறு; அதைக் கடைப்பிடிப்பது வேறு அல்லவா?

தினமும் ஒருதரமேனும் வந்து சென்ற யாழினியனின் பேச் சைச் சகித்துப் பழகிய அவளால் ஒருநாள் விடை பெறுகையில், முத்தமிடும் விருப்பமாய் முகத்தருகே முகம் கொண்டு வந்தபோது சகிக்க முடியவில்லை.

சட்டெனப் பின்னடைந்து, ''இதை எல்லாம் திருமணத்துக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறிச் சட்டெனத் திரும்பி உள்ளே சென்று விட்டாள்.

அன்றிரவு முழுவதும் அவளால் தூங்க முடியவில்லை. இந்த அருவருப்பு மாறுமா? மாறக் கூடுமா? மாற வேண்டும். மாறியே ஆக வேண்டும். 'மஞ்சள் கயிறு மாலிக்' என்பார்களே, அது போலத் திருமணம் ஆனபின் இவனிடம் அன்பு ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். ஏற்பட்டுத்தான் ஆக வேண்டும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அவனது 'பார்ட்டி' நாள்.

இரவெல்லாம் தூங்காமல் தவித்து, விடி காலையில் சற்றே கண்ணயர்ந்து விடிந்து விட்ட வெளிச்சத்தில் அந்தத் தூக்கமும் கலைந்து, பாரதி எழுந்தபோது, அவளுக்கு தலைவலி வந்திருந் தது.

நடந்தாலே விண்விண் என்று அதிரவும் காஃபியோடு ஒரு மாத்திரையைப் போட்டுக் கொண்டு பேசாமல் மீண்டும் படுத்துச்

கொண்டாள். எழுந்து என்ன செய்வது? வீணையிலும் மனது லயிக்கவில்லை. ஏன், எதிலுமேதான் மனது ஒட்டவில்லை. விட்டத்தை இலக்கற்று வெறித்தபடி கிடந்தவள் அப்படியே தூங்கிப் போனாள்.

ஆனால், ஏதோ கனவில் அழுது கொண்டே விழித்ததாலோ என்னவோ, இந்தத் தூக்கமும் உடம்புக்குப் புத்துணர்ச்சி தர வில்லை. மாறாக மாத்திரை போட்டுக் கொண்டு கெட்டி ஆகாரம் ஏதும் இல்லாமல் படுத்ததன் விளைவும் சேர்ந்து கொள்ள மேலும் சோர்வாகவே உணர்ந்தாள். அது மனதின் சோர்வாகவும் இருக்க லாம்.

ஒரு மைசூர் சில்க்கை எடுத்து, சிரத்தையற்று அணிகையில், கடைசியாக ஜீவானந்தன் வீட்டுக் கச்சேரிக்காகக் கவனத்துடன் உடையணிந்தது நினைவு வந்து கண்ணைக் கரித்தது.

இதுதான் பலவீனமான பெண்மனது என்பது போலும். அவனுக்கு பாரதி என்ற பெயர் கூட மறந்திருக்கும்.

பூஜையறைக்குச் சென்று வீணையை வெறித்தபடி சற்று நேரம் நின்றாள். நிச்சயம் மறந்துதான் போயிருப்பான். மறக்க வேண்டும் என்றுதானே, அவளை நினைவு படுத்தக் கூடிய வீணையைக்கூட மறுநாளே ஆள் வசம் அனுப்பி விட்டான்! மற்றபடி முன்பு ஒரு மாதத்துக்கும் மேலாக அவன் வசம் வைத்திருந்த வீணை இப் போது மட்டும் வெறுத்துப் போகுமோ?

''வாடகைக் கார் வந்து விட்டதம்மா'' என்று வந்தான் ஆறுமுகம்.

வீணையைக் கொண்டு காரில் வைக்குமாறு அனுப்பிவிட்டு, பெற்றோரின் அறையைத் திறந்தாள் பாரதி. எப்போதும், கச்சேரிக் குக் கிளம்புமுன் மகளுக்குத் திருநீறு பூசி விடுவது சரசுவதியின் வழக்கம். இந்தப் பெற்றோர் இறந்தது எவ்வளவு பெரிய பிசகு? அவர்கள் இருந்திருந்தால், 'சோழியன் குடுமி சும்மா ஆடா

தும்மா.' அழைத்தான் என்று அன்னியர் வீட்டில் தங்குவது தவறு என்று பண்ணை வீடு செல்லாமல் தடுத்திருப்பார்கள். இப்படித் தினம் தினம் கொல்லும் நினைவுகளோடு, போராட நேர்ந்திராது.

பெருமூச்சுடன் திருநீறை ஒரு விரலால் தொட்டு, நெற்றியில் கீற்றாய் அணிந்து கொண்டு கிளம்பினாள் பாரதி.

பக்க வாத்தியம் பற்றி யாழினியனே ஏற்பாடு செய்வதாகச் சொல்லி விட்டதால் பாரதி மட்டும் தான் செல்ல வேண்டியிருந்தது. முன்னரே செய்திருந்த ஏற்பாட்டின்படி, திரும்பிச் செல்லுவதற்காக அந்த 'டூரிஸ்ட்' டாக்சியை நிறுத்தி வைத்துவிட்டு, வீணையுடன் யாழினியனின் வீட்டினுள் சென்றாள் பாரதி.

அவளைக் கண்டதும் ஓடோடி வந்தாள் யாழினியன். வீணையை வாங்கி, ஒரு பையனிடம் கொடுத்து அனுப்பி விட்டு, கண்ணில் பட்ட அத்தனை பேருக்கும் பாரதியை அறிமுகம் செய்து வைத்தான்.

கச்சேரி கேட்க அங்கே யாரும் அவசரப்பட்டது போலப் பாரதிக்குத் தோன்றவில்லை. அவரவர் கையில் கண்ணாடி தம்ளர்களும், சிகரெட்டுப் புகையும், கொறிப்பதற்கான உணவு வகைகளையும், காலியான தம்ளர்களைப் பெற்றுக் கொண்டு பதிலாகத் திரும்பக் கொடுப்பதற்கான விஸ்கி தம்ளர்களையும் ஏந்தியபடி அலைந்த பேர்களையும் காண்கையில் இடம் மாறி வந்துவிட்ட உணர்வு தோன்றியது அவளுக்கு.

ஒதுங்கி நின்றவளிடம் வந்து, "கமான், பாரதி. இதில் பாதிப்பேர் வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள். நீ இப்படி ஒதுங்கி நிற்பதைப் பார்த்தால் தவறாக எண்ணக்கூடும். சும்மா பேருக்காவது ஒரு பெக் எடுத்துக் கொள் ஒன்றும் செய்யாது, வா" என்று அழைத்தான் யாழினியன்.

"சாரி. முடியாது" என்றாள் பாரதி கூருக்கமாக.

இந்த நேரடி மறுப்பில் சற்று திகைத்துவிட்டு, "ஒ.கே. உனக்குப் பிரியமில்லை என்றால் இது வேண்டாம். ஆப்பிள் பழச்சாறு கொண்டு வந்து தருகிறேன். அதையாவது குடி" என்று உள்ளே சென்று எடுத்து வந்தான்.

அதை ஒரு சிறு மடக்கு குடித்த பாரதிக்கு இது வெறும் ஆப்பிள் பழச்சாறு அல்ல என்று தோன்றி விடவும், அதற்கு மேல் அருந்தாமல் அப்படியே வைத்து விட்டாள்.

சுமார் ஒரு மணி நேரம் இப்படிக் கழிந்த பிறகு, "இப்போது வீணாகானம்" என்று அறிவித்தான் யாழினியன்.

அணைந்து அணைந்து எரிந்த வண்ண மின் விளக்கு அலங்காரம் மேடையைத் தேவலோகமாக மாற்றியது. கூடவே வந்து, "கடவுள் வாழ்த்து, மங்களம் போல முக்கியம் இல்லாதது களை வாசிக்க வேண்டாம், பாரதி. வர்ணமும் வேண்டாம். நீளமாய் அதை வாசித்துக் கொண்டிருந்தால் கேட்பவர்கள் தூங்கி விடுவார்கள். பாப்புலர் சினிமா பாட்டு இரண்டு வாசிக்க வேண்டும். உனக்காகத் தெரியாவிட்டால் என்னோடு சேர்ந்து பின்பாட்டு போல வாசித்து சமாளித்துக் கொள்" என்று அங்கே வைக்கப்பட்டிருந்த இரு வீணைகளில் அவனது வீணை முன் அமர்ந்தான் யாழினியன்.

மொத்தமாய் வீணை வாசித்த காலம் அரைமணி நேரம் இருக்கக்கூடும். திருப்தியற்ற மனநிலையோடு மிகவும் களைப்பாகவும் உணர்ந்தாள் பாரதி.

அவனது கண்ணசைவில் வேலையாட்கள் வீணைகளை எடுத்துச் சென்றனர்.

முத்து முத்தாய் துளிர்த்திருந்த வியர்வையைத் துடைத்தபடி நின்றிருந்தவளை அருகிலிருந்த அறைக்குள் அழைத்துச் சென்றான் யாழினியன். "சற்று நேரம் அந்த சோபாவில் அமர்ந்து ஓய்வெடு பாரதி. நான் அங்கே முட்டக் குடித்துவிட்டு உருளுகிறவர்களை கார் ஏற்றி அனுப்பிவிட்டு வருகிறேன்" என்றான்.

''நானும் கிளம்ப வேண்டும்''

''போகலாம். முதலில் விருந்தினரை அனுப்பிவிட்டு வந்ததும் நீ கிளம்புவதைப் பார்க்கலாம்'' என்று சென்றான் அவன்.

சுற்றிலும் சுவரில் மாட்டியிருந்த சிங்காரச் சித்திரங்களைப் பார்க்க மனமின்றி, கண்களை இறுக மூடிக் கொண்டு யோசித்தாள் பாரதி. இது பானைச் சோற்றில் பதம் பார்ப்பதற்கான ஒரு சோறு என்றால் வாழ்க்கை முழுவதும் இதை விழுங்குவது எப்படி?

வீட்டுக்குப் போனதும் கடவுள் வாழ்த்தில் தொடங்கி ஒரு முழுக்கச்சேரியும் வாசித்து விட்டுத்தான் படுக்க வேண்டும்.

யாழினியன் திரும்பி வந்து சேர வெகு நேரம் பிடித்தது.

அறைவாயிலில் அரவம் கேட்டுக் கண் திறந்து பார்த்த பாரதி சற்றே திடுக்குற்றாள். காரணம் யாழினியன் இரவு ஆடையில் இருந்தான். அத்தோடு கையில் இன்னும் ஒரு கிண்ணத்தை ஏந்தியிருந்தான்.

இரண்டையுமே கண்டு கொள்ளாததுபோலக் காட்டி, ''என் வீணை எங்கே யாழினியன்? நான் கிளம்ப வேண்டும்'' என்று எழுந்தாள் அவள்.

''உன் வீணையை நீ வந்த டாக்சியில் உன் வீட்டுக்கு அப்போதே அனுப்பி விட்டேனே'' என்றான் அவன்.

''ஏன்? நான் எப்படிப் போவது?''

''போக வேண்டாம். இரவு இங்கேயே தங்கிவிடு. நாளைப் பகல் மகாபலிபுரம் போய், பீச் ஓட்டலில் தங்கிவிட்டு அப்புறமாக உன் வீட்டுக்குப் போகலாம்'' என்று கூறி அவளை நெருங்கினான் யாழினியன்.

11

பாரதி உடனே பயந்து நடுநடுங்கிப் போனாள் என்று சொல்ல முடியாது. ஆனால் விரும்பத்தகாத இந்த சூழ்நிலையிலிருந்து அசிங்கமின்றி வெளியேறுவது எப்படி என்று யோசிக்கத் தொடங்கினாள் அவள்.

ஆனால் அதற்கு இடம்கொடாமல், ''ப்ளீ....ஸ் பாரதி. இன்றைக்கு நீ இங்கிருந்து போனாய் என்றால் உன்னோடு என் உயிரும் சேர்ந்து போய்விடும்'' என்று உருக்கமாய் வசனம் பேசினான் அவன்.

அவள் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் டீபாய் மேல் வைத்திருந்த கைப்பையை எடுத்து உள்ளேயிருந்த சிறு பர்சில் தேவையான பணம் இருக்கிறதா என்று பார்த்தபடி, ''வேறு டாக்சி வரவழையுங்கள் யாழினியன். எனக்கு வீட்டில் வேறு முக்கிய வேலை இருக்கிறது'' என்றாள் சாதாரணமாகவே காட்டி.

ஒரு கோணல் பார்வையுடன் ''இந்த நேரத்தில் வேறு முக்கிய வேலையா? அப்படி என்னம்மா முக்கிய வேலை?'' என்று எகத்தாளமாக வினவினான் அவன்.

அவனை நிமிர்ந்து பார்த்து, ''இந்த மாதிரி அரை குறையாக வாசித்து எனக்குப் பழக்கம் இல்லை. வீட்டிற்குப் போய் முழுமையாக கடவுள் வாழ்த்திலிருந்து மங்களம் வரை வாசித்து முடிக்க வேண்டும். வழியை விடுங்கள். நானாகவே டாக்சி பிடித்துக் கொண்டு போய்விடுகிறேன்'' என்று நந்தியாய் அசையாமல் நின்ற அவனைச் சுற்றிக் கொண்டு செல்ல முயற்சித்தாள்.

''எப்படிப் போவாயாம்?'' என்று சிரித்தான் யாழினியன். ''வீட்டிலிருந்து வெளியே செல்லக்கூடிய கதவுகளை எல்லாம்

பூட்டிவிட்டேன்'' என்றான் பெருமையாக. அவளது திகைப்பை ரசித்தபடி, ''என்ன பிகு பாரதி? எப்படியும் நாம் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள், எதற்காகக் காத்திருக்க வேண்டும்? என்னைக் கேட்டால் நாளைக்கே உன் துணிமணியை எடுத்துக் கொண்டு நீ இங்கேயே வந்து விடலாம். அப்புறம்....!!'' என்று கிண்ணத்தில் இருந்ததை ரசித்துப் பருகினான்.

''கேட்டால்தானே?'' என்றாள் பாரதி உதாசீனமாக. அவன் விடுக்கென நிமிரவும், ''மிஸ்டர் யாழினியன் தயவு செய்து இந்த மாதிரிப் பேச்செல்லாம் வேண்டாம். முதலில் யாரையாவது கூப்பிட்டுக் கதவைத் திறந்துவிடச் சொல்லுங்கள். நான் போகி றேன்'' என்றாள் நிதானத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு.

''யாரைக் கூப்பிடுவது? நம் கொஞ்சல் குலாவல்களுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்று எல்லா வேலையாட்களை யும் வெளியே அனுப்பி விட்டேன்'' என்று அவன் கொக்கரிக்கவும் முதல் தடவையாக பாரதி அதிர்ந்தாள்.

யாழினியனுக்கு கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர ஆள் வேண்டும். சிகரெட் லைட்டர் தவறிக்கிழே விழுந்தால் கூட அதைக் குனிந்து எடுக்க மாட்டான். வேலையாள் ஓடிவந்துதான் எடுத்துக் கொடுக்க வேண்டும். அப்படி ஒரு ஜபர்தஸ்து. இவன் வேலையாட்களை எல்லாம் அனுப்பிவிட்டு வீட்டையும் பூட்டிவிட்டான் என்றால் எந்த வழியிலும் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வதாக இருக்கி றான் என்றுதானே பொருள்!

இவனிடம் நல்லதனமாகப் பேசி, சமாளிக்க வேண்டும் என்று எண்ணி, ''பாருங்கள் மிஸ்டர் யாழினியன், நீங்கள் நினைக்கிற மாதிரி என்னால் நடந்து கொள்ள முடியாது. திருமணத்துக்கு முன் அதெல்லாம் தப்பு. ஒழுக்கக்கேடு. ஒழுக்கத்தை உயிராக மதிக்கும் படி வளர்க்கப்பட்டவள் நான்'' என்ற போது ''அப்படியா?!!'' என்று வெகுவாக ஆச்சரியப்பட்டான் அவன்.

கிண்ணத்தில் மிச்சமிருந்ததை ஒரே மடக்காக வாயில் ஊற்றிக் கொண்டு, கிண்ணத்தை விசிறி அடித்தவன், அவளை ஏற இறங்கப்

பார்த்துவிட்டுக் கேட்டான், ''அப்படி ஒழுக்கம் காக்கிறவள், எப்படியம்மா இருபது நாள் ஜீவானந்தனின் பண்ணை வீட்டில் அவனோடு கட்டிலில் புரண்டாய்? அப்போது இந்த உயிரான ஒழுக்கம் துரும்பு மாதிரித் தோன்றியதோ?'' என்றான் எகத்தாள மாக.

திகைப்பும் வேதனையுமாகத் தினறிப் போனாள் பாரதி. ''நான்... இல்லை... அப்படி ஒன்றும்... நடக்கவே இல்லை'' என்று திக்கினாள்.

''எப்படித் தெரியும் என்று ஆச்சரியமாய் இருக்கிறதா? முதலில் மறுத்தவள், திடீரென்று தானாகக் கூப்பிட்டுத் திருமணத் துக்குச் சம்மதம் சொன்னதே எனக்குச் சந்தேகம். அதிலும் 'முச்சந்தி'க்கு செய்தி கொடுக்கச் சொன்னாயே ஏன்? யோசித்து, இரண்டு மூன்று முன் தேதிப் பத்திரிகைகளை வாங்கிப் பார்த்தேன். விஷயம் வெளிச்சமாகி விட்டது... ஆனால் அந்த பரம்பரைப் பணக்காரன் உன்னை மணப்பான் என்று நீ முதலில் நினைத்தது தான் மடத்தனம். போகிறது விடு. நான் அந்த மாதிரி கவுரவம் பார்க்கிறவன் அல்ல. இயற்கை ரசிகன். இயற்கை வழி வாழ்கிற வன். பார், ஒரு மலரில் எத்தனை வண்டுகள் வேண்டுமானாலும் தேனருந்தலாம். அதே போல ஒரு வண்டும் எத்தனை மலரில் வேண்டுமானாலும் மதுவுண்ணலாம். ஒருவரை ஒருவர் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டால் நிறையப் பணம் சேர்த்து சுகமாக வாழலாம். இதுதான் என் கொள்கை. இப்போது கூட நீ ஜீவானந்த னோடு வாழ்ந்ததை நான் கண்டு கொள்ளவே போவதில்லை. நான் விரும்பும் போது நீ வந்ததால் அது எனக்குப் போதுமானது வா'' என்று அவள் கையைப் பற்றினான்.

அவன் அவளைத் தவறாக நினைத்தான் என்பதைவிட, அவனது இயற்கை வழி விளக்கத்தில் பாரதிக்கு குமட்டிக் கொண்டு வந்தது. இப்படி ஒரு கழிசடையை மணப்பதா? ச்சீ! இவனெல்லாம் ஓர் ஆண்பிள்ளை!

விசித்திரமான வகையில் அவன் வாயால் கேட்ட ஜீவானந்தனின் பெயர் அவளுக்குப் பலத்தை அளித்தது. பற்றியிருந்த கையை உதறிவிட்டு, அவனைச் சுற்றிக் கொண்டு அறையைவிட்டு வெளியே ஓடினாள்.

அவன் ஏளனச் சிரிப்புடன் அவளைப் பின் தொடர்ந்து வந்தான் ''எங்கேயடி ஓடிவிடுவாய்''

பின் தொடர்ந்த யாழினியனின் அசைவுகளை ஓரக் கண் பார்வையால் கவனித்தபடி, தப்பும் வழி தேடி அங்குமிங்கும் பார்த்தபடி விரைந்தாள் பாரதி. குடி விருந்து நடந்த ஹாலைத் தாண்டி, வாயிற்கதவை அடைந்து சந்தேகத்துக்குக் கதவுக் குமிழைப் பிடித்துத் திருகித் திறக்க முயன்றாள்.

சாவி கொண்டு பூட்டியிருந்த கதவைத் திறக்க இயலாமல் அவள் திரும்பவும் பேய் சிரிப்பு சிரித்தான் யாழினியன்.

அவள் முன்னர் சென்ற வழியாகவே திரும்பி அவனை நோக்கி வரவும், ''பரவாயில்லை. நீ புத்திசாலிதான். போக வழியில்லை என்றதும், அதற்கும் மேல் ''டிராமா போடாமல் வந்துவிட்டாயே'' என்று கர்வத்தோடு சிரித்தபடி கையை நீட்டினான் யாழினியன்.

அது மாலையில் விருந்து நடந்த ஹால். ஹாலில் பெரும் பகுதியை நிதானமாகக் கடந்து வந்தவள், சட்டெனக் குனிந்து அங்கிருந்த சிறு மேஜை மேல் இருந்த விஸ்கி பாட்டில் ஒன்றை எடுத்து மேஜை விளிம்பில் அடித்து, உடைத்தாள். உடைந்த பாட்டிலை உயர்த்திப் பிடித்தபடி யாழினியனை நெருங்கினாள்.

மின்னல் விரைவுடன் பாரதி செயல்பட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த முகத்திலிருந்த சிரிப்பு மறைய, பயத்துடன் ஓர் எட்டு பின்னடைந்தான் யாழினியன்.

''மரியதையாகப் போய் கதவைத் திற...ம்.''

ஒரு கணம். ஒரே ஒரு கணம்தான் யாழினியன் தயங்கியதும் 'ம்' என்ற அதட்டலும், அவள் முகத்திலிருந்த தீவிரமும் அவனை வேகமாகவே சென்று கதவைத் திறக்கச் செய்தன.

''ஒதுங்கி நில்'', என்று அவனைப் பணித்து விட்டுக் கதவை நோக்கி நடந்தாள் பார்வதி.

அது ஏசி ஹால். அதற்குச் சரியாக, விட்டுவிட்டால் தானாகவே சென்று சாத்திக் கொள்ளும் அமைப்புடையது அந்தக் கதவு. யாழினியன் திறந்த கதவை விட்டு விட்டு, பாரதியின் கட்டளைக்கிணங்க ஒதுங்கவும் கதவும் சாத்திக் கொள்ளத் தொடங்கியது.

ஒரு கையில் கைப்பையை வைத்திருந்த பாரதி, மறு கையிலிருந்த பாட்டிலை வீசிவிட்டு மூடிக்கொண்டிருந்த கதவைப் பிடித்த சில வினாடிகள் அந்தப் பாம்புக்கும் போதுமாயிருந்தது. பாய்ந்து சென்று, பாரதியைப் பற்றி விட்டான் அவன்.

ஜீவானந்தனைப் போல உயரமும் உறுதியும் கூடிய உடல் அமைப்பு யாழினியனுக்குக் கிடையாது. ஆனால் உடம்பைப் பேணுவதில் யாரும் அவனை மிஞ்ச முடியாது. உணவிலும் குடியிலும் விருப்பம் உள்ளவன் என்றாலும் அது உடம்பைப் பாதித்துவிடாமல் கவனமாயிருப்பான். ஹெல்த் கிளப், ஸன்பாத், மசாஜ் என்று எதையும் விடுவதில்லை.

இயற்கையாய் ஆண்களுக்கு உள்ள பலத்தோடு குடி தந்த வேகமும், பெண் வெறியும் சேர்ந்து அவனை அரக்கனாகவே காட்டின.

சில நிமிட்களாகவே சோர்ந்து, அதிலும் குறிப்பாக அன்று மனமும் உடலும் வெகுவாக ஒய்ந்திருந்த பாரதி தோற்று விடுவோமோ என்று அஞ்சத் தொடங்கினாள். இதற்குச் சாவு மேல் என்கிற எண்ணமும், ஜீவானந்தனின் நினைவும் தந்த பலத்தில் மட்டுமே போராடிக் கொண்டிருந்தாள் அவள். ஆனால் அதுவும் தான் எவ்வளவு நேரம் தாங்கும்?

யாழினியனின் வீட்டுக்குப் பாரதி செல்வதற்காக அமர்த்தப் பட்ட டாக்சி ஏற்கனவே அவர்கள் வீட்டுக்குப் பழக்கப்பட்டது தான். பக்க வாத்தியக்காரர்களை அவரவர் இடங்களில் இருந்து அழைத்துவர, கங்காதரன் எப்போதும் ஏற்பாடு செய்கிற வண்டி.

நன்றாகவே வீட்டோடு பழகிவிட்டிருந்த அந்தக் காரின் டிரைவருக்கு வீணையை மட்டும் திருப்பி அனுப்பிவிட்டு, பாரதி அங்கே தங்கியது உறுத்தல்தான். ஆனால் வீணை தந்து அனுப்பிய வன் அவளுடைய வருங்காலக் கணவனாக இருக்கையில் அவன் என்ன செய்ய முடியும்?

வீணையை வீட்டில் சேர்த்தவன், ஆறுமுகத்திடம் தன் மனதை விட்டுச் சொன்னான். ''ஏகப்பட்ட வெளி நாட்டுக்காரங் கப்பா. ''தண்ணி' மெய்யாவும் தண்ணிப்பட்ட பாடு படுது. பொண்ணு வரலை. வீணையை மட்டும் வீட்டில் குடுத்துடுன்னாரு மாப்பிள்ளை மனிசன். மனசு ஒத்துக்காம கொஞ்சம் நேரம் நின்று பார்த்தேன். நீ போன்னு சொல்றேனில்ல? அவளை நானே வீட்டில் கொண்டு விட்டிருவேன்னு அதட்டினாரு. கம்னு வந்திட் டேன். என்னமோ, போப்பா, பெரியவரு இருந்தா இந்தாளு கைல பொண்ணைக் கொடுப்பாரா?'' என்று வருத்தப்பட்டு விட்டுப் போனான்.

ஆறுமுகமும் கலங்கிப் போனான். சிறுவயதிலிருந்து பாரதி வளர, வளரப் பார்த்தவன் ஆயிற்றே.

பத்து, பத்தரை பதினோரு மணிவரை பொறுத்திருந்து பார்த்த வனுக்கு அதற்கு மேல் தாங்க முடியவில்லை. அவன் அறிந்த வரையில், 'அய்யா' போனபிறகு குடும்பத்து நன்மைகளில் அக் கறை காட்டிய ஒரே ஆளும், பொல்லாத சுயநலக்கார உறவினர்க ளிடமிருந்து அவனுடைய சின்ன எஜமானியைக் காத்து அழைத் துச் சென்றவனும், இப்போது ஏதேனும் பிரச்சினை என்றால் எந்த வேளை என்றாலும் என்னிடம் உதவிக்கு வரலாம் என்று உறுதி

கூறியிருந்தவனுமான ஜீவானந்தனுக்கு டெலிஃபோன் செய்தான் அவன்.

ஜீவானந்தன் சென்றபோது, பாரதி இயன்றவரை போராடிக் களைத்து ஓய்ந்து விட்டிருந்தாள்.

''இனிமேல் என்னடி செய்வாய்?'' என்று அவளைக் கைநீட் டிப் பற்றிய யாழினியன், திடுமெனக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த ஜீவானந்தனைக் காணவும் பேந்த விழித்தான்.

புதிய பலத்தோடு யாழினியனை உதறிவிட்டு, ''ஜீவா'' என்ற கதறலுடன் பறந்தோடி வந்து அவன் மார்பில் புதைந்தாள் பாரதி.

அவளை ஆறுதலாய் அணைத்து நின்ற ஜீவானந்தன், அவ ளைத் தாண்டிப் பார்வையை செலுத்தி யாழினியனை நோக்கி ''இங்கே வா'' என்று உத்திரவிட்டான்.

பெண்ணிடம் பலம் காட்டிய, பேதை, பயந்து பனிந்து அருகில் வந்து நிற்கவும், பாரதியை அணைத்துப் பிடித்திருந்த கரங்களில், வலது கையை மட்டும் விலக்கினான் ஜீவானந்தன்.

வினாடிக்குள், கையை முஷ்டியாக்கி விரைவுடன் மற்றவ னின் தாடையில் ஒரு குத்து விட்டான்.

தொப்பெனக் கீழே விழுந்து, ரத்தம் கசிந்த தாடையைக் கையில் ஏந்தி அவன் அச்சத்துடன் நோக்கவும், ''இது வெறும் 'சாம்பிள்' மட்டும். இனிமேல் பாரதி பக்கம் உன் கை நீண்டால், அதன் பின் வீணை மீட்ட உனக்கு விரலே இருக்காது. புரிகிறதா?'' என்றான் கடுமையான குரலில் ஜீவானந்தன்.

அவன் தலையாட்ட பழைய குரலிலேயே, ''இன்னும் ஒன்று. முன்பு பத்திரிகைகளுக்கு நீ தந்த அறிவிப்பை ரத்து செய்து - முன்பு தவறாகக் கருதி அறிவிப்பு கொடுத்ததற்கு வருந்துவதாக மறு அறிவிப்பு ஒன்று நாளை.... குறைந்த பட்சமாய் நாளனன்று பத்திரிகைகளில் வர வேண்டும். இதுவும் புரிகிறதில்லையா?'' என்றான் ஒரு வெறித்த பார்வையுடன்.

மீண்டும் யாழினியன் தலை வேகமாக ஆடியது.

''நல்லது. இனிமேல் பாரதி என்று ஒரு பெண் இருப்பதையே நீ மறந்து விட்டால் மேற்கொண்டு உனக்கு எந்தத் துன்பமும் நேருவதற்கில்லை. இதுவும் நன்றாகவே புரியும் என்று நினைக்கி றேன். நான் சொன்னதெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கட்டும் - எப்போதும்'' என்றவன் பாரதியை அணைத்தபடியே வெளியே றிக் கதவை இழுத்து சாத்தினான்.

அதன் பின்னரும் சற்று நேரம் பொறுத்தே யாழினியனுக்கு ஒழுங்காக மூச்சு வந்தது. பெருகி வந்த வலியோடு புசுபுசுவென்று புடைத்த தாடையை மெல்லத் தொட்டுப் பார்த்தான். அழுகை வந்தது. 'பாரதி, பாவி, பழிகாரி, உனக்கு ஒரு கும்பிடு. நீ இருக்கும் திக்குக்கு ஒரு கும்பிடு' என்று எண்ணியபடி மெல்ல எழுந்து, தள்ளாடி நடந்து, டாக்டருக்கு டெலி.போன் செய்யப் போனான்.

காரில் செல்லும்போது கூட, பாரதி ஜீவானந்தனை ஒண்டிக் கொண்டே தான் அமர்ந்திருந்தாள்.

பாரதியின் வீட்டை அணுகியதும், உள்ளே செல்ல முயலா மல், காரை ஓரமாகவே நிறுத்தி, லேசாக 'ஹார்ன்'' அடித்தான் ஜீவானந்தன்.

காத்துக்கிடந்தவன் போல ஆறுமுகம் ஓடோடி வந்தான். பாரதியைக் காணவும் முகம் மலர்ந்து கார்க் கதவைத் திறக்கக் கை நீட்டினான்.

''வேண்டாம் ஆறுமுகம்'' என்றான் ஜீவானந்தன். ''உன் சின்னம்மா பத்திரமாக இருக்கிறாள் என்று உனக்குத் தெரிவிக்கத் தான் முதலில் நாங்கள் இங்கே வந்ததே. பாரதி இன்று இரவு ஒன்றுமே சாப்பிடவில்லையாம். ஓட்டலில் ஏதாவது சாப்பிட வைத்து, திரும்ப அழைத்து வருகிறேன். நிம்மதியாய் இரு'' என்று கூறி மீண்டும் காரை எடுத்தான்.

''விஷயம் எப்படி எனக்குத் தெரிய வந்ததென்பது புரிந்திருக் கும் என்று நினைக்கிறேன்...''

அவள் தலையாட்டவும், ''யாரை நம்பலாம், நம்பக் கூடாது என்பது பற்றி சில சமயம் வேலைக்காரர்களுக்குத் தெரியும் அளவு வீட்டினருக்குத் தெரிவதில்லை'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

அவளும் நம்பத்தான் செய்தாள். ஆனால்... கண்களில் பெருகி வழிந்த கண்ணீரை, இரவின் போர்வையில் அவன் அறியாமல் மெல்லத் தன் விரலால் சுண்டினாள் பாரதி.

சுத்தத்துக்கும் சுவைக்கும் பெயர் பெற்றிருந்த ஓர் இரவு உணவு விடுதியில் ஒரு பெரிய பீட்சாவும், இரண்டு பன் பட்டர் ஜாமும் வாங்கிப் பின் சீட்டில் வைத்துவிட்டு மீண்டும் காரைக் கிளப்பினான் அவன்.

பாரதியின் வீட்டுத் திருப்பத்தில் உள்ள மரத்தடியில் காரை நிறுத்தி இஞ்சினை அணைத்தான்.

திரும்பி அமர்ந்து, ''என்ன விஷயம் பாரதி, ஏன் அழுதாய்?'' என்று விசாரித்தான்.

அவள் பேசாதிருக்கவும், ''சொல்லு பாரதி. நீ சொன்னால் தானே எனக்கும் விஷயம் தெரியும்? முதலில், பண்ணை வீட்டிலி ருந்து நீ ஏன் கிளம்பினாய்? அபிநயா ஏதாவது சொன்னாளா? ஆனால், அதற்கு இரண்டு நாள் பொறுத்துத் திடீரென்று நீ கிளம்ப வேண்டியதில்லையே! அதுவும், வந்ததும் வராததுமாக இந்த அற்ப நாயுடன் திருமணம் என்று... ப்ளீஸ் பாரதி, நம் இருவரின் எதிர்காலத்துக்காகவும் தான் கேட்கிறேன்... புரியவில்லையா? சொல்லு'' என்றான் குரலில் அழுத்தம் மிகுதிபட.

பாரதியும் ஓய்ந்து விட்டிருந்தாள். மறுக்கவோ, மறைக்கவோ வலுவற்று, அந்த பத்திரிகை சமாசாரம் முழுதையும் அவன் முன் வைத்தாள்.

''என்னது? என்ன பத்திரிகை அது? முச்சந்தியா? அதற்குப் பெயர். பத்திரிகையா? வெறும் குப்பை'' என்றான் ஜீவானந்தன். ''பணம் கொடுத்தால் என்ன வேண்டுமானாலும் எழுதுவார்களே

அதில். எழுதச் சொல்லிச் சிலரும், எழுதாமல் இருப்பதற்காகப் பலரும் கொடுக்கும் பணத்தில் வசதியாக வாழ்கிறவர் அந்தப் பத்திரிகை நடத்துபவர். இருந்திருந்து அந்தக் குப்பையைப் படித்து விட்டா, நீ.... சேச்சே. என்ன பாரதி, நீ?'' என்றான் அவன் வருத்தமும் கோபமுமாக.

''இந்தப் பத்திரிகை இப்படி என்று எனக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் பாரதி. 'ஹிந்து, தவிர நான் வேறு செய்திப் பத்திரிகைகள் படித்ததில்லை... ஜீவா. அதில் அரசியல், அரசியல் வாதிகளின் பொது வாழ்வு பற்றி எழுதுவது போல இந்தப் பத்திரிகையில் மனிதர்களின் சொந்த வாழ்வு பற்றி எழுதுவார்கள் போல என்று நினைத்தேனே தவிர இது பொய்யாக இருக்கக்கூடும் என்று நான் நினைக்கவே இல்லையே!''

ஒரு வேகப் பெருமூச்சு விட்டு, ''மூன்று குரங்குகள் மாதிரி உன்னை நன்றாகத்தான் வளர்த்திருக்கிறார்கள் உன் பெற்றோர். கலை உலகம் தவிர வேறு ஒன்றுமே அறியாமல்! போகட்டும். இப்போதாவது தெரிந்து கொள். அதில் எழுதி இருந்தது எல்லாம் முழுப் பொய்....'' என்றான் ஜீவானந்தன்.

''நல்லவேளை!'' என்று ஆசுவாசப் பெருமூச்சுடன் தொய்ந்த பாரதி மீண்டும் நிமிர்ந்தாள். ''பின்னே...?'' என்று சற்று தொலைவில் இருந்து வந்த தெருவிளக்கின் ஒளியில் அவன் முகத்தைப் பார்க்க முயன்றாள்.

''பின்னே என்ன?''

''அவள்... அந்த அபிநயா அவளோடு தொட்டுப் பழகினீர்களே?''

''அது உன்னிடம் பொறாமையைத் தூண்டுவதற்காக. ஆனால், நன்றாக யோசித்துச் சொல்லு பாரதி. எப்போதும் அவளை நானாக எப்போதேனும் தொட்டேனா?'' என்று கேட்டான் அவன்.

சற்று யோசித்துவிட்டு ''இல்லை'' என்று ஒத்துக்கொண்டாள் அவள்.

''ஆனால் பொறாமையை ஏன் தூண்டவேண்டும்?''

''பொறாமை உன் பெற்றோர் நிலையை விரைவாக மறக்கடிக்கும் என்று எண்ணினேன். பாரதி. பெற்றோர் நினைவை என்றால் அவர்களைப் பற்றிய ஞாபகத்தை அல்ல. அவர்களை இழந்த வேதனையைத்தான். அதிலிருந்து நீ விரைவாக மீண்டால்தான்....''

''மீண்டால்தான்...?''

''மீண்ட பிறகுதான் நம் திருமணம் பற்றித் தீவிரமாக யோசிக்கத் தொடங்குவாய் என்று எதிர்பார்த்தேன். ரொம்பவும் சுயநலமாகத் தோன்றுகிறதா, பாரதி? ஆனாலும் நானும் எவ்வளவு காலம்தான் பொறுத்திருப்பது? அதுவும் அவ்வளவு கிட்ட வந்த பிறகு ஒன்றுமே இல்லாதது போல நடந்து கொள்வது எனக்கு சிரமமாக இருந்தது. தெரியுமா?

அவள் புரியாது விழிக்கவும், ''பாரதி, உன் பெற்றோர் எங்கள் வீட்டுக்கு வந்தது அன்று முதல் முறையாக அல்லம்மா. நீ கச்சேரிக்கு மறுத்த பிறகு ஒத்துக் கொண்ட விதத்தில் அவர்களுக்கு ஏதோ தோன்றியிருக்கிறது. உன் போக்கில் ஏதோ வித்தியாசமாக உணர்ந்து, என் பெற்றோரை நம் திருமண விஷயமாய் அணுகி இருக்கிறார்கள். பெற்றவர்கள் இல்லையா? என் அப்பா, அம்மாவுக்கும் உள்ளூர சந்தேகம். அம்மா உன்னை ஏற்கெனவே கச்சேரிகளில் பார்த்தவர்கள். அடக்கம் என்று 'ஷோ' காட்டாமல், அதே சமயம் எந்தவித அலட்டலும் இல்லாமல் நீ இயல்பாய் வாசிப்பதை உயர்வாகப் பேசுவார்கள். எனவே, என் பெற்றோருக்கும் விருப்பம்தான். இரு வீட்டுப் பெரியவர்களும் கிட்டத்தட்ட பேசிமுடித்த விஷயம். உன் சம்மதத்தை நேரடியாகக் கேட்பது மட்டும்தான் பாக்கியாக இருந்தது. அதனால்தான் பண்ணை வீட்டுக்கு உன்னை அழைக்க என் பெற்றோர் சம்மதித்ததும்.

''ஆனால் இடையில் இடி விழுந்தது போல இந்தத் துயரம் நேர்ந்து விட்டது. ஒய்ந்து கிடந்தாயே, அன்று உன்னை அள்ளி அணைத்து ஆறுதல் படுத்த ஆசைதான். பொறுப்பேற்றுக் கொள்ள வும்தான். உரிமையோடான பொறுப்புக்கு ஆசை. ஆனால், உன் பெற்றோர் பிரியப்பட்ட விவரம் எப்படி உனக்கு நிரூபிப்பது? அதைப்பற்றிப் பேசினாலே உன் 'ஒட்டுண்ணி' உறவினர் என் குடும்பத்துக்கல்லவா அந்தப் பெயர் சூட்டுவார்கள்? உன் பணம் வந்துதான் இங்கே நிறைய வேண்டும் என்று எனக்கோ, என் பணம் வந்தால்தான் உன்னால் சாப்பிட முடியும் என்ற நிலைமை உனக்கோ இல்லை என்று இவர்களுக்கு யார் எடுத்துச் சொல்வது? சொன்னால் தான் ஒப்புவார்களா? இல்லாததையும் பொல்லாததை யும் சொல்லி உன் மனதைக் கெடுத்துவிட மாட்டார்களா?

''அப்போதும் நீயும் அவர்கள் மடியைத்தான் நாடினாய்.... அவர்களது சுயரூபம் தானாக உனக்குத் தெரிய வரட்டும் என்று கையைக் கட்டிக் கொண்டு காத்திருந்தேன்...''

எதிரே இருளை வெறித்தபடி அவன் சொல்லச் சொல்ல, விழிகள் அகல அவனது பக்கவாட்டு முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் பாரதி. அவன் பேசி முடித்த பிறகும் அவளது பார்வை அகலவில்லை. இவன் அவளுக்காக வருந்தி, அவளுக் காக ஏங்கி, அவளுக்காக யோசித்து.... என்ன எல்லாம் செய்திருக் கிறான்!

கண்கள் கனிய, நெருங்கி, அவன் கன்னத்தில் லேசாக முத்தமிட்டு அவன் தோளில் உரிமையோடு சாய்ந்து கொண்டாள் பாரதி. திரும்பி அவளை வாகாக அணைத்து, அவளது உச்சியில் இதழ் பொருத்தினான் ஜீவானந்தன்.